Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 18.00

දිනමුරසු වාරමලර් ஜூலை 14 - 20, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 622

## பாதாள குழுக்களும் விரியும் பயங்கரமும்

## புலிகளின் புதிய வியூகம்

சென்ற வாரத் தொடர்ச்சி....

## அமீரின் புதல்வர்களுக்கு எதிராகப் பயங்கரச் சதி



பூஜாவைப் புரட்டிய புதுச் சரக்கு

சினிமா

தமிழ் சினிமா நட்சத்திரங்களின் முகவரிகள்

## ஆண் மலட்டுத் தன்மைக்கு ஆயுர்வேத மருந்து

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்



## ஆறுமுகநாவலர் அருள் வாக்குகள்

மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் அல்லது சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடுதலே விரதமாகும்.

ஒருவருக்குத் தம்மோடு தொடர்புடையவராய் தமக்கு இனியவராய் - உள்ளவரிடத்தே நிகழும் 'உள்ள' நெகிழ்ச்சியே அன்பாகும்.

நித்தியமும், நியமமாக ஆலய தரிசனம் செய்ய இயலாதவர்கள் சோமவாரம், மங்களவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாசப் பிறப்பு, சூரிய கிரகணம், சந்திர கிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயக சதுர்த்தி, விநாயக சஷ்டி, கந்தசஷ்டி முதலிய புண்ணிய காலங்களிலாயினும் அவசியம் தரிசனஞ் செய்ய வேண்டும் என ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் அருள்வாக்கு வழங்கியுள்ளார்கள்.

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர்- 06.

## சோதனையின் ஜெயம்

சோதனைகளில் ஜெயம் பெறுவது எப்படி? சோதனைகளே எனக்கு வரக்கூடாது என்று ஜெபிக்காமல், சோதனையை மேற்கொள்ள பெலன் தாரும் ஆண்டவரே என்று ஜெபிக்கவேண்டும். கிறிஸ்துவே சோதனைகளுக்குள்ளாகக் கடந்து சென்றார். அவர் நம்மைப் போலவே சோதிக்கப்பட்டும் பாவமில்லாதிருந்தார். சோதனையின் மூலம் நமக்கு ஒரு பெருத்த ஆசீர்வாதம் உண்டு. யாக்கோபு சொல்கிறார் : சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கின பின்பு, கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான். (யாக். 1:12). கிறிஸ்துவின் மேல் நாம் வைக்கின்ற அன்பு சகல சோதனைகளையும் பொறுமையாய்ச் சகிக்க நமக்குப் பெலத்தைத் தரும். பயங்கர சோதனைகளால் தான் ஆதித் திருச்சபை வளர்ச்சி அடைந்தது. பெலன் கொண்டது. அன்பானவர்களே, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். (ரோ. 5:3) "கலங்காதீர்கள். சோதனையோடு தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் தேவன் உண்டாக்குவார்." (1கொர் 10:13)

ஆர். பாலசந்திரன், கந்தப்பளை.

## இச்சையை அடக்கி இறை வழி நடக்க வேண்டும்

இன்று மனிதன் மதுபானங்களுக்கும், போதைப் பொருள்களுக்கும் அடிமையாகி சரீர இச்சையில் சல்லாபித்துக் கொண்டிருக்கின்றான்.

இதனால்தான் மனிதர்களில் அனேகர் இம்மையிலும் துன்புற்று, மானமிழந்து மதிகெட்டலைந்து, மறுமையிலும் கொடிய நரகிற் போய்ச் சேருகின்றனர்.

அல்லாஹ்வின் நேரிய வழியை விட்டு தனது மனோ இச்சைகளைப் பின்பற்றி நடப்பவனைவிட, வழி தவறியவன் உண்டா? இத்தகைய அக்கிரமச் செயல் புரிவோருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுவதில்லை.

(அல்குர் ஆன் 28 : 50)

இந்த அல்குர்ஆன் வசனத்திலிருந்து எல்லாவற்றிற்கும் மேலான மனிதனை வழி கெடுப்பது இச்சை என்பது எமக்குப் புலனாகிறது அல்லவா?

ஆகவே, நாம் கீழ்த்தரமான உணர்வுகளுக்கு அடிமையாகி அல்லாஹ்வின் கட்டளையை மறந்து அவனியில் வாழாமல் இச்சையை அடக்கி இறைவழி நடக்க வேண்டும்.

-எம்.சீ.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.619



பரிசுக்குரிய கவிதை

### நாட்டு மிருகங்கள்......

எந்த மிருகத்தையும்
அணைக்கத் தயார்!
ஆயுதங்களை
அணைத்துக் கொண்டிருக்கும்....
மனித,
மிருகங்களைத் தவிர

-யூ.எம்.முனீர்,
நிகொள்ள.

## கவிதைப் போட்டி இல.622



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 20.07.2005

கவிதைப் போட்டி இல.622
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### நாய்க்கும் அடையாள அட்டை

அதர்மம் தலைவிரித்தாடுகிறது
தேசத்தில்
நாய்களுக்குக்கூட
நடுதெருவுக்குப் போகமுடியாது
ஆர்ப்பாட்டம்
நாய்களுக்கும் இனிதேவை
அடையாள அட்டை.

-எஸ்.பி.பாலமுருகன்.

### ஐயறிவே மேல்

விஞ்ஞானம் என்ன.....
விந்தைகள் என்ன......
நன்றி என்பது - இன்று
நாய்களைத் தவிர
நம்மிடம்
இல்லையே!

-சீனிமுஹம்மது மீராமுகைதீன்,
ஏறாவூர்.

### நெருக்கம்

தோற்றத்தால் வேறுபட்ட - இவர்கள்
கூட இவ்வளவு நெருக்கமாயிருக்க
ஒரே தோற்றத்தவரான நாங்களோ
நெருக்கங்களை தொலைச்சு
பல நாட்களாச்சு!

-ரெ.பி.மரியடினேசன், மன்னார்.

### வேற்றுமை

"வேறுபட்ட நாமிருவர்
ஒற்றுமையாய்ச்
சேர்ந்திருக்க
(அறிவால்)
ஒன்றுபட்ட மனித குலம்
இரண்டுபட்டு
நிற்பதென்ன?"

-மூமீன் முஹம்மது றிஸ்மி,
அல்லைநகர் - 05.

### என்ன பயன்

மனித நேயத்திற்கு
மரண தண்டனை
கொடுத்துவிட்டு
மிருக நேயம்
காத்து
என்ன பயன்?

-அ.கா.மு.றிஸ்வின்,
மூதூர் - 01.

### நாய்ப் பாணி

நாயிடமிருந்து
கற்றுக் கொண்டது
நன்றி மட்டுமல்ல
தலை மயிர் சீவும்
பாணியுந்தான்!

-அ.சந்தியாகோ, கண்டி.

### "நன்றியின் நாயகன்!" .....

"நன்றியின் நாயகன்!
ஐந்தறிவுள்ள
பாதுகாப்பு அதிகாரி!
உப்பிட்டவரை -
உயிருள்ளவரை...
நினைப்பது!
உயிரையும்
கொடுப்பது!
நன்றி கெட்ட
மனிதர்களைவிட
மிக மிக,
மேலானது!"

-கோட்டைமுனை ஏ.வாஹிட்,
ஏ.குத்துஸ், பதுளை.

### மடக்கிவிடுவார்கள்

ஏ மோப்ப நாயாரே
இங்கு நடக்கும்
மர்மக் கொலைகளை
கண்டு பிடிக்கவா
வந்திருக்கிறீர்
கவனம் உமக்கும்
சில இறைச்சித்
துண்டுகளைப் 'பே' காட்டி
மடக்கி விடுவார்கள்
இங்குள்ளோர்.

-எஸ்.பி.பி.கணேஷ், கொழும்பு - 02.

### இறந்திருப்பாய்...!

வாலை ஆட்டமட்டும் உனக்குத்
தெரிந்ததினால் இன்று வாழ்கின்றாய்
வாயைத் திறந்து எதிர்க் கருத்தை
கூற முயன்றிருந்தால் என்றோ
இறந்திருப்பாய்.

-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### நன்றி

நண்பனும்
பகைவனாகலாம்!
அன்னையும்
அன்பை மறுக்கலாம்!
ஆனால்
இந்த நாய் இனம்!
என்றுமே
நன்றி மறப்பதில்லை!

-க.சுமால்தீன், ஏறாவூர் - 03.

## உங்கள் பக்கம்

### விஸ்ட்வைக் வீதியின் அவல நிலை

கொழும்பு - 15, மட்டக்குளி விஸ்ட்வைக் மைதானத்தில் 143 பலகைக் குடிசைகள், சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் தற்காலிகமாகச் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் கூடாரங்களாக இருந்தவைகளைப் பலகைக் குடிசைகளாகச் செய்து கொடுத்துள்ளனர்.

இவர்களுக்காக மலசல கூடங்கள், நீர் வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இவர்கள் மலசலகூடங்களை ஒழுங்காகச் சுத்தமாக வைத்திருக்கத் தவறிவிட்டனர். இப்பொழுது இந்த மலசல கூடங்கள் நிரம்பி வழிந்து இப்பகுதி துர்மணம் வீசுகிறது. குப்பை கூழங்களைப் பாதையில் கொட்டுகின்றனர். இதனால் விஸ்ட்வைக் வீதி நாற்றம் எடுத்துள்ளது. எனவே பாதையில் செல்லும் போது மூக்கைப் பொத்திக்கொண்டுதான் செல்லவேண்டும். அதேவேளை, விஸ்ட்வைக் வீதியில் நீர்க்குழாயும் பழுதடைந்துள்ளது. பாதையில் அழுக்கு நீரும் தேங்கிக் கிடக்கின்றது. இதனால் பாதசாரிகள் பெரும் அசௌகரியத்துக்குள்ளாகின்றனர். நீண்ட நாட்களாக இக் குறை இருந்து வருகின்றது. எனவே நகர சபையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கூடிய கவனம் செலுத்தி மலசல கூடங்களைத் திருத்தி அமைத்துக் கொடுக்க வேண்டும்.

-ஏ.எஸ்.எம்.ரவூப்,
கொழும்பு - 15.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

## வாசகர் சாலை




### தினமுரசின் பிரிய வாசகன் எழுதுவது

தொடர்ந்து 10 ஆண்டு காலமாக தினமுரசைப் பார்த்து வருகிறேன். பல பயனுள்ள தகவல்களைத் தரும் ஒரே பத்திரிகை தினமுரசு என்பதில் ஆனந்தம் அடைகிறேன். பல எதிர்ப்புக்களைச் சந்தித்தாலும் வீறுநடை போடும் உன் சேவை தொடர என் வாழ்த்துக்கள்.

பிரிய வாசகன்

### தாமதமின்றி பல செய்திகளைத் தரும் தினமுரசே!

கடல் கடந்து சென்றாலும்
நாட்டு நடப்புக்களை
அறிந்து கொள்வதில்
ஆர்வம் அதிகம் எனக்கு.
அதை உன்னிடத்தில்
அறிய வைக்கும் உன்
சேவை தொடர
என் வாழ்த்துக்கள்.

அன்பு வாசகன்
எஸ். மதுகரன்,
அமெரிக்கா.

### வளர்க முரசே!

சூடு - சுவை -
சுவாரசியம் நிறைந்த
முரசே! இது அத்தனையும்
உன்னில் நிறைந்துள்ளது
என்பது உண்மையிலும்
உண்மை வார வாரம்
வித்தியாசமான
ஆக்கங்களையும்
செய்திகளையும் சுமந்து
வரும் உமது பணி
தொடர என் வாழ்த்துக்கள்

நன்றி
வாசகி சித்ரா,
சிலாபம்.

### அன்பின் முரசே!

இம்முறை உனது பொலிவு
அதிகரித்திருக்கிறது.
சினிமா பகுதியிலும்
முகப்பின் பக்க
வடிவமைப்பிலும் நேர்த்தி
காட்டுகின்றாய். மேலும்
லேடிஸ் ஸ்பெஷல்,
சினிமாச் செய்திகள் சூப்பர்
மாறுபட்ட செய்திகளைச்
சுமந்து வரும் உனது
தைரியத்தை
பாராட்டுகிறேன்.

பிரியமுடன்,
சாரங்கன், மட்டக்களப்பு.

### வேண்டும் உன் சேவை

பத்திரிகை தர்மம் என்று
பறைசாற்றும்
பத்திரிகைகளுக்குச்
சவாலாக
அமைந்திருக்கிறது முரசு!
உள்ளதை உள்ளபடி
உரைக்கும் அதன்
பாணியே தனி எதையும்
மறைத்தோ, சிதைத்தோ
பக்கச் சார்பாகவோ இன்றி
உண்மையை ஒளிவு
மறைவின்றி உறுதியுடன்
தரும் முரசின் ஒப்பற்ற
சேவை நிச்சயம்
எமக்குத்தேவை

மனோ
மாத்தளை

# புலிகள் செய்வது அரசியல் வேலையா? ஆயுத வேலையா?

## ஒப்பந்த மீறலைப் பாதுகாக்கும் நிர்ப்பந்தம் எமக்கு மட்டுமில்லை - இராணுவம்

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் வேலை செய்வதற்காக ஐந்து சதவீதமான புலி உறுப்பினர்களே தமது இயக்க அடையாள அட்டைகளை இராணுவச் சோதனைச் சாவடிகளில் காட்டி உள்ளே வருகின்றனர். ஏனைய 95 சதவீதமான புலி இயக்க உறுப்பினர்களும் தம்மை இனம் காட்டிக்கொள்ளாமல் தேசிய அடையாள அட்டைகளைக் காட்டி அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் நுழைந்து விடுகின்றனர். இவர்கள் அனைவரும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் வேலைகளில் ஈடுபடுவதில்லை. மாறாக, மாற்றுக்கருத்துக் கொண்டவர்களையும், புலனாய்வுப் பிரிவினர்களையும் சுட்டுத் தள்ளும் வேலைகளிலேயே ஈடுபட்டு வருகின்றனர் என்று வட பகுதி இராணுவப் பிரிவைச் சேர்ந்த பேசவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் பயணம் செய்யும் புலி இயக்க உறுப்பினர்களுக்கு இராணுவப் பாதுகாப்பு அளிப்பது தொடர்பாகத் தமது தீர்க்கமான பதிலை இரண்டு வார காலத்திற்குள் அரசாங்கம் வழங்கவேண்டும் என்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் விதித்த நிபந்தனை தொடர்பாகக் கேட்டபோதே, அந்த இராணுவ அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பஸ் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த 40 புலி இயக்க உறுப்பினர்களைக் குறிவைத்து வெலிகந்தையில் நடத்தப்பட்ட கிளைமோர் குண்டுத் தாக்குதலையடுத்து தமிழ்ச்செல்வன் இந்த எச்சரிக்கையை விடுத்திருந்தார். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பயணம் செய்யும் புலிகளுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய எந்தக் கடப்பாடும் இராணுவத்திற்குக் கிடையாது. அரசு - புலி என்ற இருதரப்புக்கும் நம்பிக்கையைக் கட்டி எழுப்பும் நோக்குடனேயே இவ்வாறு பாதுகாப்பை வழங்கி வந்தோம் என்றும் அந்த அதிகாரி கூறினார். புலி இயக்க உறுப்பினர்களுக்கு அரசாங்கம் உரிய பாதுகாப்பு வழங்கத் தவறினால், பாதுகாப்புப் பொறுப்புகளைப் புலி இயக்கமே மேற்கொள்ளும் என்று தமிழ்ச் செல்வன் விடுத்த எச்சரிக்கை குறித்துக் கேட்ட போது, "இது வெறும் அர்த்தமற்ற மிரட்டல்" என்றார் அந்த இராணுவ அதிகாரி. யுத்த நிறுத்த ஒப்பந்த ஷரத்துகளின்படி புலிகள் ஆயுதங்களோடு அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடமாட முடியாது. அப்படி அவர்கள் நடமாட முனைந்தால் அவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துவோம். இது குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் அறிவிப்போம் என்றார் அந்த அதிகாரி. கடந்த மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட யுத்த நிறுத்தக் காலத்தில் சுமார் முன்னூறுக்கு மேற்பட்ட மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும், புலனாய்வுப் பிரிவினரையும் புலிகள் சுட்டுக் கொன்றிருக்கின்றனர். அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் அரசியல் வேலைக்காக வந்தவர்களும், தாக்குதல் நோக்கோடு மக்களின் போர்வையில் உள்ளே நுழைந்த புலிகளுமே இவற்றிற்கான சூத்திரதாரிகள் ஆவர். இது அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல்கள் எனவும் அவர் கூறினார்.

## இரத்தினபுரி ஆலயங்களுக்கு நிதியுதவி



நாடளாவிய ரீதியில் இந்து மக்களின் வழிபாடுகளுக்கு முழுமையான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில், கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சரும் மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் கௌரவ அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு நடவடிக்கைகளில் ஒரு கட்டமாக இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 27 இந்து ஆலயங்களின் புனரமைப்புப் பணிகளுக்காக எட்டு இலட்சம் ரூபா நிதி அண்மையில் அந்த ஆலயங்களின் நிர்வாகக் குழுப்பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது. நீதி, நீதி மறுசீரமைப்பு அமைச்சர் ஜோன் செனவிரத்தின காசோலைகளைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். மரமுந்திரிகை கூட்டுத்தாபனத் தலைவர் எஸ்.தவராஜா, இந்து கலாசார அமைச்சின் ஆலோசகர் சட்டத்தரணி செல்வி மகேஸ்வரி வேலாயுதம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

## சேதுத்திட்டம் பற்றி இம்மாதம் பேச்சுவார்த்தை

சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள பிரச்சினைகள் குறித்து இரு நாடுகளின் சம்பந்தப்பட்ட அமைச்சுப் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். அடுத்த இரு வாரங்களுக்குள் இரு சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடைபெறவுள்ளன. இத் திட்டத்தினால் ஏற்படக்கூடிய சூழல் பாதிப்பு, கடல்வள மற்றும் கப்பல் போக்குவரத்துப் பிரச்சினைகள் குறித்தும் இக் கலந்துரையாடல்களின்போது ஆராயப்பட வுள்ளன. கடந்த ஜனவரி மாதம் இரு நாடுகளையும் சேர்ந்த தொழில்சார் நிபுணர்கள் சந்தித்துப் பேசிய பின்னர் அமைச்சு மட்டத்திலான ஆய்வுக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.



மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து ஐ.தே.க. ஏற்பாடு செய்த மக்கள் பேரணி கடந்த 12ஆம் திகதி வெள்ளவத்தையை அண்மித்தபோது எடுக்கப்பட்ட படம் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது பாரியார் மைத்ரேயியும் காணப்படுகின்றனர். ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

## பரபரப்பை ஏற்படுத்திய பத்திரிகையாளர்

பிரபல இடதுசாரி செயற்பாட்டாளரும் பத்திரிகை ஆசிரியருமாக விளங்கி, தமிழ் சமுதாயத்தின் விழிப்புக்கு தன்னாலான பங்களிப்புகளை வழங்கி வந்த அந்தனிசில் அவர்களது மறைவையொட்டி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சரும் மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார். எனது நெருங்கிய குடும்ப நண்பரான அந்தனிசில் இந்தியாவிலிருந்த போது, ஈ.வே.ரா.பெரியாரின் 'நாத்திகம்' பத்திரிகையில் துணை ஆசிரியராகக் கடமையாற்றியவர். அக்கால கட்டத்தில் 'வத்திக்கான் போப் முதல் வடக்கன் பாதிரிவரை' என்ற கட்டுரைத் தொடரை எழுதி (பின் அது புத்தகமாக வெளிவந்தது.) பெரும் பரபரப்பையே உண்டு பண்ணினார். அதன் பின்னர் இலங்கைக்கு வந்த அவர், தீப்பொறி என்ற வாரப் பத்திரிகையை ஆரம்பித்தும் சமூகத்தில் பரபரப்புக்குரிய ஒரு பத்திரிகையாளராகவே செயற்பட்டு வந்தார் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். சிறந்த கதகளி நாட்டியக் கலைஞரும், மல்யுத்த வீரருமாகத் திகழ்ந்த அந்தனிசில் அவர்கள், 'பாதை தெரியுது பார்' எனும் தென்னகத் திரைப்படத்திலும் பாத்திரமேற்று நடித்தவர் என்றும் அத்துடன் தனது இறுதி காலகட்டத்தில் கூட எழுத்துப் பணியை அவர் கைவிடவில்லை' என்றும் தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## நோர்வேயில் புலிகளுக்கு நிதி ஒஸ்லோ பத்திரிகை தகவல்

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து நோர்வேயில் வாழும் தமிழர்களிடமிருந்து மிரட்டிக் 'கட்டாயத்தின் பேரில் மாதாந்த அடிப்படையில் நிதி சேகரிக்கப்படுவதாக ஒஸ்லோவிலிருந்து வெளிவரும் 'அப்ரென் பொஸ்ரென்' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது. என்.ரி.பி. என்றழைக்கப்படும் நோர்வேயின் செய்தி நிறுவனத்தை மேற்கோள்காட்டி இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு சேகரிக்கப்படும் இலட்சக்கணக்கான குரோர் பணம் வன்னிக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வன்னிப் புலிகளோடு நெருங்கிய தொடர்புகள் கொண்ட யோகராஜா பாலசிங்கம் என்பவர் ஒஸ்லோ நகரசபையில் அங்கம் வகிக்கும் தொழிலாளர் கட்சிப் பிரதிநிதியாவார். வெளிப்படையாகவே தன்னைப் புலிகளின் ஆதரவாளரெனக் கூறிக் கொள்ளும் இவர், நோர்வேயில் புலிகளுக்காக நிதி சேகரிக்கப்படுகிறது என்பதை ஏற்றுக்கொண்டார். ஆனால் எவ்வளவு நிதி சேகரிக்கப்படுகிறதென்பதைக் கூற மறுத்துவிட்டார். நோர்வேயில் சில தமிழர்கள் நிதி சேகரிப்பது நோர்வே வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியும். ஆனால், சிவிலியன்களின் தேவைகளுக்காகவே நிதி சேகரிக்கப்படுவதாக அறிந்தோம். இராணுவ நோக்கங்களுக்காக நிதி சேகரிக்கப்படுவதாக எமக்குத் தெரியாது என்று நோர்வே வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர் எஸ்ரிக் பெர்கெசன் தெரிவித்தார். ஆனால், இராணுவத் தேவைகளுக்காக நிதி சேகரிக்க முடியுமா என்பதைத் தீர்மானிக்க வேண்டியது நோர்வேயின் நீதியமைச்சு என்று வெளிவிவகார அமைச்சு நம்புவதாகவும் அவர் கூறினார்.

## பத்மினிக்குத் தொல்லை

பண்பாட்டு மையம் என்ற அமைப்பை நடத்திப் பெருந்தொகையான மாணவிகளை அதில் சேர்த்த யாழ்.மாவட்ட எம்.பி., பத்மினி சிதம்பரநாதன் இப்போது புண்பட்டுப் போயிருக்கிறார். வேலை வாங்கித் தருகிறேனென்று கூறிப் பெருந்தொகை மாணவிகளுக்கு வேலைவாய்ப்புப் படிவங்கள் விநியோகித்து வாங்கி வைத்துக்கொண்ட போதிலும் எவருக்குமே வேலை பெற்றுக் கொடுக்க அவரால் முடியவில்லை. இதனால் அந்த மாணவிகளின் நச்சரிப்பையும், தொல்லையையும் தாங்கமுடியாமல் தவித்துப்போய் நிற்கிறாரென்று கூறப்படுகிறது. ஏற்கனவே தன்னைச் சந்தித்தவர்கள் மீண்டும் சந்திக்க வந்தால் அவர்களுடன் பேசுவதற்குத் தயங்கு கிறாராம். புதியவர்கள் வந்தால் உள்ளே அனுமதிக்கும்படி கூறுகிறாராம் என்று பாதிக்கப்பட்ட யுவதிகள் தெரிவிக்கின்றனர்.

## 149ஆவது ஆண்டு விழா

பிரிட்டிஷ் மகாராணியார் 2ஆம் எலிசபெத்தை போஷகராகவும் கொழும்பு ஆயர் டுலிப்சிகேராவை தலைவராகவும் கொண்டியங்கும் கடற்பணியாளர்களுக்கான திருச்சபை தனது 149ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வினை 10.07.2005 அன்று சிறப்பாகக் கொண்டாடியது.

வண. ஐசக் பாலகுமார் தலைமையில் கொழும்பு கோட்டை சென். பீற்றர்ஸ் அங்கிலிக்கன் ஆலயத்தில் இடம்பெற்ற இச்சிறப்பு ஆராதனையில் மும்மதத் தலைவர்களும் கலந்துகொண்டு ஆசி வழங்கியதுடன் கடற்படையினரது அணி வகுப்பும், இன்னிசையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். ஆட்டோ சாரதிகளுக்கு பளையில் ஒரு நாள் ஆயுதப் பயிற்சி

யாழ்ப்பாணத்தில் புலிகள் தற்போது வழங்கிவரும் ஒருநாள் ஆயுதப் பயிற்சித் திட்டத்தை விரிவுபடுத்தவுள்ளதாக நம்பத் தகுந்த யாழ். தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்மையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முச்சக்கர வண்டிச் சாரதிகளைப் பளைக்கு வந்து ஒரு நாள் ஆயுதப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளுமாறு புலிகள் வலியுறுத்தியிருந்தனர். பெருந்தொகையான ஆட்டோ சாரதிகள் பயிற்சிக்கு வருவரென்று புலிகள் எதிர்பார்த்திருந்த போதிலும் குறிப்பிட்ட ஒரு சிறு தொகுதியினரே அங்கு சென்றிருந்தனர். இவர்களுக்கு ஏ.கே.47 ரக ரைபிள்களை எப்படிக் கழற்றிப் பூட்டுவது, எப்படித் தாக்குதலுக்குப் பயன்படுத்துவது என்பன பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பயிற்சிக்கு வராத ஏனைய ஆட்டோ சாரதிகள் விசாரணைக்கு உட்படுத்தப் படுவார்களென்றும் தெரிய வருகிறது. இராணுவம் விரைவில் ஒரு தாக்குதலை நடத்தலாமென்றும் அதற்கு முகம் கொடுக்கும் முகமாகவே மக்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்படுகிறது என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. பயிற்சி பெற்ற ஆட்டோ சாரதிகள் தமது பகுதி மக்களுக்குப் பயிற்சிகளை வழங்குமாறு கேட்கப்படுவார்கள் என்றும் தெரியவருகிறது.

பயிற்சி பெற்ற ஆட்டோ சாரதிகள் வன்னிக்கு அழைக்கப்படலாமென்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## அராலி கலைவாணி கழகத்துக்கு உதவி

யாழ்ப்பாணம் அராலி வடக்கு கலைவாணி விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் கடந்த ஒன்பதாம் திகதி யாழ்.நகரிலுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்துக்குச் சென்று, கட்சி முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடினர். கழக உறுப்பினர்கள் சுமார் 25 பேர் கலந்துகொண்ட கலந்துரையாடலின்போது, தமது கழகத்தின் தேவைகள் பற்றி எடுத்துரைத்தனர். அவர்கள் மத்தியில் உரையாற்றிய ஈ.பி.டி.பி.யின் யாழ்ப்பாண பிரதம அமைப்பாளர் நடராஜா மதனராஜா, விளையாட்டு உபகரணங்களைக் கையளித்ததோடு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோடு தொடர்பு கொண்டு விளையாட்டுக் கழக அபிவிருத்திக்கு ஆவன செய்வதாகவும் உறுதியளித்தார்.

## ஊவா பல்கலைக்கழக நிர்மாண வேலைகள் விரைவில்

சுமார் 150 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் ஊவா பல்கலைக் கழகத்தின் கட்டட நிர்மாண வேலைகள் அடுத்த மாதம் 7ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்த அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொள்வார். 60 ஏக்கர் நிலப் பரப்பில் இப் பல்கலைக்கழகம் நிர்மாணிக்கப்படும். நான்கு மாத காலத்திற்குள் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படும். 2007ஆம் ஆண்டு முதல் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படும்.

யாழ். மறை மாவட்ட ஆயர் அதி வண தோமஸ் சௌந்திரநாயகம் அடிகளார், ஆயர் பணியேற்று வெள்ளிவிழா ஆண்டு நிறைவடைவதை முன்னிட்டு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் வாழ்த்துச் செய்தியை அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் தெரிவித்துக்கொண்டனர். படத்தில் ஆயருடன் ஈ.பி.டி.பி. யாழ் . மாவட்ட பிரதான அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய நடராஜா மதன ராஜா, அமைப்பாளர்களான சூசைமுத்து அலெக்ஸாண்டர் சாள்ஸ், சில்வேஸ்திரி அல்ட்ரின் உதயன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.



## சம்பந்தரின் நழுவல்

டீக்கான் உட்பட திருகோணமலையில் இடம்பெற்ற நான்கு புலி உறுப்பினர்களின் படுகொலைகள் குறித்து செய்தி யாளர்கள் எழுப்பிய கேள்விக்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர் ஆர். சம்பந்தன் நழுவல் போக்கில் பதிலளித்துள்ளார். வழமையாகப் புலி இயக்கத்தவர்கள் கொல்லப்படும்போது படையினர் மீதே கண்டனம் தெரிவித்துவந்த சம்பந்தர் இம் முறை டீக்கான் படுகொலையைச் சாதாரண விடயமாக ஏற்றுக் கொண்டமை கூட்டமைப்புக்குள் பலத்த சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

## முரசம்

### சமாதான சுருதியும் யுத்த பேரிகையும்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

சமாதானச் சங்கின் சுருதி ஓய்ந்து போர் முரசு எங்கும் ஒலிக்கும் துரதிர்ஷ்டவசம் தொடர்கிறது. அபாயகரமான போர் முழக்கங்களுக்குள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்கட்டுமானப் பணிகளும், பிரதிநிதிகளை நியமிப்பதில் ஏற்பட்டுள்ள இழுபறியால் முடங்கிப் போகக்கூடிய பேரச்சம் நிலவுகிறது.

சமாதானத்தின் பெயரால் தொடரும் படுகொலைகளின் அதிகரிப்பானது, தமிழ் மக்களுக்கான கௌரவமானதும் - சுய உரிமையுமானதுமான அரசியல் தீர்வைக் காணுகின்ற முயற்சிகளைப் பின்தள்ளி விட்டுள்ளன.

சுருக்கமாகச் சொல்வதானால், புலிகள் நாலாவது ஈழப் போரை எந்த இடத்திலிருந்து ஆரம்பிப்பது என்பதிலேயே கவனமாகவுள்ளனர். அவ்வாறானதொரு போர் ஆரம்பிக்கப்பட வேண்டியதையும், அதற்கான நியாயங்களையும் தேடிப் புலிகள் தடுமாறுவதை அண்மைக்காலங்களில் புலிகள் வெளிப்படுத்தும் கருத்துக்களினூடாகவும், படுகொலைகளினூடாகவும் புரிந்துகொள்ளமுடிகிறது.

வடக்கு - கிழக்கின் எல்லாப் பகுதிகளிலும் புலிகளால் மேற்கொள்ளப்படும் அவசரப் பயிற்சி, ஒரு நாள் பயிற்சி, மறைமுகப் பயிற்சி என்பன மீண்டுமொரு போர் மூளும் அறிகுறியை உறுதிப்படுத்துவதாயுள்ளது. அப்படி ஒரு போர் மூளுமானால், அது முழு தமிழ் சமூகத்தையும் பலியிடவே வழி வகுக்கும் என்பதையும் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

யுத்தமெனும் மனித பலி பீடத்தில் அப்பாவி மக்களையும், சிறுவர்களையும் தமது பாதுகாப்புக் கவசங்களாகப் பயன்படுத்தும் எந்தவொரு போராட்டமும் வெற்றி பெற்றதாகச் சரித்திரமில்லை.

இறந்தவர்களுக்காகப் பூஜிப்பதை விடவும், இருப்பவர்களைப் பாதுகாப்பதற்கு, அவர்களைக் கௌரவமாக வாழ வைப்பதற்குச் சாத்தியமான வழியில் உழைப்பதே மேல். ஆகவே, பலி கொடுத்துப் பின்னர் பட்டம் கொடுத்து, விடுதலையின் பெயரால் பாசாங்கு காட்டுவதை நிறுத்தி, தற்போதுள்ள சூழலை கைநழுவ விடாமல் பாதுகாக்க அனைவரும் உதவ வேண்டும்.

தென் இலங்கையில் மாறி வரும் அரசியல் குழப்பங்களும், அதிகாரப் போட்டியும் சிக்கல் மிகுந்த மாறுதலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. விளைவு எதுவாக இருந்தாலும் அது தமிழ் பேசும் மக்களின் விருப்பத்துக்குரியதாக இருக்காது. ஆகவே, வழமையான இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பதை விட்டுவிட்டு யுத்தமே வழியென்று தொடர்ந்தும் பேரழிவுகளை நோக்கிப் பயணிப்பது உணர்ச்சி பூர்வமானதாக இருந்தாலும் கௌரவமான தீர்ப்புக்கு உதவுவதாக இருக்காது என்பதை யுத்தப் பிரியர்களும், யுத்தத்தை வரவேற்பவர்களும் தெரிந்துகொண்டால் நன்மையாக இருக்கும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

## ஊரிலிருந்து....



U.N.P. மக்கள் சக்தி எண்டு பேரணி ஒண்டு நடந்ததல்லோ. அதை நேரடியாகக் காணும் வாய்ப்பு கிடைச்சுது. அவை சரியோ பிழையோ எண்டு நான் சொல்ல வரேல்லை. ஆனால் பேரணி காலி வீதியில அரச தரப்பு மற்றும் அரசுக்கு ஆதரவு விலத்தின தரப்பு ரெண்டு பேரிண்ட கட்சி அலுவலகங்களை கடக்கேக்க தங்கட குரலை மட்டும் பாவிச்சு கருத்தை சொல்லி, கடந்தீனம். உள்ள இருந்தவையும் வலுகூலாய் இருந்து பார்த்துக்கொண்டிருந்திச்சினம். மற்றப்படி ஒரு சின்ன கல்வீச்சு ஊஹூம் எங்கட இடத்தை யோசிச்சுப் பார்த்தன். மாற்றுக்கருத்துச் சொன்னால் மண் மூட்டைக்குள்ள ஆமிண்ட பாதுகாப்போட தான் இருக்க வேண்டும். ஆனால் ஒண்டு, சர்வதேசம் இந்த விஷயத்தை வலு கவனமாய் நோட் பண்ணுது.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பாதாள குழுக்களும் விரியும் பயங்கரமும்

**நரன்**

மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் அரசாங்கமேயென்று ஜனநாயகத்துக்கு வரைவிலக்கணம் கூறப்படுவதுண்டு. ஊழல், மோசடி, கள்ளவாக்கு, காசுக்கு வாக்குகளைக் கொள்வனவு செய்தல், பாதாளக் குழுக்களை அல்லது பயங்கரவாதக் குழுக்களை வைத்து மிரட்டுதல், மாற்றுக் கருத்துக் கொண்ட வேட்பாளர்களைப் பிரசாரம் செய்யவிடாமல் தடுத்தல் போன்ற இன்னோரன்ன விடயங்களும் இந்த ஜனநாயக வரம்புக்குள் புகுந்து கொண்டு விட்டனவென்பது மறுக்க முடியாத உண்மை. "துப்பாக்கிக் குழாயிலிருந்துதான் அரசியல் அதிகாரம் பிறக்கிறது" என்றார் மக்கள் சீனத் தலைவர் மாசே துங். அரசியல் அதிகாரம் மட்டுமல்ல அராஜகமும் கூடத் துப்பாக்கிகளிலிருந்துதான் பிறக்கின்றது. அரசியல் மயப்படுத்தப்பட்ட ஆயுதக் குழுக்களாக இருந்தாலென்ன அல்லது பயங்கரவாதக் குழுக்களாக இருந்தாலென்ன, அதிகாரத்துக்கான போராட்டத்தை ஆயுதங்களில் தங்கி நின்றே மேற்கொள்ளுகின்றன. ஏற்கனவே கூறப்பட்டவாறு ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கம் வேறு, இந்த அரசாங்கத்தைப் பாதுகாக்கும் அரச இயந்திரம் வேறு. அரச இயந்திரமே அரசாங்கத்தைப் பாதுகாக்கின்றது. அதாவது இராணுவம், கடற்படை, விமானப்படை போன்ற ஆயுதப்படைகள், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்குத் தேவையான பொலிசார், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் அரச நிர்வாகக் கட்டமைப்புக்கள் யாவுமே அரச இயந்திரமென்று வர்ணிக்கப்படுபவை.

ஆயுதங்கள் பிழையான தனி நபர்கள் அல்லது குழுக்களின் கைகளில் போய்ச் சேரும்போது அராஜக சக்திகள் உருவாகின்றன. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, மிரட்டிப் பணம் பறித்தல், கப்பம் வாங்குதல், பணத்துக்காகச் செய்யப்படும் கொலைகள், ஆட்கடத்தல்கள், போதைப் பொருள் வர்த்தகம் ஆகியவை அராஜகக் குழுக்களின் அடிப்படை அம்சங்களாகும். இவை இலங்கையில் பாதாளக் குழுக்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்தியாவில் அராஜகச் செயல்களில் ஈடுபடுபவர்களைத் தாதாக்களென்று அழைக்கிறார்கள். இப் பாதாளக் குழுக்களுக்கு அரசியல், சமூக, சமய, பொருளாதாரச் செல்வாக்குகளும் பாதுகாப்பும் கிட்டுகின்றன. அரசியல்வாதிகளும் சமூக அந்தஸ்துப் பெற்றவர்களும் இக் குழுக்களைப் பயன்படுத்தியும் வருகிறார்கள்.

இலங்கையின் பல பகுதிகளில் நூற்றுக்கு மேற்பட்ட பாதாளக் குழுக்கள் இயங்கி வருவதாகவும் இவற்றில் முப்பத்தியேழு குழுக்கள் மிகப் பயங்கரமானவையென்றும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. இங்குள்ள சில பாதாளக் குழுக்களின் வசம் மிகவும் நவீன ரக ஆயுதங்கள் இருப்பதாகவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பண்டைக் காலத்தில் வழிப்பறியில் ஈடுபட்டவர்களைப் பாதாள நபர்களாக வர்ணிக்க முடியும். அன்று புஜ பலத்தை வைத்து மிரட்டிக் காரியம் சாதித்தார்கள். இன்று ஆயுதங்களை வைத்து மிரட்டிப் பணம் பறிக்கிறார்கள். இந்தியாவில் கோவை தொடர் குண்டு வெடிப்புத் தொடர்பாகத் தேடப்பட்ட இப்ராஹிம் தாவூத் என்ற பிரபல தாதா தப்பியோடியிருப்பதும், இந்தத் தாதாவுக்கு நடிகை நக்மாவோடு தொடர்பிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியாவின் படுகொலை இந்த நாட்டில் தூங்கிக் கொண்டிருந்த நீதித்துறையை நித்திரையிலிருந்து தட்டியெழுப்பியிருக்கிறது. இந்த நீதிபதியின் படுகொலை பல உண்மைகளை அம்மணமாக அம்பலப்படுத்தியிருக்கின்றது. பாதாளக் கும்பல்கள் மிக உயர்ந்த மட்டத்திலும் கூட இயங்குகின்றனவென்ற உண்மையை மட்டுமல்ல, இதற்கு நீதித்துறையிலும் நிர்வாகத் துறையிலும் சட்டத்தையும் ஒழுங்கையும் அமுல்படுத்துவதாகக் கூறிக் கொள்ளும் பொலிஸ் துறையிலும், ஏன் அரசியல்வாதிகளின் ஆதரவும் அரவணைப்பும்கூட இலங்கையின் தாதாக்களுக்கு இருக்கிறதென்பதையும் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது. சரத் அம்பேபிட்டியா துணிகரமான ஒரு நீதிபதியென்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காகக் கடுமையான தண்டனைகளை விதித்துவந்தவரென்றும் பெயர் பெற்றவர். கொழும்பு மத்திய வங்கிக் குண்டு வெடிப்பில் புலி இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு இருநூறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தவர் இவர். பிந்துனுவெவ படுகொலை வழக்கில் ட்ரயல்-அற்-பார் முறையில் விசாரணை நடத்திய இவர், இரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் உட்பட ஐவருக்கு மரணதண்டனை விதித்தவர். இவ்வாறு கடுமையான தண்டனைகள் விதிப்பதில் பெயர்பெற்ற இவர், கொலை செய்யப்படுவதற்கு முதல் நாள்கூட போதைவஸ்து வழக்கொன்றில் குற்றஞ்சாட்டப்பட்ட பெண்ணொருத்திக்கு ஆயுள் தண்டனை விதித்திருந்தார்.

கொழும்பில் கோடீஸ்வரச் செல்வந்தர்கள் வாழும் பகுதியான கறுவாக்காட்டில், வார்ட் பிளேஸ் என்ற இடத்தில் தனது மாளிகை போன்ற வீட்டை மையமாக வைத்துப் போதைப் பொருள் வர்த்தகம் நடத்தி வந்தவரெனக் குற்றஞ்சாட்டப்பட்டவர் குடு நௌபர் என்பவர். சரத் அம்பேபிட்டியாவின் கொலைக்குச் சூத்திரதாரியென்று நீதிமன்ற விசாரணையில் நிரூபிக்கப்பட்டதையடுத்து நௌபர் உட்பட ஐவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இருபத்தியாறு நாட்கள் நடைபெற்ற விசாரணை பூர்த்தி செய்யப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டமை பாராட்டுக்குரிய விடயம். பத்துப் பதினைந்து வருடங்களுக்கு மேலாகக்கூட கொலை வழக்குகளும் ஏனைய வழக்குகளும் இழுத்தடிக்கப்பட்டுச் செல்லும் இந்த நாட்டில் இவ்வளவு விரைவாக விசாரணை நடத்தி முடிக்கப்பட்டமைக்கு பாதாளக் கும்பல்களின் கரங்கள் நீதித்துறையின் கழுத்தையே நெரிக்குமளவுக்கு நீண்டிருந்தமையும் ஒரு காரணமாக இருக்கலாம். நீதித்துறை, பொலிஸ் துறைகளிலும் 'கோடரிக் காம்புகள்' இருக்கின்றன என்பதை சரத் அம்பேபிட்டியாவின் படுகொலை விசாரணைகள் அம்பலப்படுத்தியிருக்கின்றன. பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் சுப்ரீண்டன்கள் போன்ற உயர் அதிகாரிகளின் தொலைபேசி இலக்கங்கள் 'குடு நௌபர்' வசமிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. இந்த அதிகாரிகள் போதைவஸ்து வர்த்தகரிடமிருந்தும் 'மாதாந்த சன்மானம்' பெற்ற விபரங்களும் அம்பலமாகியிருக்கின்றன.

குடு நௌபருக்குப் பிணை வழங்க நீதிபதி சரத் அம்பேபிட்டிய மறுத்ததே அவரின் கொலைக்கு மூலகாரண மென்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. சரத் அம்பேபிட்டியா குடு நௌபரின் பிணை மனுவை நிராகரித்திருந்தபோதும்கூட மற்றொரு நீதிமன்றத்தினூடாக அவர் பிணையில் வந்துவிட்டாரென்பது குறிப்பிடத்தக்கது. ஊழல் பேர்வழிகளான நீதிபதிகளும் இன்னமும் இருக்கின்றன. இலங்கையில் பிரபல போதைவஸ்து வியாபாரி இவர். இவருக்கிருந்த அரசியல் தொடர்பை வைத்தே, இவர் தற்கொலைக் குண்டுதாரியை அழைத்துச் சென்றாரென்பது வீடியோப் படங்கள் மூலம் அம்பலப்படுத்தப்பட்டன. கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்ட இவர், ஆட்சி மாற்றத்தின் பின்னர் விடுவிக்கப்பட்டதும் இப்போது வேற்று நாடொன்றுக்குத் தப்பிச் சென்றிருப்பதும் இரகசியமானதுதான். இருக்கிறார்களென்று கடந்த வருடம் ஜனாதிபதி குற்றஞ்சாட்டியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. மற்றொரு நீதிபதி இலட்சக்கணக்கில் பணம் வாங்கிக்கொண்டு இந்த நாட்டின் பிரபல குதிரைப் பந்தயச் சூதாட்டப் பேர்வழியொருவருக்குச் சட்டத்திற்குப் புறம்பாகப் போயா தினத்தன்று பிணை வழங்கியமையும், இதில் சம்பந்தப்பட்ட நீதிபதி நீதிச் சேவை ஆணைக்குழுவின் விசாரணைகளின் பின்னர் பதவி நீக்கம் செய்யப்பட்டமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

சிலி, கொலம்பியா போன்ற இலத்தீன் அமெரிக்க நாடுகளில் போதைவஸ்து வர்த்தக முதலைகள் பெரும் யுத்தப் பிரபுக்கள் போலச் செயற்படுகிறார்கள். அவர்களிடம் அடியாட்களைக் கொண்ட தனிப் படையே உள்ளது. சில பிரதேசங்களை இவர்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றார்கள். சரத் அம்பேபிட்டியாவைப் போல போதைவஸ்து வர்த்தக முதலைகளுக்கு எதிராகச் செயற்பட்ட நீதிபதிகள் சுட்டுத்தள்ளப்பட்டுமிருக்கின்றார்கள்.

இலங்கையில் பாதாளக் குழுக்களையும், அவற்றின் தலைவர்களையும் அடக்கியொடுக்குவதற்குச் சில துணிச்சலும் நேர்மையும் மிக்க பொலிஸ் அதிகாரிகள் முயற்சியெடுத்திருக்கின்றார்கள். இருந்தாலும் அவ்வப்போது அதிகார பலமும் செல்வாக்கும் மிக்க அரசியல்வாதிகள் மற்றும் உயர் மட்டப் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோரின் உத்தரவின் பேரில் பாதாள முதலைகள் தப்பிச் சென்றுவிடுகின்றன. நீதிமன்றங்களில் குற்றஞ்சாட்டப்பட்டாலும் கூட 'திமிங்கிலங்கள்' தப்பிச் செல்வதற்கு வசதிகளும் வாய்ப்புக்களும் செய்து கொடுக்கப்படுகின்றன. சிறைச்சாலைகளில் கூட ராஜ உபசாரம் இப் பாதாளப் பேர்வழிகளுக்குக் கிடைக்கின்றது. சட்டவிரோதமாக கோடிக் கணக்கான சொத்துக்களையும் உடைமைகளையும் கணநேரத்தில் பறித்தெடுக்கும் இக் கும்பல்கள் அப்படிக் கிடைக்கும் பணத்தில் சில்லறைகளை வீசிவிட்டுத் தப்பிச் சென்றுவிடுகின்றன. சொத்தி உபாலி, நாவல நிகால், களு அஜித், பம் பொட்டு இப்படிப் பாதாள உலகப் பிரபலங்களின் பெயர்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.



*இலங்கையில் பாதாளகுழுக்கள் உட்பட பல்வேறு தரப்பினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட 35,802 சட்டவிரோத கடுகலன்கள் கடந்தவாரம் சுதந்திர சதுக்கத்தில் அழிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்*

கடந்த பத்துப் பதினைந்து வருடங்களாக இலங்கையில் பாதாளக் குழுக்களின் அட்டகாசங்கள் அதிகரித்து வந்துள்ள போதிலும் கடந்த சில வருடங்களாக இவற்றின் வளர்ச்சிப் போக்கும் அதிகரித்து வந்திருக்கிறது. யுத்தம் இதற்கு ஒரு காரணமென்று கூற முடியும். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் அரச ஆயுதப் படைகளை விட்டு வெளியேறியவர்களும் இயக்கங்களை விட்டு விலகியவர்களுமெனப் பலர் பாதாளக் குழுக்களுக்குத் தலைமை தாங்குகின்றனர் அல்லது பெருமளவில் பாதாளக் குழுக்களில் அங்கம் வகிக்கின்றனரென்ற உண்மையிலிருந்து இதனை அறிந்துகொள்ள முடியும்.

இந்த நாட்டில் இரண்டு ஜனாதிபதிகள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். சாமான்ய மக்களின் அன்பைப் பெற்ற ஜனாதிபதி பிரேமதாசா, பாபு என்ற தற்கொலைக் குண்டுதாரியால் கொல்லப்பட்டார். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க மீது கொழும்பு நகர மண்டபத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. தற்கொலைக் குண்டுதாரியை மைதானத்துக்குள் அழைத்துச் சென்றவர், கொழும்பு கிம்புலாகலவைச் சேர்ந்த பிரபல பாதாளக் குழுத் தலைவர். இவர் ஒரு தமிழர். இவரிடம் பல ஆயுதக் குழுக்கள்

எவ்வித அச்சமுமின்றி ஆயுதங்களைப் பாவிக்கும் துணிவு, பாவிப்பதற்கான பயிற்சித் மனித உயிர்களைக் கொஞ்சமேனும் மதிக்காமல் சுட்டுத் தள்ளும் போர்க் குணம் ஆகியவை இத்தகையவர்களின் மனங்களில் பாதாள மனோபாவங்களைத் தோற்றுவிக்கின்றன. இவற்றையே முதலாக வைத்துக் கொண்டு சட்டத்திற்கு மதிப்பளித்து வாழும் மக்களை மிரட்டிப் பெரும் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பது, இவர்கள் ஆயுதப்படைகளில் பெற்றுக்கொண்ட அடிப்படைப் பாடங்களாகும். நாட்டின் தென்பகுதிகளிலிருந்து சொகுசு வாகனங்களை வன்னிக்குக் கடத்திச் சென்று சில இலட்சங்களுக்காகவும், ஏ.கே.47 ரக துப்பாக்கிகளுக்காகவும் விற்கப்படுவது ஏற்கனவே வெளிவந்த உண்மைகளாகும். இவற்றிற்கென இரு தரப்பிலும் இடைத்தரகர்களாகச் செயற்படுபவர்கள் அல்லது இணைப்பாளர்களாகச் செயற்படுபவர்களும் இருக்கிறார்கள். மலிவு விலைகளில் புலிகளின் பிராந்தியத் தலைவர்களுக்கு அல்லது முக்கியஸ்தர்களுக்கு முன்னாள் படைவீரர்கள் சொகுசு வாகனங்களை விற்றிருக்கின்றார்கள்.

யுத்தத்தின் பக்க விளைவுகளில் ஒன்றுதான் பாதாளக் குழுக்களின் தோற்றமென்றால் அது மிகையல்ல. இராணுவப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி லெப்டினன்ட் கேர்ணல் முத்தலிப்பின் படுகொலைச் சூத்திரதாரிகள் புலிகளென்ற போதிலும் பாதாளக் கும்பல்களையும் பயன்படுத்தியிருக்கின்றார்கள் என்பதற்கு கைது செய்யப்பட்டிருக்கும் சிங்களவர்கள் சாட்சிகளாவர்.

ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படும் பாதாளக் குழுக்கள் தமது மேலதிகாரத்தை நிலைநாட்டுவதற்காக நூற்றுக்கு மேற்பட்ட பாதாளக் குழு நபர்களைக் கொன்றுள்ளனர். இப்போதெல்லாம் கைது செய்யப்படும் முக்கிய பாதாளக் குழு உறுப்பினர்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்களை எடுத்துத் தருவதாகக் கூறிப் பொலிசாரை அழைத்துச் செல்வதாகக் கூறப்படுவதும், குறிப்பிட்ட இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதும் பொலிசார் மீது குண்டுகளை வீச முனைவதாகக் கூறப்படுவதும், பின்னர் பாதாள நபர்கள் சுட்டுக் கொல்லப்படுவதும் ஒரு வாய்ப்பாட்டுப் பாணியில் இடம் பெறுகிறது.

இருந்தாலும் பாதாள நபர்கள், சமூகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டியவர்கள் என்பதை எவரும் எதிர்க்க மாட்டார்கள். சில மனித உரிமைக் குழுக்களைத் தவிர. ஏனெனில், மற்றவர்களின் வாழ்வுரிமையைப் பறிப்பவர்களின் - அதாவது கொலையாளிகளின் மனித உரிமைகளைப் பற்றியே பேசிப் பழக்கப்பட்டவர்களுக்கு மற்றவனின் வாழ்வுரிமையைப் பறிப்பது எவ்வளவு அநியாயமென்பது தெரிவதில்லை. மனித உரிமையைப் போல, மனித உயிர்களும் ஜீவாதாரமானவை என்பது ஏனோ பெரும்பாலான மனித உரிமைக் குழுக்களுக்கு விளங்குவதில்லை. சாத்தான்களுக்கு வேதம் ஓதுவதில் பயனில்லை. ■

# கிழக்கைப் பிரித்தாளும் புலிகளின் புதிய வியூகம்

சென்ற வாரத் தொடர்ச்சி......

ஆனையிறவுச் சமர் ஏற்படுத்திய தோல்வி வடு கருணாவின் வளர்ச்சியால் புறக்கணிக்கப்பட்ட சொர்ணம், பானு ஆகிய இருவரும் வாகரையிலிருந்து போராடத் திட்டமிட்டனர். கருணாவின் பலம், பலவீனம் இரண்டுமே கிழக்குப் போராளிகள் என்பதைப் புரிந்துகொண்ட பிரபாகரன், கருணாவின் விரலைப் பிடித்து கருணாவின் கண்ணில் குத்துவது இலகு என்பதால், ஜெயந்தன் படையணியையே வாகரையிலிருந்து போர் புரியுமாறு அனுப்பி வைத்தார். பிரபாகரனின் திட்டத்தைப் புரிந்துகொண்ட கருணா, தன்னோடு இருக்கும் போராளிகளையும், தன்னால் வளர்க்கப்பட்ட போராளிகளையும் மோதவிட்டு வேடிக்கை பார்க்கும் பிரபாகரனின் திட்டத்தை முறியடிப்பதற்காக எதிர்த் தாக்குதலைத் தவிர்த்தார். ஆனாலும் சொர்ணம், பானு ஆகியோரின் பழி தீர்ப்புக்கு முன்னூறுக்கும் நானூறுக்கும் அதிகமான கிழக்குப் போராளிகள் பலிகொள்ளப்பட்டனர். போர் தவிர்ப்பைக் கடைப்பிடிப்பதனூடாகக் கிழக்குப் போராளிகளின் இழப்பைத் தவிர்க்கலாமென நினைத்த கருணாவின் நினைப்பை சொர்ணம், பானு ஆகியோர்களோடு அடுத்தடுத்து கிழக்குத் தலைமையை குறிவைத்த சிலரும் தகர்த்தனர்.

புலிகளே புலிகளைப் பலி கொண்ட உட்கொலை நடந்த அந்தக் குழப்பமான சூழலை எதிர்கொள்ளத் தேவைப்படும் கால அவகாசத்தைப் பெறுவதற்காக கருணாவின் உதவியாளராக இருந்த ரமேஸ், மட்டக்களப்பு - அம்பாறை தளபதியாக நியமிக்கப்பட்டார்.

கருணாவின் இடைவெளியை ரமேஸ் எனும் செல்வாக்கற்றவரால் நிவர்த்திக்க முடியாது என்பதைத் தொடர்ந்து எழுந்த சர்ச்சைகள் வெளிச்சம் போட்டுக் காட்டின. அவையாவன:

கௌசல்யன் காட்டிய விசுவாசம், அதற்காக அவர் தலைமையிடம் எதிர்பார்த்த பதவி, அதுமட்டுமில்லாமல் சொந்த உறவுகளை, நண்பர்களை பிரபாகரனின் கட்டளைக்கு அமைய கொலை செய்வதால் தனது பிராந்தியத்திலேயே ஏற்படப் போகும் அவப் பெயர் - தவிரவும் - கூடவே ஒட்டிக்கொண்டிருந்த தில்லுமுல்லுத் தனம், இவற்றைத் தாண்டி கருணாவின் நட்பும் அவரது விம்பமும் ரமேஸை தலைமைக்கு விசுவாசமுள்ளவராகக் காட்டிக்கொள்ளத் தடையாக இருந்தன.

மறுபுறத்தில் கிழக்குப் போராளிகள் கருணாவின் பேரால் இயக்கத்துக்குள்ளேயே தனித்தனியாகக் கொல்லப்பட்டார்கள். சிறை பிடிக்கப்பட்ட கிழக்குப் பெண் போராளிகள் புலிகளாலேயே கற்பழிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். சில ஆண் போராளிகள் துண்டம் துண்டமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டார்கள். இக் கொலைகள் எல்லாவற்றிற்கும் கருணாவின் சாயம் பூசப்பட்டது. இதை ஏனைய போராளிகள் ஏற்க மறுத்தார்கள். அவர்களுக்குள்ளேயே கருத்து ரீதியான முரண்பாடுகள் வெடிக்கத் தொடங்கின.

இது ஒரு புறமிருக்க, கருணா அணிக்குள் பிரபா அணிப் புலிகளும், பிரபா அணிக்குள் கருணா அணிப் புலிகளும் கலந்து காணப்பட்டனர். அதேவேளை பிரபாகரனுக்கு மிக நெருக்கமான பரிச்சயமுள்ள கருணா அடிபட்ட பாம்பாக வெளியேறியுள்ளார். அடுத்து என்ன செய்யப்போகிறார் என்பது ஒரு பெரும் கேள்வியாக எழுந்தது. இவற்றைச் சரி செய்வதும், தனக்கு விசுவாசமான ஒருவரை கிழக்கில் கால் ஊன்றச் செய்வதும் பிரபாகரனுக்கு அவசரத் தேவையாக இருந்தது. அப்போதுதான் கருணாவோடு பல யுத்த முனைகளில் ஈடுபட்டவர் என்பதாலும் அந்த வாடை இருக்கும் என்பதாலும் - தனது பாதுகாப்புத் தொடர்பாக ஒரு வருடம் விசுவாசமாகச் செயற்பட்டவர் என்பதாலும் பானுவை, பிரபாகரன் மட்டக்களப்பு - அம்பாறை தளபதியாக நியமித்தார். ரமேஸை குற்றச்சாட்டுகளின் பெயரில் சிறைப்படுத்தினார். கொல்ல எடுத்த முயற்சி ரமேஸின் மச்சானான புலிகளின் கடற்படைத் தளபதி சூசையால் பெருத்த சர்ச்சைக்குப் பின் தடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**கிழக்கு மாகாணத்தின் நிலைமைகள் பற்றிக் கிடைக்கும் தகவல்கள் ஆச்சரியமானவையாகும். கிழக்கில் பிரச்சினைப்படும் உறுப்பினர்களை கிழக்கிலேயே கவனிப்பதும், அங்குள்ள பிரச்சினைகள் வடக்கை நோக்கித் திரும்பாமல் தடுப்பதும், தலைமைத்துவம் தொடர்பான பிரச்சினையைப் பெரிது படுத்தாமல் இருப்பதுமே மேற்படி துண்டாடலின் பிரதான காரணம் என்று கூறப்படுகிறது.**

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பானு, பிரபாகரனின் உறவு முறையானவர். அவர் கல்யாணம் முடித்து இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர். பானு உடல் நிலை ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளார். ஆகவே அவரால் மேலும் பிரபாகரனின் பாதுகாப்புப் பிரிவில் செயற்பட முடியாது என்பது வேறு விடயம். பானுவால் வளர்க்கப்பட்டவர்தான் இப்போது புலிகளின் வட முனைக் கட்டளைத் தளபதியான தீபன். புலிகளுக்கு எதிரான மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும், படைத்தரப்பையும் புலனாய்வு செய்யவும், கொலை செய்யவும் பொறுப்பாக இருக்கும் பொட்டு அம்மானுக்கு பானுவும் விசுவாசமானவர்களில் ஒருவராவார். ஆனையிறவு - முல்லைத்தீவுத் தாக்குதல்களின் போது கருணாவுடன் பிஸ்டல் குழுவை இறக்கி இணைந்து போராடினாலும் - யாழ். கோட்டை மீதான தாக்குதலை நடத்தினார். மாத்தையா கொல்லப்பட்ட பிறகு சொர்ணத்துடன் பானுவும் பிரபாகரனின் விசுவாசியாகச் செயற்பட்டார். இதற்காக வழங்கப்பட்டிருக்கும் வெகுமதியாகவும் தற்போதைய தளபதிப் பதவியை பானு எண்ணக் கூடும்.

அடுத்தபடியாக திருமலை மாவட்டத்துக்குப் புலிகளின் தளபதியாக நியமிக்கப்பட்டிருப்பவர் சொர்ணம். நாற்பத்தெட்டு வயதான இவர், மூதூரைச் சேர்ந்தவர். இவரது இயற் பெயர் சூசைப்பிள்ளை அன்ரனிதாஸ் ஜோசப். இவரது உறவினர்கள் இப்போதும் தக்வா லேன், திருகோணமலையில் வசிக்கின்றனர். இவர் திருமணம் முடித்தது முல்லைத்தீவுப் பெண் ஒருவரை. 1984ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தில் இணைந்து யாழ்ப்பாணத்திலேயே பயிற்சி பெற்றவர். ஆனையிறவுச் சமரில் பின்வாங்கினார். இப்போது ஒரு வருடமாகத் தளபதியென்ற மகுடத்துடன் இருக்கிறார்.

அடுத்தவர் ராம். இவர் மட்டக்களப்பு வெள்ளாவெளியைச் சேர்ந்தவர். இவரது தந்தை ஒரு குருக்கள். ஒரே ஒரு அண்ணன் மட்டுமே இவருக்கு உண்டு. தற்போது இவரது பெற்றோர் இருவரும் இறையடி சேர்ந்துவிட்டனர். உளவு பார்ப்பது, கொலை செய்வது தொடர்பில் பொட்டு அம்மானின் விசுவாசத்துக்குரியவர். இது தவிர, மட்டக்களப்பு, பொலநறுவை எல்லைக் கிராமங்களிலும் நகரப்புறங்களிலும் முஸ்லிம் மக்களின் கொலைகளோடு நெருங்கிய தொடர்புபட்டவர். புளொட் அமைப்பின் வாமதேவனைக் கொலை செய்ததனூடாகத் தன்னை ஒரு சிறந்த கொலையாளியாக இனங்காட்டியவர். குறிப்பிடும்படியான சமர்கள் எதிலும் பங்குபற்றவில்லை. தற்போது மட்டக்களப்பு - அம்பாறையை நிர்வகிக்கும் சூட்சுமத்திற்குள் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதில் அவதானிக்கவேண்டிய விடயம், பானுவை மட்டக்களப்புத் தளபதியாக நியமித்ததோடு வன்னியில் புலனாய்வு மற்றும் வீட்டிருப்பதும், திருமலையில் சொர்ணம் - எழிலன் இவர்களுக்கு நடுவே செம்மணனை அமர்த்தியிருப்பதுமாகும். இவற்றின் உள்நோக்கம் விபரீதமானதாகும். இதைத் தவிர ஒரு காலத்தில் பரபரப்பாகப் பேசப்பட்ட கரிகாலன், பல்லுப் பிடுங்கிய பாம்பின் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். இந்த இரண்டும் கெட்டான் நிலைக்குள் தனது தலைமையை கிழக்கில் தக்கவைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் பிரபாகரனுக்கு உள்ளது.

கருணாவின் பிரிவுக்குப் பின்னர் கிழக்கிலிருந்து பூதாகாரமெடுத்துக் கிளம்பும் பிரச்சினைகளை ஒட்டுமொத்தமாக எதிர்கொள்ளவதில் பிரபாகரனுக்குச் சிக்கலாகவே இருக்கும். ஆகவேதான் தனித்தனியாகப் பிரச்சினைகளைக் கையாளத் திட்டம் தீட்டினார். மூன்று பிரிவுகளாகக் கிழக்கின் நிர்வாகத்தைப் பிரித்து தனது விசுவாசிகளைப் பொறுப்புக்களில் நியமித்தார்.

மட்டக்களப்பு - அம்பாறையைப் பொறுத்தவரை, கருணாவின் பிரிவிற்குப் பிறகு அப்பிரதேசப் புலி உறுப்பினர்களின் மன நிலையில் மாற்றம் நிகழ்ந்துள்ளது. ஒரு பிரிவினர் யுத்தத்தை விரும்பாத சூழ்நிலையிலும், ஒரு சிலர் யுத்தத்தை விரும்பும் சூழ்நிலையிலும் தமது நிலைப்பாடுகளை வெளிக்காட்டி வருகின்றனர். இதற்குப் பிரதான காரணம் இன்றுவரை கருணாவின் பெயரால் சொந்தச் சகோதரங்கள், உறவுகள் ஆகியோர் பிரபா அணிப் புலிகளால் படுகொலை செய்யப்படுவதாகும். இந்தக் குழப்பங்களை நிவர்த்திக்க தனது புதிய தளபதிகள் சீரான மனித வேட்டையைச் செய்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவார்கள் என்று பிரபாகரன் எதிர்பார்க்கிறார். அவரின் எதிர்பார்ப்பை முழுமையாக முடியாவிட்டாலும், ஓரளவாவது நிறைவேற்றித் தமது பதவிகளைத் தக்கவைக்கும் முயற்சிகளே தொடரும் படுகொலைகளுக்குக் காரணமாக அமைகின்றன.

இதையும் தாண்டி கிழக்கு மாகாணத்தின் நிலைமைகள் பற்றிக் கிடைக்கும் தகவல்கள் ஆச்சரியமானவையாகும். கிழக்கில் பிரச்சினைப்படும் உறுப்பினர்களை கிழக்கிலேயே கவனிப்பதும், அங்குள்ள பிரச்சினைகள் வடக்கை நோக்கித் திரும்பாமல் தடுப்பதும், தலைமைத்துவம் தொடர்பான பிரச்சினையைப் பெரிது படுத்தாமல் இருப்பதுமே மேற்படி துண்டாடலின் பிரதான காரணம் என்று கூறப்படுகிறது. இந்தத் தர்மசங்கடமான நிலையைக் கருணா எவ்வாறு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளப்போகிறார்.

கருணாவைப் பொறுத்தவரை தற்போது கிழக்கு மாகாணத்தில் பொதுவான வேலைத் திட்டமொன்று குறித்து அவருக்கு நெருக்கமான சில தரப்புகளோடு ஆலோசித்து வருவதாக அறியமுடிகிறது. அது வெற்றியளிக்குமா, இல்லையா என்று இப்போது எதுவும் கூறமுடியாது. அதுவரையில் தனது நெருங்கிய சகாக்களையும், தனக்காக உயிரையும் தியாகம் செய்யும் வீரர்களையும் பாதுகாப்பது கருணாவுக்குப் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. பிரபாகரனைப் பற்றி மிக நெருக்கமாகத் தெரிந்த ஒருவர் என்ற வகையில் தயவு தாட்சணியத்திற்கு இடந்தராமல், எதிர்த்து நிற்காமல், தலைமறைவாகியிருப்பதனூடாக அன்றாடம் தன் நெருக்கமானவர்களைப் பிரபா அணிப் புலிகளிடம் பலி கொடுத்துக்கொண்டிருக்கிறார்.

கருணாவை வீழ்த்துகின்ற சதிக்கு பிரபா அணிப் புலிகளுக்கு கடலால் படைகளைக்

அலசுவது

**- மதியூகி -**

கொண்டு செல்லவும், வடக்கிலிருந்து படைகளை நகர்த்தவும், மத்தியஸ்தர்களும் - கண்காணிப்பாளர்களும் ஒத்துழைப்பு வழங்கினார்கள். இல்லையென்றால் இரு அணிகளுக்கிடையிலான ஒரு ஆயுத மோதலை எப்படி உள்விவகாரமாக நியாயப்படுத்த முடியும்? ஆகவே தொடரும் படுகொலைகளுக்கும், கிழக்கில் தொடரும் மரண ஓலத்திற்கும் ஒரு விடிவை ஏற்படுத்துவதில் கருணா எத்தகைய பங்கை வகிக்கப்போகிறார் என்ற எதிர்பார்ப்பு இன்னும் கிழக்கு மாகாணத்தில் நிலவுவதை உணரமுடிகிறது. ஒரு வேளை கருணா ஒரு யுத்த சூழலை எதிர்பார்த்தும் இருக்கக்கூடும். பிரபாகரனின் பிரித்தாளும் தந்திரம் கை கொடுக்குமா? கருணாவின் காத்திருப்பு கை கொடுக்குமா? சமாதானம் தனது இருப்பிடத்தை யுத்தத்துக்குத் தாரை வார்க்குமா? கிழக்கு மாகாணம் பிரபா அணிப் புலிகளின் பிடியிலிருந்து பறிபோகுமா? அல்லது அப்படியொரு துர்ப்பாக்கிய சூழலை எதிர்கொள்ள மேலும் பல உயிர்களைப் பலியிடப்போகிறாரா? மாற்றமடையப் போகும் காலத்தின் போக்குத்தான் இக் கேள்விகளுக்குப் பதில் தரப்போகிறது.

## அதிரடி அய்யாத்துரை



**கடந்த** வாரம் பார்ளிமெண்டில எங்கட மண்ணெண்ணையார் காரசாரமான விவாத மொண்டை நடத்தினவர். அதாவது சில தமிழான கட்சிகள் அதிகாரத் தரப்பிடமிருந்து பணம் வேண்டினமாம். அதுகள் எந்தக் கணக்கில எப்புடி வரவு செலவு வைக்கப் படுதெண்டு கேட்டிருந்தார். மண்ணெண்ணையாரின்ர உந்தக் கேள்விக்கு ஆளும் கட்சிக் கொறடா அப்புடி ஒரு நிதிக் கொடுப்பனவெல்லாம் தாங்கள் கொடுக்கிறதில்லையெண்டு சொன்னவர். பிறகு சபை முடிஞ்சு வெளியாலை வந்தவரிட்டை உதென்ன சம்பந்தமில்லாத கதையொண்டைக் கதைச்சியள் எண்டு கூத்தமைப்பு எம்.பி. ஒருவர் தண்ர தாடியைத் தடவிக் கொண்டு கேட்டதுக்கு மண்ணெண்ணையார், அதொண்டுமில்லை, கொஞ்சநாளா சிங்கப்பூரிலை இருந்திட்டு வந்தனானெல்லோ, அதுதான் ரெண்டெழுத் தாருக்கு ஒரு இதுவா இருக்கட்டுமே எண்டிட்டுத்தான் உப்பிடிச் சொன்னனான் எண்டு ஒரு மடக்கு மடக்கினவராம். சில தமிழான கட்சியெண்டவரெல்லோ, அதுக்குள்ள இருக்கிற மண்ணெண்ணையாரிண்ட சிநேகிதர்கள் உதைப் புரிஞ்சுகொள்ளுவினம் எண்டும் ஒரு திருப்தியாம். என்ன சொல்லுங்கோ. யானைக்குக் கொடி பிடிச்சு பதவி எடுத்து, ரெண்டெழுத்தாருக்குப் பந்தம் பிடிக்கிறதுக்கும் ஒரு அது வேணுமுங்கோ. உந்தக் கோடு மறிப்பு விளையாட்டிலை மண்ணெண்ணையார் வலு விண்ணன் கண்டியளோ.

**கேர்ணல்** முத்தலிப்பின்ர கொலை தொடர்பாக நாளுக்கு நாள் பக்கம் பக்கமாக வர்ற செய்திகளைப் பார்க்கேக்க ஒரே பச்சை பச்சையா எழுதினம் எண்டதிலைதான் எங்கையோ உதைக்குது. பிஸ்கோத்துக் கம்பனி வாங்கித் தாரமெண்டு ஒரு கொந்துராத்து பேசியிருக்கினமாம். பிறகு என்னவெண்டால் பத்திரிகைக்காரர் ஒருவரும் பங்குதாரர் எண்டும் சொல்லப்படுகுது. கூட்டிக் கழிச்சுப் பார்த்தால் கேர்ணலின்ர கொலைக்குள்ள பணமும் பொலிரிக்கும் சம்பந்தப்பட்டிருக்கெண்டது தெரியுது. பாத்தியளோ..... எங்கட பொலிரிக்ஸ் படுகொலைகளுக்கு கொந்துராத்துப் பேசிக் குடுக்கிற அளவில போயிட்டுது. பத்திரிகையின்ர பெயராலை படுகொலை நடந்திருக்கு. தர்மங் கதைக்கிறவையெல்லாம் வேடிக்கை பார்க்கினம். தும்பிக்கை இருக்கிறவை படுகொலைகளிலை நம்பிக்கை வைக்கிறது நாட்டுக்கு நல்லதில்லையுங்கோ.

**பின்னேரம்** ஆறுமணியாகுதெண்டால் பிள்ளைகளைப் படிக்கச் சொல்லி பெத்ததுகள் சொல்லுவினம். ஆனால் இப்ப என்ன நடக்குதெண்டு தெரியுமோ? திருவாணமலையில பொழுது சாஞ்சாப் பிறகு பால் வித்தியாசம் இல்லாம இளசுகளை கூட்டம் கூட்டமாகக் கூட்டிக் கொண்டு திரியினம். பிள்ளைகளெல்லாம் கூடிக் கூடிப் போகினமே எங்கை போகினம் எண்டு கேட்டன். சனம் உரத்துச் சொல்லவே பயந்து கொண்டு வாயுக்குள்ள குசுகுசுக்குதுகள். இரவிலை ரெண்டெழுத்தார் ரெயினிங் குடுக்கினமாம். அப்புடிப் போகாத பிள்ளைகளை கருணாவின்ர ஆதரவுக் குடும்பங்கள் எண்டு விரட்டினமாம். ஆகையாலைதான் பெற்றோரின்ர பேமிஸனுக்குக் காத்திருக்காம பிள்ளைகளை இரவோடை இரவா ஒரு இடத்திலை கூப்பிட்டுப் பயிற்சி கொடுக்கினமாம். என்னதான் சிறுவர்கள் தொடர்பான அமைப்புகள் வாய் கிழியக் கத்தினாலும் நடக்கிறது நடந்துகொண்டு தானுங்கோ இருக்கு. என்ன, பிடிச்சுக்கொண்டு போறது ஒரு ஸ்டைல் எண்டால், இருக்கிற இடத்திலேயே பயிற்சி கொடுக்கிறது லேட்டஸ்ட் ஸ்டைல். உந்த அநியாயத்தை நடக்கிறதெல்லாம் நன்மைக்கே எண்டு சொல்ல ஏலாதெண்டு சனம் சொல்லுதுகள்.

**கொழும்பு** கோட்டையில இருக்கிற கிறிஸ்துவப் பள்ளி ஒன்றில கடற்பணியாளர்களை நினைவுகூர்ந்து கௌரவிக்கிற விதமாக ஒரு பங்ஷன் போனவாரம் பத்தாம் திகதி நடந்துது. வைபவங்களின்ர ஒரு அம்சமாக மதகுருமார் ஆசி வழங்கிச்சினம். அதிலை தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவம் என்று மூன்று மதங்களின்ர பிரதிநிதித்துவம் இருந்துச்சுது. பாதர் விஸ் பண்ணினாப் பிறகு எழுந்த ஐயர்வாள் ஆசீர்வதிச்ச விதம் கேட்டவைக்குப் புல்லரிக்கச் செய்துதுங்கோ. "சர்வேஸ்வரனாகிய ஏசுகிறிஸ்து உங்களை ஆசீர்வதிப்பாராக. ஓம் சாந்தி சாந்தி" எண்டு அவர் சொன்னதும் மதங்களின்ர மகத்துவம் இதுதானெண்டு புரிஞ்சுகொண்டினமாம். எல்லா மதமும் ஏதோ ஒரு வழியிலை உந்த அந்நியோன்னியத்தையும் அன்பையும் தான் மெயின்டெயின் பண்ணினம் எண்டதை சிலைகளின் பெயரால் சிக்கெடுக்கிறவை புரிஞ்சு கொண்டினமெண்டால் சரிதானுங்கோ.

**சனங்களிட்டை** வரி கப்பமாக வாங்கின பணமெல்லாம் இப்ப கொலையாளிகளுக்கும் உளவு பாக்கிறவைக்கும் கூலியா குடுபடுதாம். கேணல் ஒருவர் மூலமாகப் படைத்தரப்பின்ர பீரங்கிப் பிரிவு இரகசியங்களை ரெண்டெழுத்தார் வாங்கப் பாத்ததும், இன்னொரு கேணலின்ர கொலைக்காக கோடிக்கணக்கில கை மாற இருந்ததும் இப்ப அம்பலத்துக்கு வந்திருக்கு. ரெண்டெழுத்தார் பணம் கொடுத்து ஆயுதம் வாங்கினது போதுமெண்டு இப்ப ஆக்களை வாங்குகினமாம். "பணமெண்டால் பிணமும் வாயைப் பிளக்குமாம்" எண்டதைப் போல சில பிணந்தின்னிப் பிசாசுகள் பணத்துக்காக ஆலாப் பறக்கினமாம். நாட்டில நடக்கிற அல்லது நடக்கப் போகிற பாதகமான செயலுக்குப் பின்னாலை பயங்கரவாதமும், பாதாளமும் - பணமும் தானுங்கோ கூட்டணி அமைச்சிருக்கினமாம். சட்டம் ஒழுங்கை கவனிக்கிறவை கூடுதல் கவனம் எடுக்காட்டில் நாடு நடுக்கடலில்தான் போகப் போகும். புரியுதோ...

**போனவாரம்** சபையிலை பயங்கரவாதிகளுக்கு பணம் வழங்குவதை தடை செய்யும் சட்டமூலத்தை அதிகாரத் தரப்பார் கொண்டு வந்திச்சினம். உந்த சட்ட மூலத்துக்கு ஆளும் கட்சிக்காரரும், யானைக் கட்சிக்காரரும், சிவப்புச் சட்டைக்காரரும் சேர்ந்து வாக்களிச்சிச்சினம். உதுக்கு எதிர்ப்புத் தெரிவிச்சது மண்ணெண்ணை யாரும் கூத்தமைப்பு எம்.பி.மார் இருபதுபேரும் தானுங்கோ. அதுசரி, இவை ஏன் எதிர்த்திச்சினம் எண்டால், தமிழ் மக்களுக்கு நிதி உதவிகள் கிடைப்பதை முடக்கத்தான் அதிகாரத் தரப்பு உந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்காம். அதாலைதான் தாங்கள் எதிர்க்கினமாம். அடிடா சக்கை எண்டானாம். அப்புடியெண்டால் தமிழரெல்லாம் பயங்கர்வாதியளோ. ரெண்டெழுத்தாரையே நாட்டில பயங்கரவாதிகள் இல்லை எண்டு சொன்னாப் பிறகு, தமிழ் மக்களை பயங்கரவாதிகள் எண்ட தொப்பியை உந்த கூத்தமைப்பு எம்.பி.மார் போட்டிருக்கினமே... பயங்கரவாதிகளைப் பற்றிப் பேசினால் இவையேன் தமிழர்களை உதுக்குள்ளை இழுத்திச்சினம்? எதிர்த்தரப்பு ஆசனத்திலை இருக்கினம் எண்டதாலை எதை எதை எதிர்க்கிறதெண்ட விவஸ்தையே தெரியாமப் போயிட்டுது.

# பொகவந்தலாவையில் காடழிப்பு

எழில் கொஞ்சும் மலையகமாம் பொகவந்தலாவையின் அண்மைய நிலையினை நினைக்கும்போது எதிர்காலம் என் கண்ணில் இருளாகத் தெரிகிறது. பொகவந்தலாவை பிரதேசத்தின் காடுகளில் இருந்து கருப்பன் தேயிலை மரங்கள் வெகு அதிகமாக வெட்டப்பட்டு வருகின்றது. இந்நடவடிக்கையானது கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக நடைபெற்று வருகின்றது. இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை இதுநாள்வரை எவரும் மேற்கொள்ளவில்லை என்பதுதான் மனவருத்தத்துக்குரியது.

ஏனென்றால், பொகவந்தலாவைப் பிரதேச மேல், மத்திய, கீழ் பிரிவுகளுக்கான மக்களுக்கு இக்காட்டிலிருந்தே நீர் பெறப்படுகிறது இக்காட்டினை இங்கிருக்கும் மரங்களை - வெட்டிக் கொண்டு செல்வதன்மூலம் எதிர்காலத்தில் எங்களுக்கான நீர் எங்கிருந்து பெறப்படும் என்பதுதான் கேள்வியாகவுள்ளது. அதுமட்டுமல்ல. தோட்ட நிர்வாகிகளின் தொடர்புடன் நடைபெறுகின்ற நடவடிக்கையினை இந்தத் தோட்ட மக்கள் பார்த்தும் பாராமலும்போல் இருப்பது இந்நடவடிக்கையினை தடுக்க வழி இல்லாததன் காரணம் தான் ஏனென்றால் இது தோட்டத் துரை மற்றும் அனைவருக்கும் தெரியும். அத்துடன் இப்பகுதிக்கு் காட்டின் கருப்பன் தேயிலை மரங்களை வெட்டி தன் தேவைகளை சுயநலனுக்காகச் செய்வதற்காகப் பெரிய பெரிய வாகனங்கள், லொறிகளை இங்கு கொண்டுவந்து ஏற்றிச் செல்வதனால் பாதைகளும் பழுதடைகின்றன. அதனால் பாதிக்கப்போவது எதிர்காலத்தில் நாம் தான் என்பதை அறிந்தும் அறியாமலும் இருப்பவர்களுக்கு இதனைத் தெளிவுபடுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்கலாம். இந்நடவடிக்கையில் பெரும்பான்மை இனத் தொழிலாளர்களுடன் தோட்டத் தொழிலாளர்களும் இணைந்து இதனை மேற்கொள்வதுதான் தன் விரலை இழுத்து கண்ணையே குத்தும் செயலுக்கு ஒப்பாக உள்ளது. இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

*நலன்விரும்பி,*
*பி. கணேகேஸ்வரன்,*
*பொகவந்தலாவை.*


## மணமகள் தேவை

கனடியகுடியுரிமையுடைய உயரம் 5'10" ஆண்டு 1976 ஆண்மகனுக்கு வாழ்க்கைத் துணை தேவை.

தொடர்புகளுக்கு:-

T.Kumar , 302 - 30teesdale - Pl, Toronto.ont,
Mil il2, Canada. Tel :- 416.6980961



## தமிழ் எழுத்துக்கள் பதிக்கப்பட்ட KEY BOARD விற்பனைக்குண்டு

கல்யாணி, பாமினி, கலகம் பொன்டுடன்
(Fonts) தமிழ் Key Board
விற்பனைக்குண்டு. வெளிநாட்டவர்களுக்கும்
அனுப்பி வைக்கலாம்.



SPG PC COMPUTER
NO. 23, MAY FIELD ROAD, COLOMBO - 13.
Tele. Phone No :- 0777588405


# அல்மா குறூப் தோட்டங்களின் மக்கள் குடியிருப்புக்கள் திருத்தப்படவேண்டும்

நுவரெலியா மாவட்ட வலப்பனை தேர்தல் தொகுதியில் உள்ளவை அல்மா குறூப், சீட்டன், சரணவள்ளி, கிரைமன்ட், லியாங்காவெல்ல போன்ற தோட்டங்களாகும். இத்தோட்டங்களில் மக்களின் குடியிருப்புக்கள் வெள்ளையர் காலத்தில் கட்டப்பட்ட பழைய லயன்கள். ஒரு பக்கத்தில் பத்து காம்பிறாக்களும் மறுபக்கத்தில் பத்தும் இருக்கின்றன. பத்தடி நீளமும், பன்னிரண்டடி அகலமும் கொண்ட இந்த அறைகளில்தான் ஒவ்வொரு குடும்பமும் அடைக்கப்பட்டிருக்கின்றது. லயத்து அறைகள் தோட்டவாரியாகப் பார்த்தால், வீடு என்றோ இல்லமென்றோ அழைப்பதற்குத் தகுதியற்ற நிலையில் அகதிகளை அடைத்து வைத்திருக்கும் முகாம்களாகவே காட்சியளிக்கின்றன. பத்து அடி அகலமும் பன்னிரண்டடி நீளமும் கொண்ட ஒரு காம்பிறாதான் தொழிலாளியின் இல்லம். ஐந்து பேர் அல்லது ஆறு பேர்கள் - சில குடும்பங்களில் அதற்கு அதிகமானவர்களும் அந்த ஒரு அறையில் வாழவேண்டிய நிலையில் உள்ளனர். சமையல் பகுதி, தட்டுமுட்டுச் சாமான்கள் வைத்துக் கொள்ளும் 'கபடா' அறை, உணவுப் பொருட்கள் வைத்துக் கொள்ளவும், மழைக்காலங்களில் அடுப்பெரிக்கும் விறகைப் பத்திரப்படுத்த 'அட்டால்' பகுதியும் உடுப்பு, சில்லறைச் சாமான்கள், பிள்ளைகளின் பாடப் புத்தகங்கள், பெரியவர்களின் உடைகள், உபயோகப் பொருள்கள் இத்துடன் தொழில் செய்யப்போகும் ஆயுதங்கள் அனைத்தும் இந்த அறையிலேயே வைக்க வேண்டிய சூழ்நிலையாக உள்ளது. அத்தோடு மிகப் பழைமை வாய்ந்த கூரைத் தகடுகள் ஓட்டை ஓடிசலாக இருப்பதால் மழைக்காலத்தில் அறையினுள் தெப்பக்குள நீர்த்தேக்கம் வந்தடையும். வெயில் காலங்களில் வெண்ணிலவின் ஒளி வீட்டுக் கூரை வழியாக அறைக்குள் தெரியும். ஓட்டைக் குடைக்குள் ஒன்பது உருப்படிகளுடன் குடித்தனம் என்ற நிலையில் வாழ்ந்து வருகின்ற இம்மக்கள் வாழ்கின்ற வாழ்க்கையை மழைக்காலத்தில் நேரில் வந்து பார்த்தால்தான் உண்மை நன்கு விளங்கும். இப்போது மலையகப் பகுதிகளில் இயங்கிவரும் மனிதவள அபிவிருத்தி (Plantation Human Development Trust) நிறுவனத்தினால் பெருந்தோட்டப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வீடமைப்புத் திட்டமானது தோட்டப்பகுதிகளில் புதிய விடுதிகள் அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளமை பெரிதும் வரவேற்கக்கூடிய விடயமாகும். இவ்வாறான பழைமையான மக்கள் குடியிருப்புக்களை அபிவிருத்தித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளும்போது இப்பகுதியில் உள்ள தோட்டங்களையும், சேர்த்துக்கொள்ள வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். அத்தோடு தோட்டங்களில் தொழில் புரியா குடும்பங்களையும் எதுவிதமான பாகுபாடுமின்றி இந்த அபிவிருத்தி திட்டத்தில் சேர்த்துக்கொண்டு இவர்களுக்கும் புதிய குடியிருப்புக்களான விடுதிகளை அமைத்துக் கொடுத்தால் இப் பகுதி மக்களும் பெரிதும் பயன்பெறுவார்கள். எனவே இதைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உதவி புரிய முன்வர வேண்டும் என இப்பகுதி மக்களும் நலன் விரும்பிகளும் மிகவும் வினயமாக வேண்டுகோள் விடுக்கின்றனர்.

*–ஆர்.பாலசந்திரன், கந்தபளை.*

விளம்பரப் பகுதி


## GROW TECH

2005 BATCH 8,9

A/C & REFRIGERATOR · ELECTRONIC

முழுமையான Theory யுடன் பூரன Practical வழங்கப்படும் ஆரம்ப வகுப்பானது இலவசமாக நடாத்தப்படுவதுடன் மேலதிக விபரத்தினையும் விண்ணப்பப் படிவத்தினையையும் இத்தினத்தில் பெறலாம். கிழமையில் ஒரு நாள் நடைபெறும் (கல்வித் தகைமைகள் எதிர்பார்க்கப்படமாட்டாது).

**KANDY - NCI**
Kotugodella Street, Kandy
Bentota Bake Hourse · மேல் மாடி · NCI
19 July செவ்வாய் (11.00 மணி)

**KURUNEGELA GTC**
மாவதகம - பரகஹதெனியக்கு இடையே 8ம் கனுவ பாலத்திற்கு அருகாமையில்
Kandy Kurnegela Road. · Grow Technical College
20 July புதன் (11.00 மணி)

தபால் மூல விபரங்களுக்கு : NO . 02, HINDAMADA WATTA, ILLUKEWELA. TEL 0777-070805


## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**


இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:


| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ:265 |


சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் **D.D. Enterprises** என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு **16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் **"Manager Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06.** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- **(E-mail):- murasu@sltnet.lk**





## நிரூபித்துக் கொண்டு இருக்கும் மலையாள மாந்திரீக சக்தி

விரும்பிய காதல், விரும்பியோர் சம்மதத்துடன் நிறைவேற, பிரிந்த காதல் ஒன்று சேர, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடனும் நிறைவேற, திருமணம் தோஷம் நிவர்த்தி செய்துகொள்ள, வாஸ்த்து முறைப்படி வீட்டுக் காவல் செய்ய, ஓடிப் போனவர்கள் தேடி வர, மனப் பயம் நீங்க, தாழ்வு மனப்பான்மைக்கும், கணவன் மனைவி, ஸ்திரி புருஷர் உச்சரிக்கப்பட்ட ஆண்கள் காம வசிய லேகியம் பெற, மூல ரோகத்தில் அவதிப்படுபவர்களுக்கு 1008 உறு செய்யப்பட்ட லேகியத்தால் குணம் பெற, ஒற்றைத் தலைவலி நீங்க, தலை முடி உதிர்வதை நிறுத்தி நீண்டு வளர, முடி கறுக்க அபூர்வ நீராவி ஔஷத தைலம் பெற, வீடு மனை வதிவிட சிக்கல் தீர, எதிரிகள் அஞ்ச, எதிரிகளை முறியடிக்க, ஸ்ரீ லக்ஷ்மி வீட்டுக்கு வாசம் செய்ய, குறிப்பிட்ட வியாபாரத்தில், குறிப்பிட்ட இலாபம் பெற, மது போதையில் இருந்து விடுபட, குழந்தை பேறு கிட்ட, ஆஸ்துமா நோய் ஆயுள் வரை இல்லாமல் இருக்க, இன்னும் உங்கள் குறை நிறைகளுக்குத் தீராத மானிட கரும தோஷங்களுக்கு 48நாள் எமது ஸ்ரீ துர்க்கை அம்மனின் மண்டலாபிசேக பூஜைக்குப் பின் வெற்றி கண்டவர்கள் எத்தனை எத்தனை பேர். அன்றன்று வந்து குவியும் சன்மானங்களும், நெய்வேத்திகளும், வந்தால் வந்திருக்கும் வாடிக்கையாளரிடமே உண்மையைக் கண்டறியலாம். குறிப்பாக நாம் மட்டுமே! இத்துறையில் வாங்கும் பணத்திற்கு Guarantee Card கொடுக்கின்றோம். நாம் மட்டுமே இத் துறைக்கு வருமான வரி செலுத்துபவர்கள்! இது எமது உண்மைச் சேவையை எடுத்துக் காட்டுகிறது. வெளி நாட்டவர்களுக்கு விசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவின் மூலம் கடல் கடந்து செயல்படக்கூடிய வகையில் தியானித்து அனுப்புவதால், கைகண்ட பலனை அடைகிறார்கள். சாதிக்க முடியாத காரியங்களை எனது மலையாள மாந்திரீக சக்தியால் நிரூபித்துக் காட்டிய எனக்குக் கிடைத்த சான்றிதழ்களை தாராளமாக நேரில் பார்க்கலாம்.

**நுவரெலியாவிலும், கொழும்பிலும் மட்டுமே எமது துர்க்கா தேவி ஆலயம் உண்டு. வேறு கிளைகள் இல்லை.**

நுவரெலியா கிளை:
மலையாள மாந்திரீக உச்சாடன பீடம்.
ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்,
No.33, கண்டி வீதி,
நுவரெலியா.
T/No. 052 22508 - 23093 Fax: 235097.

"உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி"
Prof. Dr. P.K.Samy (J.D.G.A.N) J.P.
Malayala Manthirika Uchchadana Peedam,
Sri Durka Devi Aalayam, 162, Kotahena Road, Colombo - 13.
T/No. 2342463/2342464/2470615 Fax: 2344832
4613133/4613124/2431137.


## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்

# இன்னொருவர் பார்வையில்

*இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முக்கிய அதிகாரியான லெப்டினன்ட் கேர்ணல் துவான் முத்தலிப்பின் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்களில் முன்னாள் இராணுவத் தளபதியொருவரின் மகனும், மற்றும் சில சிங்களவர்களும் அடங்குவர். இராணுவத்தின் ஊடுருவித் தாக்கும் பிரிவிலும் முக்கிய பங்கு வகித்தாரென்று கூறப்படும் லெப்டினன்ட் கேர்ணல் முத்தலிப்பின் மரணத்துக்குப் புலிகளே காரணகர்த்தாக்களென்று பொலிஸ் தரப்பில் குற்றஞ்சாட்டப்படுகிறது. ராஜன் என்ற இயக்கப் பெயர் கொண்ட முக்கிய புலி உறுப்பினரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளாரென்று பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன. மட்டக்களப்பு, மின்னேரியா இராணுவ முகாம்களில் புலிகளின் முக்கிய உறுப்பினர்களுக்கும் இராணுவ அதிகாரியின் மகனுக்குமிடையில் பல சந்திப்புகள் இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது. இராணுவ இரகசியங்களை வழங்குவதற்கு இராணுவ அதிகாரிக்கு ஐம்பது இலட்ச ரூபாவும் சிங்கள வர்த்தகருக்குப் பத்து இலட்ச ரூபாவும் வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் கூறப்படுகிறது. லெப். கேர்ணல் முத்தலிப் கொலை தொடர்பாக கடந்த ஏழாம் திகதி 'த ஐலண்ட்' பத்திரிகை வெளியிட்ட ஆசிரியர் தலையங்கத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு இங்கே தரப்படுகிறது.*

## கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் பதுங்கி வாழும் புலிகள்

இலங்கை இராணுவத்தின் முதலாவது புலனாய்வுப் பிரிவின் தலைவரான லெப்டினன்ட் கேர்ணல் ரி.முத்தலிப்பின் கொலை தொடர்பாக புலி இயக்க உறுப்பினர் மூவரும், இரு சிங்களவர்களுமாக ஐந்து சந்தேக நபர்களைப் பொலிசார் கைது செய்துள்ளனர். இரத்மலானையிலுள்ள புலிகளின் மறைவிடமாக விளங்கிய வீட்டினைப் பொலிசார் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியபோது ரைபிளொன்றினையும், சிறு சுடுகலன்களையும், துப்பாக்கி ரவைகளையும் கைப்பற்றினர்.

மக்கள் செறிந்து வாழும் கொழும்பின் சுற்றுப்புறப் பகுதியொன்றில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மை, யுத்த நிறுத்தத்துக்குப் பிந்திய காலகட்டத்தில் புலிகள் பாரியளவில் நகருக்குள் ஊடுருவியிருக்கிறார்கள் என்பதற்கு அசல் உதாரணமாகும். சந்தேக நபர்கள் அப்பகுதியிலுள்ள பிஸ்கட் தொழிற்சாலையொன்றில் வேலை செய்து வந்துள்ளனர். தற்கொலைத் தாக்குதல் நடத்துவதற்கான உரிய தருணம் வரும்வரை செல்வந்த வீடுகளில் வீட்டுப் பணியாளர்களாக தமது பெண் தற்கொலைக் குண்டுத்தாரிகளை வேலைக்கு அமர்த்துவது புலிகளின் பிந்திய உத்தியாகும்.

அரசாங்க புலனாய்வு அமைப்புகளை பலவீனப்படுத்தும் அதே வேளை, புலிகள் தமது புலனாய்வு வலைப் பின்னலை விஸ்தரித்து வருகின்றனர். இதுவரை கிட்டத்தட்ட நாற்பது இராணுவப் புலனாய்வுச் செயற்பாட்டாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இன்னும் பலர் புலிகளின் கொலைப் பட்டியலில் உள்ளனர். இராணுவ புலனாய்வுத் தரப்புச் சந்தித்த மிகப் பெரிய அடி, லெப்டினன்ட் கேர்ணல் முத்தலிப்பின் படுகொலையாகும்.

லெப்டினன்ட் கேர்ணல் முத்தலிப்பைக் கொல்வதற்கு அனுப்பப்பட்ட கொலையாளிகள் பயன்படுத்திவந்த மறைவிடம்பற்றி இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு முன்கூட்டியே தெரிந்திருந்ததென்று முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரான எச்.எம்.ஜி.பி.கொட்டகதெனியா தெரிவித்துள்ளார். ஆனால், முத்தலிப் படுகொலை செய்யப்பட்ட பின்னர் அந்த இடத்துக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் சென்றபோது, அது கைவிடப்பட்டிருந்ததைக் கண்டு பிடித்தனர். அவர்கள் ஏற்கனவே அந்த இடத்தைப் புகைப்படம் பிடித்தனரென்றும் கொட்டகதெனியா தெரிவித்திருந்தார். ஆனால் புலிகளின் இந்த மறைவிடத்தை இராணுவ புலனாய்வுப் பிரிவினர் நேர காலத்தோடு முற்றுகையிட்டுத் தேடுதல் நடத்த முடியாதபடி யுத்த நிறுத்த ஒப்பந்தம் தடை செய்துவிட்டது. தமது விருப்பப்படி யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஆதரிப்பவர்களாகக் காட்டிக் கொண்டு புலிகளின் ஊடுருவலைத் தடுக்கும் முயற்சிகளை எதிர்ப்பவர்கள் மீது இதனை வலுவான குற்றச்சாட்டாக முன்வைக்க முடியும்.

அரச புலனாய்வுப் பிரிவுகளைப் பொறுத்தவரை யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒரு சுருகு தடமாக இருந்தாலும், யுத்தத் தயாரிப்புகளை மேற்கொள்ளும் புலிகளுக்கு அது தடையாக அமையவில்லை. அரசாங்கத்தின் அடிமைத்தனத்துக்கு எவ்வித எல்லைகளுமில்லை. அரசாங்கம் உறுதியாக எதிர்த்து நின்று என்ன செய்ய வேண்டுமென்று புலிகள் அமைப்புக்குச் சொல்ல முடியாமல் நடுநடுங்குகின்றது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி தமது பிரிவினைவாத இலக்கினைப் புலிகள் அடையாமல் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதிலாக, புலிகளின் யுத்த அச்சுறுத்தலைப் பயன்படுத்தி தென்பகுதி மக்களை பயமுறுத்த அரசாங்கம் முனைகிறது. இதன்மூலம் பொதுக்கட்டமைப்புப் போன்ற திட்டங்களை அங்கீகரிக்கும் வகையில் அரசாங்கம் சாந்தப்படுத்தல் வேலைகளில் ஈடுபடுகின்றது. இது அமெரிக்கா மீது பயங்கரவாதத் தாக்குதலை நடத்தப் போவதாக அல்-குவைதா அச்சுறுத்தல் விடுப்பதால் அல்-குவைதாவோடு பொதுக்கட்டமைப்பொன்றினை ஏற்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்குமாறு அமெரிக்க மக்களை ஜனாதிபதி புஷ் கேட்பதைப் போன்றதாகும்.



யுத்தத்தைப் போல் புலனாய்வும் முக்கியமானது. இராணுவம் கண்ணுக்குத் தெரியாத எதிரியைப் பார்ப்பதற்கு இது வழி வகுக்கின்றது. இராணுவத்திற்கு திறமையான புலனாய்வுப் பிரிவு இல்லையென்றால், அது இருட்டறைக்குள் கறுப்புப் பூனையைத் தேடிப் பிடிக்க முனையும் ஒருவரின் நிலையைப் போன்றது போலிருக்கும்.

எவ்வித பயமுமின்றி யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் ஒவ்வொரு ஷரத்தையும் மீறுவதற்குப் புலிகளால் முடியுமென்றால், அதுவும் குறிப்பாகப் புலிகள் யுத்த அச்சுறுத்தலை விடுக்குமொரு சந்தர்ப்பத்தில் அரசாங்கம் சுய பாதுகாப்புக்காகச் செயற்படக் கூடாதென்று கூறுவதற்கு எவ்வித காரணமுமில்லை. கொழும்பு நகரில் தூங்கும் அறைகளுக்குள் மறைந்திருக்கும் புலி உறுப்பினர்களிடமிருந்து அதிகளவில் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் பந்தோபஸ்துப் படையினரைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். புலிக் கொலையாளிகளிடமிருந்து தப்புவதற்கு வேறு வழியில்லாததால் கொழும்பிலும், கொழும்பின் சுற்றுப்புறப் பகுதியிலுமுள்ள பயங்கரவாத மறைவிடங்களில் சுற்றிவளைப்புத் தேடுதல்களை மீள ஆரம்பிப்பதைப் பற்றி அரசாங்கம் தீவிர கவனத்தில் கொள்ள வேண்டும். இரண்டாவதாக அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடமாடுவதற்கு புலிகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட வேண்டும். அத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் ஹெலிகொப்டர் பயண வசதிகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும். இராணுவத்தினரைக் கொல்லும் புலிகளுக்கு, அதே இராணுவத்தினர் பாதுகாப்பு ஊழியர்களாகச் செயற்பட வைப்பதன் மூலம் இராணுவத்தினரை இம்சிக்கக் கூடாது. புலிகளின் அழைப்புக்கு அடிபணிபவர்களாக விமானப்படையினரைப் பயன்படுத்துவதன் மூலம் அவர்களை இம்சிக்கக் கூடாது. புலிகளின் சாதாரண இலிகிதர்களும், பிரபாகரனின் மைத்துனிகளும் கூட, இலங்கை விமானப் படையின் ஹெலிகொப்டர் சவாரிகளைப் பயன்படுத்துகின்றார்கள்.

இறைமையுள்ள நாட்டின் அரசாங்கம் பயங்கரவாத அமைப்பொன்றுக்கு முன்னால் சாஷ்டாங்கமாக விழுவது கேவலமானதாகும். அதுமட்டுமல்ல, ஒரு தேசத்துக்குச் செய்யப்படும் மிக மோசமான அவமானமுமாகும்.

***நன்றி: 'த ஐலண்ட்'***

---


**"உங்கள் வீட்டுப் பணிப்பெண் தூங்கும் ஓர் தற்கொலைக் குண்டுதாரியா?" என்ற தலைப்பில் சமிந்திரா பெர்னாண்டோ என்பவர் எழுதிய கட்டுரை கடந்த ஆறாம் திகதி 'த ஐலண்ட்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. எந்த ஒப்பந்தத்தையும் மதிக்காமல் எந்த நேரத்திலுமே தற்கொலைத் தாக்குதல்களைப் புலிகள் நடத்தத் தயாராகிக் கொண்டிருப்பார்களென்று கூறும் அவரது கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.**

## பணிப்பெண்களாகத் தற்கொலைக் குண்டுதாரிகள்!

புலிகள் தமது கரும் புலிகள் தினத்தை வடக்குக் கிழக்கில் வருடா வருடம் அனுஷ்டித்து வருகின்றனர். 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பின்னர் முதலாவது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடைபெற்ற நெல்லியடியிலும் இந்த வைபவத்தை அனுஷ்டித்து வருகின்றனர். 1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் 5ஆம் திகதி முதலாவது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடைபெற்றது. நெல்லியடி இராணுவ முகாம் மீது வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட வாகனமொன்றினை ஓட்டிச் சென்று, தாக்குதல் நடத்திய கப்டன் மில்லர் என அழைக்கப்படும் மனிதக் குண்டுதாரியை நினைவு கூரும் வகையிலேயே இந்தத் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. ஒப்பரேஷன் லிபரேஷன் நடவடிக்கையின்போது, பருத்தித்துறையிலிருந்து 3 கிலோ மீட்டர்கள் தென்மேற்காக அமைந்திருந்த நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இராணுவ முகாம்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. கேந்திர இராணுவ நிலைகள் மீதும், பொருளாதார நிலைகள் மீதும் இலக்கு வைத்து கரும்புலிகளும், கரும் கடற்புலிகளும் நடத்திய தாக்குதலில் 270 தற்கொலைக் குண்டுதாரிகள் கொல்லப்பட்டனர் என்பதை நம்புவது கஷ்டமாகவிருக்கிறது. ஒஸ்லோவின் ஏற்பாட்டில் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் இந்த வருடாந்த நிகழ்வுகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல்வாதிகளும் பங்குபற்றி வருகின்றனர். தமிழர் கூட்டணியைச் சேர்ந்த எம்.பி.யும் அரசியல் யாப்பு நிபுணருமான நீலன் திருச்செல்வம் தற்கொலைக் குண்டுதாரியொருவரால் கொல்லப்பட்ட போதிலும்கூட, கூட்டணி எம்.பி.க்கள் கரும்புலி தின நிகழ்வுகளில் பங்குபற்றி வருகின்றனர்.

புலிகள் தமது கடைசித் தற்கொலைக் குண்டுத் தாக்குதலைக் கடந்த வருடம் ஜுலை மாதம் நடத்தினர். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை இலக்கு வைத்து இத் தாக்குதல் நடத்தப்பட்டது. இத் தற்கொலைக் குண்டுதாரி, தன்னை இனங்காட்டிக் கொள்வதை மறைக்கும் முகமாக செல்வந்தக் குடும்பம் ஒன்றில் வேலை பார்த்து வந்தார் என்பதை இரகசியப் பொலிசாரின் விசாரணைகள் அம்பலப்படுத்தின. முன்னைய தற்கொலைக் குண்டுதாரிகள் இவ்வாறு பணி புரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இப் பெண்ணின் உண்மையான அடையாளத்தை பொலிஸார் இதுவரை உறுதி செய்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது தாக்குதல் நடத்துமாறு குண்டுதாரிக்கு உத்தரவு கிட்டும் வரை தலவத்துக்கொடையிலுள்ள ஐ.தே.க.



**தலவத்துகொடவிலுள்ள ஐ.தே.க.அரசியல்வாதியொருவர் வீட்டில் பணிப்பெண்ணாக வேலை செய்த தற்கொலைக் குண்டுதாரி இவர்தான்**

அரசியல்வாதி ஒருவரின் வீட்டில் பணிப் பெண்ணாக வேலை பார்த்து வந்தார். கொழும்பு பிளாஸாவிற்கு முன்பாகவுள்ள அமைச்சரின் அலுவலகத்தில் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கு அண்மையிலுள்ள கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தற்கொலைக் குண்டுதாரி குண்டினை வெடிக்க வைத்தார். இதனால் இரு பொலிஸ்காரர்களும், இரு பாதுகாப்பு உதவியாளர்களும் கொல்லப்பட்டனர்.

நடுத்தர வயதுடைய பெண்ணொருவரின் உதவியுடனேயே தற்கொலைக் குண்டுதாரி அந்த அரசியல்வாதியின் வீட்டில் பணிப் பெண்ணாக வேலை பெற்றார். இப் பெண்மணி வேலை வாய்ப்பு முகவராகவும் பணியாற்றி வந்தார். இப் பெண்ணின் புதல்வரொருவர் அடிக்கடி முல்லைத்தீவிற்குச் சென்று வந்தவர். பின்னர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள யுவதியொருவரைத் திருமணம் செய்து கொண்டார். இந்த அரசியல்வாதி முன்னாள் ஐ.தே.க. அமைச்சரொருவரின் மகனாவார். தற்கொலைக் குண்டுதாரியின் புகைப்படம் பொலிஸ் தலைமையகத்தின் கோரிக்கையின் பேரில் தேசியப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பின்னர், அப் பெண்ணின் அடையாள அட்டையைப் பார்த்து, உடனடியாகவே இரகசிய பொலிஸாருடன் தொடர்பு கொண்டனர்.

பின்னர் இடம்பெற்ற விசாரணைகள் இந்த அடையாள அட்டை மோசடியான முறையில் பெறப்பட்டிருந்ததையும், அதற்கு ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட ஒரு குழுவினர் உதவியிருப்பதையும் அம்பலப்படுத்தின.

குறுகிய கால அவகாசத்தில் தாக்குதல் நடத்தத் தயாராகக்கூடிய நிலையில் "தூங்கிக் கொண்டிருக்கும் ஓர் ஏஜன்ட்" என்று பொலிஸார் இப் பெண்ணை வர்ணித்தனர். இவரைப் போல வேறு பலரும் தமது சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

தற்கொலைக் குண்டுதாரிகள் தாக்குவதற்கு எப்போதுமே தயாராக இருக்கிறார்கள் என்பதையே இவை காட்டுகின்றன. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையோ அல்லது பெரியளவில் விளம்பரப்படுத்தப்பட்ட சுனாமிக்குப் பின்னரான செயற்பாட்டு முகாமைத்துவ சபையோகூட புலி உறுப்பினர்கள் மீண்டும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்துவதை தடுத்துவிடப் போவதில்லையென்பதையும் இவை நிரூபிக்கின்றன. சுனாமிக்குப் பிந்திய செயற்பாட்டு முகாமைத்துவ சபைக்கு தேவானந்தா ஆதரவு தெரிவித்துள்ளபோதிலும், தன் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதலொன்றுக்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நோர்வே ஏற்பாட்டாளர்களிடம் முறையிட்டதைக் கேட்கக் கூடியதாகவிருந்தது. தேவானந்தாவின் முறைப்பாடு குறித்து நோர்வே கவனத்தில் எடுக்கவேயில்லை.

மட்டக்களப்பு - அம்பாறைப் பகுதியைச் சேர்ந்த நாற்பது கரும்புலிகள் தாக்குதல் நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்டுள்ளனரென்று புலிகளின் மாவீரர் நலன் பிரிவு அறிவித்துள்ளது. தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் இறந்தோரின் எண்ணிக்கை 263 எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

***நன்றி: 'த ஐலண்ட்'***

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

"வாலியண்ணே, நான் அசந்து போகிற மாதிரி நீங்க ஒரு பல்லவி சொன்னீங்கன்னா அந்த மூணையும் எடுத்துக் கொள்ளலாம்" என்று, ஆர்மோனியப் பெட்டியின் மீது தன்னுடைய எட்டுப் பவுண் கழுத்துக் கங்கிலியையும், தங்கச் செயின் கொண்ட ROLEX வாட்ச்யையும் நான்கு பவுண் மதிப்புள்ள



மோதிரத்தையும் எடுத்து வைத்தார்.

அது, கதாநாயகன் பாடும் ஒரு சாதாரண காதல் பாட்டுக்கான சிச்சுவேஷன்தான், இருப்பினும் அதன் பல்லவி, தன்னை அசத்துவதாக இருக்க வேண்டும் என்று அவர் என்னிடம் பந்தயம் கட்டினார்.

நான் தாம்பூலம் தரித்து கடைவாயில் புகையிலையைத் திணித்துக்கொண்டு - ஐந்து நிமிட சிந்தனைக்குப் பிறகு, ஒரு பல்லவியை எழுதி அவரிடம் நீட்டினேன்.

நான் இதில் வெற்றி பெறுகிறேனா என்னும் ஆர்வத்தில் பட இயக்குநர் திரு. சங்கர், படாதிபதி திரு. ஜி.என். வேலுமணி, கதாசிரியர் திரு.மா.லட்சுமணன் ஆகியோர் ஓர் இறுக்கமான மௌனத்தோடு அமர்ந்திருந்தனர்.

நான் கொடுத்த பல்லவியை வாங்கி அண்ணன் விஸ்வநாதன் அவர்கள் படித்துப் பார்த்தார்.

உடனே - ஆர்மோனியப் பெட்டியின் மீது வைத்திருந்த செயின், மோதிரம், வாட்ச் மூன்றையும் என்னிடம் தந்தார். நான், உடனே அவை அனைத்தையும் அவரிடம் திருப்பிக் கொடுத்து "எனக்குத் தேவை உங்கள் ஆசீர்வாதம் மட்டுமே...." என்று அடக்கமாச் சொன்னேன்.

நான் எழுதிய பல்லவி இதுதான்:

***'காற்று வாங்கப் போனேன் - ஒரு கவிதை வாங்கி வந்தேன்! - அதைக் கேட்டு வாங்கிப் போனாள் - அந்த கன்னி என்ன வானாள்?'***

அண்ணன் விஸ்வநாதன் அவர்களின் ஆழ்ந்த ரசனை எத்தகையது என்பதற்காக இதைச் சொல்ல வந்தேனே தவிர என் பெருமையைப் பேச அல்ல.

'படகோட்டி'யின் பாடல்கள் பெரும்பாலும் பதிவாகிவிட்ட நிலையில், ஒரே ஒரு பாடல் எழுதி ஒலிப்பதிவு செய்ய வேண்டியிருந்தது.

அந்த நேரத்தில் நான் கடுமையான ஜுரத்தால் பாதிக்கப்பட்டு, வீட்டில் படுத்த படுக்கையாகக் கிடந்தேன்.

திரு. வேலுமணி அவர்களுக்கோ, பாட்டு மிக மிக அவசரத் தேவை. உடனே ஒலிப்பதிவு செய்து மறுநாள், படப்பிடிப்பை நடத்தியாக வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் இன்னும் மூன்று மாசத்திற்கு எம்.ஜி.ஆர். கால்ஷீட் கிடைப்பது துர்லபம்.

இந்த ஒரு பாட்டை மட்டும் வேறு யாரையாவது வைத்து எழுதி விடலாம் என்ற நிலை வந்த போது, விஸ்வநாதன் அவர்கள் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை.

ஆர்மோனியப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு, பக்க வாத்தியக்கார்களோடு என் வீட்டிற்கே வந்துவிட்டார்.


அப்போது நான் தனிக்கட்டை; திருமணமாகவில்லை.

படுக்கையில் படுத்தவாறே, விஸ்வநாதன் அவர்களின் வர்ண மெட்டிகேற்ப நான் வார்த்தைகளைச் சொல்ல, உதவி இயக்குநர் ஒருவர் அதை எழுதி முடித்தார்.

"அருமையான பாடல்களை வாலி அண்ணன் இந்தப் படத்துல எழுதியிருக்காரு. இந்த ஒரு பாட்டுக்காக இன்னொருவரைத் தேடிச் செல்வது தர்ம நியாயமல்ல..." என்று வாதாடினவர் திரு. விஸ்வநாதன்.

எந்தக் கவிஞன் மனமும் நோகக் கூடாது என்பதில் சர்வஜாக்கிரதையாக இருக்கக்கூடிய பெருந்தகை அவர்.

(தொடரும்.......)




---

## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....




### வாக்கர் செயல்பட்ட விதம்

உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் உள்ள நண்பர்களையும் உறவினர்களையும் வாக்கர் தம்முடைய நிறுவனத்தில் சேர்த்துக்கொண்டு ரகசியத் தகவல்களை எவ்வாறு சேகரிக்க வேண்டும் என்று விசேஷ பயிற்சிகளையும் அவர்களுக்குக் கொடுத்தார். தன்னுடைய தலைமை அலுவலகத்தில் உட்கார்ந்தபடியே உலகெங்கிலிருந்தும் தகவல்களைச் சேகரிக்கக்கூடிய மிகப் பெரிய அமைப்பை அவர் வைத்திருந்தார்.

பல நாடுகளிலும் தன்னுடைய ஆட்கள் சேகரித்த தகவல்களையும் வாக்கர் சொந்த விமானத்தில் பறந்து சென்று நேரிடையாகவே பெற்றுக் கொள்வார். கிடைக்கின்ற தகவல்களின் மதிப்பையொட்டி வெகுமதிகளை அவர்களுக்கு தாராளமாக வழங்குவார். அவ்வாறு சேகரித்த தகவல்களை ரஷ்யர்களுக்குக் கொடுத்து அவர்களிடமிருந்து பெருந்தொகைகளைப் பெற்றுக் கொள்வார்.

வாக்கரைப் பொறுத்தவரையில் உளவு பார்த்தல் அவருக்கு ஒரு தொழில். தேசத் துரோக காரியத்தில் ஈடுபடுகிறோம் என்கிற குற்ற உணர்ச்சியை அவர் ஒரு போதும் பெற்றதில்லை. நூதனமான கருவிகளையும் அவர் நிறைய வைத்திருந்தார். தொழிலை ரகசியமாகவும் மிகுந்த பாதுகாப்புடனும் அவர் செய்தார். துண்டு துணுக்குகளாக பல்வேறு இடங்களிலிருந்து அவர் செய்திகளை சேகரித்தார். ஒவ்வொரு செய்தியினையும் தனித் தனியாக பார்க்கும் போது முக்கியமில்லாத சாதாரண செய்தி போன்றே தோன்றும். அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும் போதுதான் அதனுடைய முழுமையான முக்கியத்துவம் விளங்கும். செய்தி சேகரிக்கின்றவர்களுக்கு அதன் முக்கியத்துவம் தெரியாமல் இருக்க வாக்கர் கையாண்ட வழி இது.

செய்திகள் அனைத்தும் தலைமையகத்தில் தான் ஒருங்கிணைக்கப் பட்டு தேவையான வடிவத்தை அடையும்.

வாக்கர் பற்றிய உண்மைகள் வெளியானபோது, அவருடைய செயல்களால் அமெரிக்க பாதுகாப்பு எந்த அளவுக்கு பலவீனப்பட்டுப் போயிருக்கிறது என்பது தெரிந்தது. பாதுகாப்புக்குப் பொறுப்பேற்றிருந்த அதிகாரிகள் மலைத்துப் போனார்கள். அமெரிக்க நீர் மூழ்கிக் கப்பல்கள் எங்கெங்கே செயல்படுகின்றன, என்னென்ன நவீன சாதனங்களோடு செயல்படுகின்றன போன்ற பல அடிப்படையான ரகசியங்களை வாக்கர் மூலம் ரஷ்யர்கள் அறிந்திருந்தார்கள்.

### நார்வே உளவாளியின் கதை:

ஆர்னே ட்ரியோல்டு என்பவர் நார்வே நாட்டைச் சேர்ந்த ராஜதந்திரி (Diplomat). ரஷ்யாவுக்கு ரகசியத் தகவல்கள் கொடுத்ததாக 1934 ஜனவரியில் அவர் கைது செய்யப்பட்டார்.

மாஸ்கோவிலிருந்த நார்வே தூதரகத்தில் அவர் வேலை பார்த்தார். அப்போது அங்கே நடைபெற்ற காமக்களியாட்டங்களில் அவரும் பங்கு கொண்டார். அது சம்பந்தப்பட்ட புகைப்படங்களை ஆர்னேயிடம் ரஷ்யர்கள் காட்டி தங்களோடு ஒத்துழைக்கும்படி பிளாக் மெயில் செய்தார்கள்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---

குழந்தைப் பேறு இல்லாமைக்குப் பெண்களது மலட் டுத் தன்மை மாத்திரமன்றி, ஆண்களது மலட்டுத் தன்மையும் ஒரு காரணமாகும் என்பதை இப்பகுதியில் நாங்கள் இதற்கு முன்பதாகவும் பல்வேறு சந்தர்ப் பங்களில் குறிப்பிட்டிருந்தோம்.

தற்போது மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வுகளின் படி, நூற்றுக்கு 40 வீதமான பெண்களும், நூற்றுக்கு 40 வீதமான ஆண்களும் மலட்டுத் தன்மை விருத்தி கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர் என்பது தெரியவந்துள்ளது.

எஞ்சிய 20 வீதத்தினர் ஆண்களாவர். அதாவது விந்துக்களின் செயற்பாடின்மையில் இருக்கும் ஆண்களாவர்.

சிகிச்சைக்கு முன்னரும், சிகிச்சைக்குப் பின்னரும் மேலைத்தேய மருத்துவ முறைமைக்கு இணங்க, விந்துக்களின் செயற்பாட்டுத் தன்மை குறித்து மிகச் சிறிய பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அதன் பின்னர் அச் சோதனையின் பெறுபேறுகளுக்கு ஏற்றபடி ஆயுர்வேத மருந்துகள் வழங்கப்படும்.

மருந்தினை உட்கொள்ளும் கால கட்டத்தினுள் நோயாளர் தனது அன்றாட கடமைகளில் ஈடுபடலாம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும். அத்துடன், மேற்படி சிகிச்சைக்காக மிகச் சிறியதொரு தொகையையே செலவிட நேரிடும்.

# ஆண் மலட்டுத் தன்மைக்கு ஆயுர்வேத மருந்து


இது, பிள்ளைப் பேறு அற்றவர்கள் தொடர்பில் மேற் கொள்ளப்பட்டுள்ள அனைத்து ஆய்வுகளின் போதும் இனங்காணப்பட்டுள்ள விடயமாகும்.

எனினும் ஆண்களின் மலட்டுத்தன்மையை போக்குவதற்கும், அவர்களது வீரியத் தன்மையை வளர்ப்பதற்கும் மேலைத்தேய மருத்துவ முறைகள் இன்னமும் பல்வேறு ஆய்வுகளைக் மேற்கொண்டு வருகின்றன.

பெண்களின் பிள்ளைப்பேறு விருத்தித் தன்மையை அதிகரிப்பதற்காக மேலைத்தேய மருத்துவ உலகம் பல்வேறு மருத்துவ முறைகளையும் மருந்து வகைகளையும் கண்டு பிடித்துள்ளது.

ஆனால், ஆண்களின் நிலைமை இதில் துன்பந் தரத்தக்க ஒரு நிலையைக் கொண்டிருப்பதாகச் சமூக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

எனினும் இக்குறையை உரிய முறையில் போக்கி, ஆண்களின் வீரியத் தன்மையை வளர்த்தெடுப்பதற்காக அதாவது அவர்களுக்கான குழந்தைப் பேறு கிடைக்கக்



கூடிய தகுதியை வளர்த்தெடுப்பதற்கு சிகிச்சை முறைகளும், மருந்துகளும் சிங்கள ஆயுர்வேத மருத்துவ முறைகளில் உள்ளதாக ஒரு மருத்துவச் செய்தி கூறுகின்றது.

பரம்பரை ரீதியாகவேனும் மிகக் குறுகிய அறிவை வைத்துக்கொண்டு ஆயுர்வேத மருத்துவ சிகிச்சைகளைப் பலர் வழங்கிவருவதாலும், நிறைந்த பலனுள்ள மிகவும் முன்னேற்றகரமான இம் மருத்துவ முறையை பணத்தை மட்டும் நோக்கமாகக் கொண்டு பலர் அதில் ஈடுபட்டு வருவதாலும் சிங்கள ஆயுர்வேத முறைமையானது இன்று மக்களிடையே செல்வாக்கை இழந்து வருகின்றது என்பது ஒரு வகையில் உண்மையாகும்.

எனினும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு களின்போது ஆண்களது வீரியத் தன்மையை விருத்தி செய்வதற்கு உரிய ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை முறைகளும், மருந்து வகைகளும் கண்டு பிடிக்கப்பட் டுள்ளன.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படு கின்றதும், இலங்கை ஆயுர்வேத கூடத்தில் தயாரிக்கப் படுவதுமான மேற்படி மருந்துவகைகள் ஆண்களின் மலட்டுத்தன்மையைப் போக்கவல்லது. அத்துடன் சிலரது விந்துக்களில் காணப்படும் குறைந்த செயற்பாடுகளை நிவர்த்தி செய்து, அதனது நிலையை விருத்தி செய்வதற்கும் உரிய பங்களிப்பை வழங்குகின்றது.

தற்போது, நாவின்ன ஆயுர்வேத மருத்துவச் சபையின் முழுமையான அனுமதியுடன் இந்த மருந்து வகை நோயாளர்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், மருத்துவ சபையினால் அனுமதிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவ ஆய்வு கூடத்தில் பட்டதாரி ஆயுர்வேத மருத்துவர்களைக் கொண்டு இதற்கான சிகிச்சை முறைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தற்போது வழங்கப்பட்டுள்ள சிகிச்சை முறைகள் நல்ல பெறுபேறுகளைக் காட்டுவதாக இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகள் கூறுகின்றன.

மேற்படி ஆயுர்வேத மருந்துகளை உபயோகிப பதனால் ஏற்படுகின்ற பக்க விளைவுகள் மிகவும் குறைந்த மட்டத்தைக் கொண்டதாகும்.

இதே நேரம், மிக அதிகமான காலங்கள் சிகிச் சையை மேற்கொள்ள வேண்டியதில்லை. மூன்று மாத காலத்தில் முழுமையான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள இயலும்.



ஆண்களுக்கான மலட்டுத் தன்மை விருத்தியடைவது தொடர் பாகப் பல குறைபாடுகள் கூறப் படுகின்றன. இதில் மிக முக்கிய அம்சமாகக் கணிக் கப்படுவது சுற்றுச் சூழலாகும். இயந் திரங்களுடனான வாழ்க்கை, பிளாஸ்டிக் பாவனைகள் என இன் றைய உல கில் இலகு வாகக் காணவும், உபயோ கிக்கவும் கூடிய பல காரணிகளைக் காரணமாகக் கூறுகின்றனர்.

இந்த மலட்டுத்தன்மையானது ஒவ்வொரு ஆணுக்கும் வித்தியாசப்படுகின்றது. சிலருக்கு பிறப்பு முதற் கொண்டே இந்த மலட்டுத்தன்மை காணப்படும்.


அதிகம் இறுக்கமான ஆடைகளைக் குறிப்பாக கீழாடைகளை அணியும் ஆண்களும் வீரியத் தன்மையை இழக்கின்றனர்.

இதனால் எப்போதும் ஆண்கள் தளர்ந்த ஆடை களை உபயோகிப்பது நல்லது. அத்துடன் உஷ்ணமும் ஆண்களின் மலட்டுத்தன்மை விருத்திக்கு அதிகம் பங்களிப்புச் செய்கிறது.

உஷ்ணப் பிரதேசங்களில் வாழ்பவர்களில் பலர் இந் நோய்க்குட்படுகின்றனர் என விஞ்ஞான ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இன்றைய நவீன உலகில் தொழிற்சாலைகள் பெருகி வந்துள்ளதால், அப்பகுதிகளில் உஷ்ணநிலை மிகவும் அதிகரித்துக் காணப்படுவதும் ஆண்களின் மலட்டுத் தன்மையைத் துரிதப்படுத்துவதாகவே அமைந்துவிட்டுள்ளது.

அதே நேரம் ஒரே இடத்தில் அதிகம் அமர்ந்து இருப்பதாலும் இந்நிலை ஏற்படுவதாகவும் தற்போது ஆராயப்பட்டுள்ளது.



அதிகமாக ஒரே இடத்தில் அமர்ந்து இருப்பது, வெளிக்காற்று இல்லாத அறைகளில் தங்குவது என்பனவும் ஆண் மலட்டுத் தன்மையைக் குறைத்துக் கொள்வதில் பாதகமாகி விடுகின்றது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் குளிர்ச்சியான உணவு வகைகளை உட்கொள்வது நல்லது. குறிப்பாக சம அளவு போஷாக்குடைய உணவு வகைகள், கோப்பி, கடலை, பயறு, உளுந்து போன்ற தானிய வகைகளை உட்கொள்ளலாம்.

-பாரூக்

# சங்கர மடத்துக் கிங்கரர்கள்

**ஆதிசங்கரர்** என்ற மகானால் சுமார் 2500 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவின் நான்கு தலங்களில் நிறுவப்பட்ட ஆதிசங்கர காமகோடி பீடங்களிலொன்றுதான் காஞ்சிபுரம் சங்கரமடம். தொன்மை வாய்ந்த இந்து சமயத்தின் அருமை பெருமைகளையும் நன்னெறி களையும் உலகுக்குப் பரப்பும் உயர்ந்த நோக்கோடு நிறுவப்பட்டது. இந்த மடத்திலுள்ள ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயத்தின் மேலாளராகப் பணியாற்றி வந்த சங்கரராமன் என்பவர், கோயில் வளாகத்துக்குள்ளேயே வைத்து வெட்டியும் குத்தியும் கொல்லப்பட்ட சம்பவம், இந்தியாவெங்கும் அதிர்வலைகளாக எதிரொலித்தது. சங்கராச்சாரியார் ஜெயேந்திரரினதும் இளைய மடாதிபதி விஜயேந்திரரினதும் சில்மிஷங்கள், சின்னத்தனங்கள், ஊழல், மோசடிகளெனப் பலவற்றைக் கூறி சங்கரராமன் அனாமதேயக் கடிதங்கள் மூலமும் நேரடியாகவும் அம்பலப்படுத்துவேனென்று எச்சரித்துவந்தாரென்று தெரிவிக்கப்படுகிறது. இதனால்தான் சங்கராச்சாரியார்களே கூலிப்படையை வைத்து சங்கரராமனைக் கொன்று விட்டார்களென்பது தனிப் படைப் பொலிஸ் தரப்புக் குற்றச்சாட்டு.

காஞ்சிபுரம் சங்கரமடமென்பது சர்வசாதாரண தலமல்ல. 150க்கு மேற்பட்ட அறநிலையங்கள், பாடசாலைகள், மருத்துவ நிலையங்கள், வேதக்கல்வி புகட்டும் குருகுலங்கள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டது. பல நூறு கோடி ரூபா வங்கியில் வைப்பிடப்பட்டிருக்கிறது. இது தவிர சொத்துக்கள், நிலபுலங்கள், ஆஸ்பத்திரிகள், கல்லூரிகளென உடைமைகளும் மடத்தின் பேரில் இருக்கின்றன. இந்தியாவெங்கும் பரந்து வாழும் கோடிக்கணக்கான இந்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றது இந்த மடம். அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள், நடிகர்கள் என்று சங்கராச்சாரியார்களிடம் ஆசி பெற வரும் மேட்டுக்குடியினர் அதிகமாகவிருப்பதால் அரசியல், சமூக, சமயச் செல்வாக்குமிக்க தலமாகவும் இது விளங்குகின்றது. அந்தணர்களின் ஆதிக்கத்திலுள்ள மடாலயம் இது.

மத நம்பிக்கைகளை மூட நம்பிக்கைகளென வர்ணித்துக் கொண்டு பகுத்தறிவு இயக்கமெனத் தன்னை அழைத்துக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட திராவிடக் கழகம் பின்னர் அரசியலிலும் அக்கறை கொண்டது. பார்ப்பனிய எதிர்ப்பை மூலமந்திரமாகக் கொண்டு உருவான திராவிடக் கழகத்திலிருந்தே பின்னாட்களில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட தி.மு.க. உருவானது. தமிழகத்திலுள்ள அ.தி.மு.க. உட்பட அனைத்துத் திராவிடக் கழகங்களும் தி.க.வையும் தி.மு.க.வையும் மூலவேராகக் கொண்டவை. இந்திய மத்திய அரசின் பிரமுகர்கள் முதல் தமிழக மாநில அரசின் முக்கியஸ்தர்கள் வரை சங்கரமடத்துக்கு ஆசி பெற வருவதாலும் சங்கராச்சாரியார்களின் கால்களில் விழுந்து வணங்குவதாலும் துண்டுக் காகிதத்துடன் நினைத்ததைச் சாதித்திடும் வல்லமையும் இந்த மடத்துக்கு இருந்திருக்கிறது. இத்தகைய செல்வாக்குப்பெற்ற சங்கராச்சாரியார்களைச் சங்கரராமனின் கொலை, சந்திக்கு இழுத்து வந்தபோது இந்திய அரசியலில் பெரும் எதிர்ப்பலையையும் அது ஏற்படுத்தியது. இந்துத்துவக் கட்சிகளின் பாரிய எதிர்ப்பைப் பெற்றதோடு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், சங்கராச்சாரியார்கள் விவகாரத்தைக் கவனமாகவும் முறையாகவும் கையாளுமாறு தமிழக முதல்வருக்குப் புத்திமதி கூறிக் கடிதமெழுதுமளவுக்கு அதிகாரச் செல்வாக்கு மிகுந்ததாகவும் திகழ்ந்தது.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும் சங்கராச்சாரியார் ஜெயேந்திரருக்குமிடையிலான தனிப்பட்ட முரண்பாடே சங்கரமடச் சிக்கலுக்குக் காரணமென்றும் சில தரப்புகள் கூறிக்கொண்டன. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஜெயலலிதாவின் அ.தி.மு.க. போட்டியிட்ட 39 தொகுதிகளிலுமே தோல்வியுற்றமையை ஜெயேந்திரர் நையாண்டியாக விமர்சித்தாரென்றும், இதுவே பிரச்சினைக்குக் காரணமென்றும் இத் தரப்புகள் கூறுகின்றன. சென்னை மருத்துவமனையை வாங்குகின்ற விவகாரத்தில் ஜெயேந்திரருக்கும் ஜெயலலிதாவுக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டதாகவும் இத் தரப்புகள் கூறுகின்றன. ஆனால் இக் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த தமிழக முதல்வர், "சட்டம் தன் வேலையைச் செய்ய வேண்டும். பெரியவர்கள், சிறியவர்களென்று பார்க்க முடியாது. சம்பந்தப்பட்ட சகல கோவைகளையும் ஆராய்ந்த பின்னரே சங்கராச்சாரியார் கைதுக்கு அனுமதி வழங்கினேன்" என்று கூறினார்.

தமிழகத்தின் பிரபல பெண் எழுத்தாளர்களான அனுராதா ரமணன், ஜோதிர்லதா கிரிஜா போன்றோர் சங்கராச்சாரியார் மீது சில்மிஷக் குற்றச்சாட்டுகள் தெரிவித்தும் இருந்தனர். இந்தப் பின்னணியோடுதான் சங்கரராமன் கொலை தொடர்பான விடயங்களை கடந்த 24 வாரங்களாக விலாவாரியாக விளக்கினோம். காய்தல் உவத்தலின்றிச் சம்பவக் கோவைகளையே தந்தோம்.

**25**

"அன்பே சிவம்" என்ற அற்புதக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது இந்து சமயம். சிவன் உமாதேவியாரோடு அர்த்தநாரீஸ்வரக் கோலத்தில் காட்சியளிப்பது பெண்ணுரிமைச் சின்னமாகவும் காட்டப்படுகிறது. இந்து மதத்தின் அத்வைத தத்துவமும் அற்புதமானது.

சகல சமயங்களுமே மனித வாழ்வுக்குச் செல்நெறி காட்டுபவையாகவே கூறப்படுகிறது. 'அன்பே சிவம்' என்று கூறுகிறது இந்து மதம். "அயலவன் பசித்திருக்க நீ புசியாதே" என்கிறது. இஸ்லாம் "உன்னைப் போல் அயலானையும் நேசி" என்கிறது கிறிஸ்தவம். "பஞ்சமா பாதகங்களைப் புரியாதே" எனப் போதிக்கிறது பௌத்தம். ஆனால் நடைமுறை வாழ்க்கையில்தான் எத்தனை பிறழ்வுகள் ஏற்பட்டு விடுகின்றன?

இந்துக்களிடையே இன்னமும் நிலவுகின்ற சாதிப் பிரிவினைகளின் தோற்றுவாயாக, ஊற்றுமூலமாக இந்துக்களின் பண்டைய வர்ணாச்சிரம தர்மம் விபரிக்கப்படுகிறது. மனிதர்களை நான்கு வகையாகப் பிரித்துக் காட்டியது வர்ணாச்சிரம தர்மம். மன்னர்களை மையமாகக் கொண்டு சைத்திரியர், சூத்திரர் என்று பிரிவினை காட்டிய புராதன காலத்தின் மாறுதலோடு - அதாவது சமூக வளர்ச்சிப் போக்கோடு சாதிப் பிரிவினையும் வளர்ச்சி பெற்று அதற்குள் தீண்டாமையும் புகுந்து கொண்டு விட்டது.

இந்தியக் குடியரசின் அரசியலமைப்பை எழுதியவர் டாக்டர் ஏ.பி.அம்பேத்கார். இந்துவான இவர், ஓர் தலித் இனத்தவர். தாழ்த்தப்பட்ட சமூக அமைப்பைச் சேர்ந்தவர். இந்துக்களிடையே நிலவிய சாதிக் கொடூரத்தைப் பார்த்து மனம் நொந்து பல்லாயிரக் கணக்கான தலித்துக்களைப் பௌத்தத்திற்கு மதமாற்றம் செய்தவர். ஆனால் இலங்கையில் சாதி அடிப்படையில் பௌத்த மதபீடங்கள் செயற்படுகின்றன. அஸ்கிரிய பீடம், மல்வத்தை பீடம், ராமன்ய நிக்காயா என்று இப்படிப் பலவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். அது மட்டுமல்ல, பெரும்பாலான மதங்கள் இன்னமும் பெண்களின் உரிமைகளை முக்காடுகளுக்குள் முடக்கி வைத்திருப்பதாகத்தான் குற்றஞ்சாட்டப்படுகின்றன. தமிழகப் பெண் எழுத்தாளரான ஜோதிர்லதா கிரிஜா, சங்கரமடத்தின் மீது இவ்வாறானதொரு விமர்சனத்தைத்தான் முன்வைத்திருந்தார். மேற்கு நாடுகளிலெல்லாம் மத ஆதிக்கங்களை உடைத்தெறிந்து கொண்டுதான் பெண்கள் முன்னேற முடிந்தது. இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில்கூட மதம் காட்டிய விதிகளைப் போட்டுக் காட்டிப் பெண்கள் காரோட்டக் கூடாதென்று தடுக்கும் நாடுகளும் இருக்கின்றன. கணவனின் சடலத்தோடு மனைவியும் உடன்கட்டையேறும் 'சதி' என்ற பாரம்பரிய மரபுக்கும் சமய ஆசாரங்களே தீ மூட்டின. கணவனின் பூதவுடலோடு நெருப்பில் தீக் குளிக்காதவள் கற்பிழந்தவளாகக் காட்டப்பட்ட காலங்களும் இருந்திருக்கின்றன. குடும்பமென்ற முறை தோற்றம் பெற்றதே பெண்ணை மையமாக வைத்துத்தானென்று சமூக ஆய்வியலாளர்கள் கூறுகின்றனர். குழுக்கள் குழுக்களாகக் காடுகளில் வாழ்ந்த புராதன மனிதர்களுக்கும் பெண்ணே தலைமை கொடுத்தாளென்றும் கூறப்படுகிறது.

புராதன சமூகத்தையடுத்து ஆண்டான் அடிமைச் சமூகம் தோற்றம் பெற்று அதிலிருந்து நிலப்பிரபுத்துவ சமூகம் தோற்றம் பெற்றுப் பின்னர் முதலாளித்துவ சமூக அமைப்புத் தோற்றம் பெற்றதாகச் சமூக ஆய்வியலாளர்கள்

காஞ்சிபுரத்திலிருந்து
அருணன் கண்ணன்

கூறுகின்றனர். "மதம் மக்களுக்கு அபினி" என்று கூறிய கார்ல் மார்க்ஸ், முதலாளித்துவ சமூகத்திலிருந்து சோஷலிச சமூகம் தோற்றம் பெறுமென்றும், சோஷலிச சமூக அமைப்பிலிருந்து வர்க்க பேதமற்ற கம்யூனிஸ சமூக அமைப்பு உருவாகுமென்றும் எதிர்வு கூறினார். அவரது எதிர்வுகூறல் வெறும் பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய் விட்டதென்று கூறினால், மார்க்ஸிசத் தோழர்கள் வெடித்துச் சீறுவார்கள். ஆனால் உண்மை அதுதான். விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சிகள் முழு உலகத்தையுமே உள்ளங்கைக்குள் கொண்டு வந்துவிட்டன.

'வால்காவிலிருந்து கங்கைவரை' என்ற ஆராய்ச்சி நூலை எழுதிய ராகுல சாங்கிருத்தியாயன் என்ற துறவி, சிந்துவெளி நாகரிகத்தின் வளர்ச்சிப் போக்குப் பற்றி அற்புதமாக விளக்கியுள்ளார். ஒரு சமயத் துறவியென்றபோதிலும் மனித நாகரிக வளர்ச்சிப் போக்கை அமானுஷ்யமாகப் பார்க்காமல் யதார்த்த நிலைகளோடு ஆராய்ந்துள்ளார்.

(அடுத்த வாரம் முற்றும்)

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

தினமுரசின் அபிமான வாசகர்களே!
உங்களுக்காக சனிப் பெயர்ச்சியின் பின்னரான பலாபலன்களை விரிவாக கணித்துத் தந்துள்ளார் உலக மாந்திரீக சித்தர் பேராசிரியர் டாக்டர் பி.கே.சாமி ஐயா அவர்கள். அறிந்து அனுகூலமடையுங்கள். இதோ அவரது ஆசியும், அருளும்.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது. எண்ணியவாறு எத்தினையாம் திகதி எத்தினை மணிக்கு நிறைவேறும். என்பதை திட்டவட்டமாக தெரிந்து கொள்ள, மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை. வெளிநாட்டவர்கள் FAX மூலம் விபரம் அனுப்பலாம்.
FAX No : 0094 112344832.
ஜோதிடத் திலகம்,
பேராசிரியர் டாக்டர் P.K. சாமி J.D.G.A.N (J.P.)
162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு 13.
தொ.பேசி : 2342463, 2342464, 2470615.

**இந்தப் பகுதியில் சனிப் பெயர்ச்சியையும் குரு மாற்றத்தையும் கலந்து எழுதியுள்ளேன். பொதுவாக ராசி வாரியாக கொடுத்து இருந்தாலும் தீய பலன் உள்ளவர்கள் பயப்பட அவசியம் இல்லை. காரணம் உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ராசி நேயருக்கு இந்த சனிப் பெயர்ச்சி நன்மையாக இருந்தால், நீங்களும் தீயபலனில் இருந்து விலக வாய்ப்பு இருக்கின்றது. நல்ல திசைகளும் துணைக் கிரகங்களின் பார்வைகளும் நன்மையாக இருந்தால் தீய பலன் வருவதற்கு வாய்ப்பு இல்லை.**

**ஓம் சத் மத் யத் மத்**

## ரிஷபம்



3 சனி

சனி பகவான் 24.06.2005 முதல் ராசிமாறி உங்கள் ராசிக்கு மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கிறார். மூன்றாமிடம் சனியின் சஞ்சாரத்திற்கு மிகவும் உகந்த இடமாகும். அதாவது லாட்டரி பிரைஸ் அடித்தமாதிரி என்று வைத்துக் கொள்ளுங்களேன். பாருங்கள் அவர் என்னவெல்லாம் செய்யப் போகிறார், எப்படியெல்லாம் வாரி வழங்கப் போகிறார் என்று. இனி மூன்றாமிடப் பலன்களைப் பார்ப்போம்.

சமுதாய மதிப்பு உயரும். உங்கள் சமுதாயத்தின் முக்கியஸ்தர்களுள் ஒருவராகத் திகழ்வீர்கள். புதியதொரு பதவியும் உங்களை வந்தடையும். அரசியல்வாதிகளுக்கு வெற்றிகள் தேடிவரும். பெற்றவர்களும் சுற்றத்தவர்களும் உங்களை அன்புடன் ஆதரிப்பார்கள். இவன் ஒன்றுக்கும் உதவாதவன் என்று ஒதுக்கியவர்கள் கூட இப்போது ஒட்டி உறவாட வருவார்கள். ஆகா, ஓகோவென்று புகழ்வார்கள் பாருங்களேன். இனி காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு கைகளை வீசிக்கொண்டு ராஜநடை போடலாம்.

காலரைத் தூக்கிவிடக்கூட ஆள் கிடைக்குமென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இனி ஒரு பயலும் வாலாட்ட முடியாது. ரவுடிகூட சலாம் போடுவான்.

தடைப்பட்ட திருமணங்கள் பூர்த்தியாகும். புத்திரபாக்கியம் கிட்டும். பொருளாதாரக் கஷ்டங்கள் அறவே நீங்கி, கையில் தாராள பணப்புழக்கம் ஏற்படும். கடன் தொல்லைகள் மட்டுப்படும். ஒரு சிலருக்கு செலவில்லாமலேயே கல்யாணங்கள் ஜாம் ஜாம் என்று நிறைவேறும். பெண்ணின் அழகைப் பார்த்து மாப்பிள்ளை வீட்டாரே செலவுகளை ஏற்றுக் கொண்டு திருமணத்தை முடித்துக்கொண்டு சென்று விடுவார்கள்.

பகைவர்கள் உங்களுடைய வளர்ச்சி கண்டு அஞ்சி ஒதுங்குவார்கள். உடல் வலிமையும் பலமும் பெற்று விளங்கும். பணியாட்கள் கீழ்ப்படிந்து நடந்து உங்களுடைய காரியங்களை வெற்றி கொள்ளச் செய்வார்கள். அவர்களுடைய ஒத்துழைப்பு திருப்தி அளிக்கும். நல்ல பணியாட்களும் அமைவார்கள். எடக்கு முடக்கு பண்ணியவர்கள் கூட ஒடுங்கிப் போவார்கள். புதிய மனை, வீடு - வாசல் - நிலபுலன்கள் - வாகனங்கள் முதலியவற்றை வாங்கி மகிழலாம். சாதகமான விலைக்கே சில சொத்து பத்துகள் கைக்கு வரக்கூடும். நீங்கள் ஆண்டு அனுபவித்துக் கொண்டிருக்கும் சொத்துக்கள்கூட உங்கள் கைக்கு வரும்.

புதிய தொழில் தொடங்கவும் புதிய வியாபாரங்கள் செய்யவும் ஏற்கனவே செய்த தொழில் வியாபாரங்களை நல்லபடி இலாபம் தரும் வகையில் அமைக்கவும் இது உரிய நேரமாகும். நீங்கள் சிறிதும் எதிர்பாராத இடத்திலிருந்து கூட உதவிகள் கிட்டும். அவர்களே வலிய வந்து உதவிக் கரம் நீட்டுவார்கள். பங்காளிகளாகச் சேருவார்கள்.

உடன் பிறந்த சகோதர சகோதரிகளால் நன்மையான பலன்கள் உண்டாகும். அவர்களது ஆதரவு உங்களுக்கு முழுமையாகக் கிட்டும். அவர்களுக்கும் உங்களுக்குமிடையே மனத்தில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும். செய்கின்ற செயல்களில் நல்ல ஈடுபாடு உண்டாகும். எல்லாக் காரியங்களிலும் வெற்றி கொள்ளலாம் என்ற துணிவு தோன்றும். உடல் ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும்.

சனி பகவான் மூன்றாம் பார்வையாக உங்களுடைய ராசிக்கு ஐந்தாமிடத்தைப் பார்க்கிறார். இதனால் புத்தி சாதுரியம் அதிகரிக்கும். அவற்றைக் கொண்டு பல்வேறு காரியங்களைச் சாதிப்பீர்கள். ரேஸ், சூதாட்டம் - ஷேர் மார்க்கட் முதலியவற்றில் அதிர்ஷ்டப் பரிசுகள் கிடைக்கும். முன்னோர்கள் தேடி வைத்த பூர்வீகச் சொத்து கைக்கு வந்து சேரும். ஒரு சிலருக்கு எதிர்பாராத சொத்துக்கள் கிடைக்கவும் வாய்ப்புண்டு. நீண்ட காலமாகக் குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு இந்தக் காலகட்டத்தில் புத்திர சந்தானம் உண்டாகும். விவாகரத்து கோரியவர்களும் கோர எண்ணியுள்ளவர்களும் மனம் திருந்தி ஒன்று கூடுவர். காதல் கல்யாணங்கள் கூட நிறைவேற வாய்ப்புண்டு. இக் காலத்தில் கரு உருவானால் அந்தக் குழந்தைகள் பிற்காலத்தில் மேதைகளாகக்கூட உருவாகலாம்.

சனி பகவான் ஒன்பதாமிடத்தைப் பார்ப்பதால் தரும காரியங்களில் நாட்டம் உண்டாகும். தெய்வீக திருப்பணிகள் செய்யவும் தீர்த்த யாத்திரை செல்வதற்கும் வாய்ப்புகள் உண்டாகும். தகப்பனாரின் உடல் ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். அவருடன் ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். அவரது தொழில் வியாபாரங்களில் நல்ல இலாபம் உண்டாகும். ஒரு சில பொறுப்புகளை அவர் உங்களிடம் ஒப்படைக்கவும் கூடும்.

சனி பகவான் பன்னிரெண்டாமிடத்தைப் பார்ப்பதால், துரோகிகளாலும் வஞ்சகர்களாலும் உங்களுக்கு ஏற்படவிருந்த சிக்கல்கள் தூள் தூளாகிப் போகும். வஞ்சகர்கள் வசமாக மாட்டிக் கொள்வார்கள். விரயச் செலவுகள் மட்டுப்படும். மனத்தில் நிம்மதி உண்டாகும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். உணவு, உறக்கம் ஆகியவற்றைச் சரியான நேரத்தில் அடைய முடியும்.

பொதுவாக 7 1/2 சனி காலத்தில் அனுபவித்த இன்னல்களுக்கெல்லாம் விடிவு கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம்.

அடுத்து வியாழனைப் பற்றிப் பார்ப்போம். வியாழ பகவான் 19.09.2005 முதல் வருடம் முடிய ஆறாமிடத்திலும் சஞ்சரிக்கவுள்ளார்.

ஐந்தாமிடத்தில் சஞ்சரிக்கும் காலமாகிய 19.09.2005 வரை குடும்பத்தில் திருமணம் போன்ற மங்களகரமான நிகழ்ச்சிகள் நடக்கும். நினைத்த காரியங்கள் கைகூடும். உடல் நலமும் பலமும் பெற்று விளங்கும். புதிய உற்சாகமும் உத்வேகமும் உண்டாகும். பூர்வீகச் சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். நல்ல புத்திர சந்தானப் பிராப்தி உண்டாகும். இக் காலத்தில் கரு உருவானால் அக் குழந்தைகள் பின்னாளில் அதி மேதைகளாக உருவாகக் கூடும். சண்டையிட்டு பிரிந்த தம்பதியர் ஒன்று கூடுவர்.

தனிக் குடித்தனம் செல்ல விரும்பியவர்களுக்கு இது உகந்த காலம். தொழில் வியாபாரங்கள் நல்ல முறையில் நடந்து உயரிய இலாபம் கிடைக்கும். விவசாயிகள் தனதான்இலாபத்தை அடைவார்கள். முந்தைய கையிருப்புகளுக்கு நல்ல விலை கிடைக்கும். யோக பாக்கியங்கள் பெருகும். புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்லும் பாக்கியம் உண்டாகும். பிள்ளைகள் சம்பந்தப்பட்ட விஷயங்கள் நன்மையாக நடக்கும்.

ஒன்பதாமிடத்தைக் குரு பார்ப்பதால் சகல பாக்கியங்களும் குறைவின்றிக் கிடைக்கும். தகப்பனாரின் ஆதரவு பெருகும். தெய்வ அருள் அதிகரிக்கும். மாணவர்கள் தீவிரமாகப் படித்து தேர்வில் அதிக மதிப்பெண்களைப் பெறுவார்கள்.

பதினோராமிடத்தைப் பார்ப்பதால் திட்டமிட்ட காரியங்கள் எளிதில் வெற்றி பெறும். செய்தொழில் வியாபாரங்களில் இலாப வரவுகள் அதிகரிக்கும். மூத்த சகோதரரால் ஆதாயம் உண்டாகும். ஜென்ம ராசியைக் குரு பார்ப்பதால் உடல் பலம் பெறும். சமுதாயத்தில் உங்களது கௌரவம், அந்தஸ்து உயர்வடையும். மனதில் தெளிவும் நிம்மதியும் தோன்றும்.

இத்தகைய நற்பலன்களைக் கொடுத்து வந்த குருபகவான் 19.09.2005 முதல் ராசி மாறி உங்கள் ராசிக்கு ஆறாமிடத்தில் சஞ்சரிக்கவுள்ளார். ஆறாமிட சஞ்சாரம் அவ்வளவு உகந்ததல்ல. என்ன செய்யமுடியும். கிரகங்கள் இடத்திற்குத் தகுந்தபடிதான் வேஷம் போடும் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே. ஐந்தாமிடத்தில் இருந்தபோது அள்ளி விட்ட குருபகவான் இப்போது இழுத்துப் பிடிக்கவே செய்வார். நாம்தான் அதை உணர்ந்து செயல்பட வேண்டும். என்றாலும் இந்தக் கால கட்டத்தில் சனி பகவான் அதீத உதவி செய்யக் காத்திருப்பதால் அதிகப் பாதிப்புக்கு ஆளாக வேண்டிவராது.

பங்காளிகள் கூட பகையாளிகளாக மாறி தொல்லை தருவார்கள். ஆயுதங்களால் உடலில் காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆயுதத்தைத் தீட்டினால்கூட ஆபத்து நேரக்கூடும். பணம் அல்லது மதிப்புமிக்க பொருட்கள் திருட்டுப்போக இடமுள்ளதால் கவனம் தேவை. தேவையில்லாமல் பகட்டுக்காக அதிக ஆபரணங்களை அணிந்து கொண்டு வெளியே செல்ல வேண்டாம். என்னதான் சனி உதவி பண்ணினாலும் குரு தனது மிடுக்கையும் காட்டவே செய்வார்.

நாலு பேர் பார்க்க வேண்டுமென்பதற்காக நகைகளைப் போட்டுக் கொண்டு அலட்டிக் கொள்ள வேண்டாம். தேவையற்ற அலைச்சல்கள், மனக் குழப்பங்கள், பணக் கஷ்டம், வீண் வம்பு, வழக்குகள் முதலியவை இந்தக் காலகட்டத்தில் ஏற்பட வாய்ப்புள்ளதால், எல்லா விஷயங்களிலும் நிதானமுடன் நடந்து கொள்வது அவசியமாகும். தேவையில்லாத விஷயங்களில் தலையிட வேண்டாம். சனிபகவான்தான் முன்றிலிருந்து உதவி செய்யப் போகிறாரே என்று அடிதடி விவகாரங்களில் இறங்க வேண்டாம். வீட்டுக்குள்ளே இருந்தாலும் வம்பும் வழக்கும் வந்து எனக்கும் சோறு போடு என்று வீட்டுக் கதவைத் தட்டும்.

குரு பகவான் ஆறாமிடத்திலிருந்து பத்தாமிடத்தைப் பார்ப்பதால் செய்தொழில் வியாபாரங்களில் எதிர்பார்த்த இலாபம் கிட்டாது. வியாபாரிகள் சில நிர்ப்பந்தங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் ஆளாவார்கள். சமுதாய அந்தஸ்து குறைவுபடும். அரசாங்க கெடுபிடிகளும் உருவாகவே செய்யும். தஸ்தாவேஜுகள் கணக்குகளை ஒழுங்காகப் பராமரித்து வரவும். சேல்டாக்ஸ், இன்கம்டாக்ஸ் தொந்தரவுகள் ஏற்படக் கூடும்.

பன்னிரண்டாமிடத்தைப் பார்ப்பதால் வீண் செலவுகள் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்களில் தடை தாமதங்கள் உருவாகும். மனத்தில் நிம்மதி குறைந்து போகும்.


இரண்டாமிடத்தைக் குரு பார்ப்பதால் கொடுக்கல் வாங்கலில் சுணக்கம் தோன்றும். வர வேண்டிய பாக்கிகள் உரிய நேரத்தில் வந்து சேராது. குடும்பத்தில் குழப்பம் தோன்றும். கணவன், மனைவி இருவருக்குள்ளும் கருத்து வேறுபாடு தோன்றும். எந்த ஒரு விஷயத்திலும் ஈடுபடும் முன்னர் குருவின் ஆறாமிட சஞ்சாரத்தால் இவ்வாறான தொல்லைகள் ஏற்படக்கூடும் என்பதை மனத்தில் கொண்டு செயல்பட்டால் அனேக விஷயங்களில் தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போனது என்ற அளவில் தப்பலாம். சனியால் கிடைக்கவிருக்கும் நன்மைகளையும் அனுபவிக்கலாம்.

(அடுத்த வாரம் தொடரும்...)



ஞாயி றென்ற கோளம் - தருமோர் - நல்ல பேரொ ளிக்கே
தே மீதோர் உவமை - எவரே - தேடி யோத வல்லார்?
வாயி னிக்கும் அம்மா! - அழகாம் - மதியின் இன்ப ஒளியை
நேயமோ டுரைத்தால் - ஆங்கே - நெஞ்சிளக்க மெய்தும்.


- சுப்பிரமணிய பாரதியார்



# அவதிக்காரனுக்குப் புத்தி மட்டு!

மேற்குத் தொடர்ச்சி மலையில் பெரிய காடு ஒன்று இருந்தது.

அந்தக் காட்டிற்குப் பக்கத்தில் குடிசை ஒன்றினை அமைத்து ஒருவர் தங்கியிருந்தார்.



ஒருநாள் அந்த வேடர் தன் குடிசைக்குள் இருக்கும் அடுப்பை மூட்டி சமையல் செய்ய வேண்டி, காட்டில் ஆங்காங்கே உதிர்ந்து கிடக்கின்ற சருகுகளை எல்லாம் பொறுக்கிக் கொண்டிருந்தார் அப்போது முட்செடியின் உள்ளே நாய் ஒன்று சிக்கி கொண்டிருந்தது.

அந்த நாயின் கால்களில் பலமான அடியும் பட்டிருந்தது. அதனால் எழுந்த நடக்க முடியவில்லை. அப்படியே சோர்வோடு படுத்திருந்தது அந்த நாய்.

அந்த நாயைப் பார்த்த வேடருக்கு அதன் மீது இரக்கம் ஏற்பட்டது.

உடனே முட்செடிகளை எல்லாம் விலக்கி விட்டுவிட்டு அந்த நாயை வெளியே எடுத்தார்.

அதனைத் தன் குடிசைக்குத் தூக்கிச் சென்ற வேடர் அதன் காயத்திற்கு மருந்திட்டான்.

பின்னர் அந்த நாயை தன் குடிசையிலேயே வளர்க்கத் தொடங்கினார்.

வேடரால் வளர்க்கப்பட்ட நாயும் கால் காயம் எல்லாம் குணமடைந்து நன்கு செழிப்போடு காணப்பட்டது.

வேடர் அந்த நாய்க்கு வேட்டைப் பயிற்சிகளை எல்லாம் கற்றுக் கொடுத்தார்.

வேடன் கற்றுக் கொடுத்த பயிற்சிகளை எல்லாம் மிகவும் நன்றாக கற்றுக் கொண்டது நாய்.

குறுகிய காலத்திலேயே நாய் அனைத்துப் பயிற்சிகளையும் மிகவும் எளிதாக கற்றுக் கொண்டதே என்று வேடர் மகிழ்ச்சியடைந்தார்.

தான் காட்டிற்கு வேட்டையாடச் செல்லும் நேரமெல்லாம் அந்த நாயையும் உடன் அழைத்துச் சென்றார்.

வேடர் வேட்டையில் ஈடுபடுகின்ற நேரத்தில் பல வழிகளில் அவருக்கு உதவி செய்தது அந்த நாய்.

அந்த நாயின் உதவியானது வேடருக்குப் பயனுள்ள உதவியாக இருந்தது.

வேடரோ அந்த நாயிடம் அதிகமாகப் பாசம் காட்டினார்.

ஒரு சமயம் காட்டில் தொடர்ந்தாற் போல் மழை பெய்து கொண்டிருந்தது. வேடரும் மழையின் காரணமாக வேட்டைக்குச் செல்லாமல் தன் குடிசையின் உள்ளேயே முடங்கிக் கிடந்தார்.

நான்கைந்து நாட்களாகத் தொடர்ந்தாற்போல் பெய்து வந்த மழையானது அன்று ஓய்ந்தபடி காணப்பட்டது. சூரிய வெளிச்சமும் தெரிந்தது.

வேடர் வேட்டைக்குச் செல்ல முடிவு செய்தார். தன் கையில் வில், அம்பு, ஈட்டி போன்ற ஆயுதங்களை எடுத்துக் கொண்டு நாயையும் அழைத்துக் கொண்டு வேட்டைக்குப் புறப்பட்டார்.

வேடரும் நாயும் காட்டின் நடுப் பகுதிக்கு வந்தனர். அப்போது ஏதாவது மிருகங்கள் கண்களில் தென்பட்டால் அறிந்து வந்து கூறும்படி நாயை அனுப்பி வைத்தார் வேடர்.

## பாப்பா முரசு சிறுகதை

வேடர் இன்னொரு பாதையாகச் செல்ல நாயும் வேறு பாதையை நோக்கிச் சென்றது. சிறிது நேரத்தில் நாயானது வேகமாகத் திரும்பி வந்தது. வேடர் எந்த இடத்தில் சென்றுள்ளார் என்பதை முகர்ந்துப் பார்த்து அவரை தேடிக் கொண்டு வேகமாக வந்தது நாய்.

நாய் மின்னல் வேகத்தில் வெறி பிடித்தாற் போல் ஓடிவருவதைக் கண்ட வேடர் திடுக்கிட்டார்.

'நாய் எதற்காக இப்படி ஓடி வருகின்றது? ஒருவேளை இதற்கு வெறி ஏதாவது பிடித்து விட்டதா! எதற்கும் நாம் சற்று எச்சரிக்கையுடன் இருந்து கொள்வோம்!' என்று நினைத்தவாறு தன் கையில் ஈட்டியைத் தயார் நிலையில் வைத்துக் கொண்டார் வேடர்.

நாய் மின்னல் வேகத்தில் ஓடி வந்தபடி வேடரின் மேலாடையைக் கடித்து இழுத்துச் சென்றது.

நாய் நம்மைக் கடித்து விடுமோ என்று வேடர் பயந்தார்.

உடனே அவர் தன் கையிலிருந்த ஈட்டியால் நாயைத் தட்டி விட்டார்.

நாயோ மீண்டும் வேடர் மீது பாய்ந்து, அவர் மேலாடையைக் கவ்வி இழுத்தது. நகத்தால் அவர் கால்களைப் பிராண்டியது.

நாயின் செயலைப் பார்த்த வேடர் 'உண்மையிலேயே இந்த நாய்க்கு வெறிபிடித்து விட்டது போல் தெரிகிறது. நாம் சற்று தாமதித்தோமானால் இது நம்மைக் கடித்துச் சதைகளை இழுத்து விடும். எனவே அதனை நாம் விட்டு வைக்கக் கூடாது" என்று முடிவு செய்தார்.

தன் கையில் இருந்த ஈட்டியால் ஒரே குத்தில் நாயைக் குத்திக் கொன்றார்.

நாயைக் கொல்லும் நேரம் வேடருக்கே சற்று வருத்தமாகத்தான் இருந்தது. 'என்ன செய்வது? இந்த வெறிப் பிடித்த நாயை விட்டு வைத்திருந்தால் நம் உயிருக்கே ஆபத்து ஆயிற்றே! அதனால் அதனைக் கொல்வதைத்தவிர வேறு வழியில்லை!' என்று முடிவு செய்தார்.

நாயைக் கொன்ற வேடர், சற்றுக் கவலையோடு நின்று கொண்டிருந்தார்.

அப்போது திடீரெனத் தான் கண்டக் காட்சியைக் கண்டு திடுக்கிட்டார்.

காட்டில் நாய் ஓடி வந்த திசையில் இருந்து வெள்ளம் கரைபுரண்டு ஓடி வந்து கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார் வேடர்.

அப்போதுதான் தன் அன்பு நாய் எதற்காக ஓடி வந்தது என்பதை அவரால் அறிய முடிந்தது. 'நான்கு நாட்கள் மழையில் காட்டில் ஏற்பட்டிருக்கும் வெள்ளப் பெருக்கை நமக்கு முன்னரே அறிவித்து பாதுகாப்பான இடத்திற்கு நம்மை அழைத்துச் செல்லவே அது நம் மேலாடையை பிடித்து இழுத்திருக்கின்றது. இதனைப் புரிந்து கொள்ளாமல் நாம் அநியாயமாக அந்த நாயைக் கொன்று விட்டோம். இனிமேல் நாம் என்ன செய்வது? என்று கவலையடைந்தார். அவரால் தன் நாயைக் கொன்றதை நினைத்துப் பார்க்க முடியவில்லை.

காட்டு வெள்ளப் பெருக்கில் சிக்கிக் கொண்ட அவரால், நெடுநேரம் நீந்தி உயிர் பிழைக்க முடியவில்லை. தான் நாயைக் கொன்ற அதிர்ச்சி வேறு அவர் மனதை வாட்டிக் கொண்டிருந்ததால் அப்படியே தண்ணீரிலேயே மயக்கமடைகின்ற நிலையினை அடைந்தார். தன் கையில் ஏதோ மிதப்பு போன்று ஒரு பொருள் தட்டுப்படவே அதனைப் பிடித்துக் கொண்டு அதன் மீது சாய்ந்து மயக்கமடைந்தார்.

மறுநாள் காலையில் சூரிய வெளிச்சமானது தன் முகத்தில் பட, மயக்க நிலையிலிருந்து மெல்ல தன் கண்களைத் திறந்தார்.

தான் கரையோரத்தில் ஒதுங்கிக் கிடப்பது அவருக்கு ஆச்சரியத்தை அளித்தது. மயக்கமான நிலையில் தன்னைக் காப்பாற்றிய பிடிப்பை எங்கே என்று பார்த்தார். அதுவும் அவர் அருகிலேயே கிடந்தது.

அதனைக் கண்ட அவர் 'ஓ'வென அழுது விட்டார்.

அவர் வளர்த்து வந்த அன்பு நாய் தான், தான் இறந்த பின்னும் மிதப்பாக பயன்பட்டு அவர் உயிரைக் காப்பாற்றி கரை சேர்த்திருந்தது.

அந்த நாய்க்கு நல்லடக்கம் செய்து முடித்த அவர், கண்ணீர் வடித்தார்.

"என் உயிர் காத்த தோழனே! உன்னை நான் அநியாயமாகக் கொன்று விட்டேனே! இனி நான் இந்தப் பாவத்தினை எங்கே சென்று போக்குவேன்.

இந்த அவசரக்காரனை நீ மன்னித்து விடு" என்று அழுதார்.

# ஆத்திசூடி

## கைவினை கரவேல்

நீ அறிந்த கைத்தொழில்களை வஞ்சனையின்றி மறைக்காது மற்றவர்களுக்கும் கற்றுக்கொடு.

-ஔவையார்


எஸ் நிரஞ்சலா, கண்டி.

# உங்கள் பொது அறிவு எப்படி?

## தெரிந்து கொள்ளுங்கள்

1. அலுமினியம் எந்த ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது - கி.பி. 1800ஆம் ஆண்டு.
2. ஐக்கிய நாட்டுச் சபைக் கட்டிடம் எத்தனை மாடிகளைக் கொண்டது - 35 மாடிகள்.
3. மனிதனின் சுவாசத்தைக் கட்டுப் படுத்தும் பகுதி எது? - மூளையில் முகுளப்பகுதி.
4. உலகில் அதிகமாகப் பயிரிடப்படும் பழம் எது? - ஆப்பிள்
5. ஸ்பெயின் நாட்டின் தேசிய மிருகம்? - கழுதை
6. உலகின் அதிகமான பரப்பளவு கொண்ட நகரம்? - லண்டன்
7. பொலிஸ் இலாகாவிற்குத் துப்பறியும் நாயைப் பயன்படுத்திய முதல் நாடு? - பிரான்ஸ்.
8. பாதரசம் அதிகம் கிடைக்கும் நாடு எது? - இத்தாலி.
9. மூன்று வித ரயில் பாதை கொண்ட ஒரே இந்திய நகரம்? - பெங்களூர்.
10. வெங்காயத்தை அதிகம் உற்பத்தி செய்யும் இந்திய மாநிலம் - மகாராஷ்டிரா.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 20.07.2005

**வர்ணம் தீட்டும் போட்டி இல 604**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
**கொழும்பு.**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 602


**பரிசுக்குரியவர்:**
ஆர். திவ்யா, தரம் - 6B, பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை.

**பாராட்டுக்குரியவர்கள் :**

| | |
|---|---|
| த. விமல்ராஜ், தரம் - 3, இன்ஸ்பேக்டர் ஏத்தம், வள்ளுவர் வீதி, பொத்துவில்-10. | எஸ். கோஷிகன், 113, இரத்தொட்டவீதி, கஹுதாவல, மாத்தளை. |
| எம்.என். அதிக்கா பர்வின், 69, ஸ்டேஸன் வீதி, பொத்துஹெர. | எம். சரிதா, திருவள்ளுவர் வீதி, பாண்டிருப்பு - 01, கல்முனை. |
| யோகராசா சிவரஜினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. | அமானி, தரம் 3, கஹட்டபிடிய முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை. |
| எல். பி. கீர்த்தனா, 53/19, ஸ்ரீ பிரியதர்சன மாவத்தை, கொழும்பு - 10. | ர. நிரஞ்சனா, தரம் 10, மட்/செங்கலடி மத்திய கல்லூரி, செய்கலடி. |
| செ. பிரதாப், 24, 2ஆம் ஒழுங்கை, குருமண்காடு, வவுனியா. | பி. அனோஜன், தரம் - 2B, தூய தோமையர் கல்லூரி, பண்டாரவளை. |




# மீண்டும் விமானமா?



வெள்ளை மாளிகை அதிகாரிகளுக்குத் தொல்லை கொடுத்த விமானம் செப்டம்பர் 11 - 2001இல் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தியது. மே மாதம் 11-2005 அமெரிக்காவில் வெள்ளை மாளிகை அல்லோலகல்லோலப்பட்டது. அமெரிக்காவின் தலைநகரில் உள்ள வெள்ளை மாளிகை ஆகாய வெளியில் ஒரு விமானம் தென்படுவதாகப் பாதுகாப்பு அதிகாரிகளின் வேவு பார்க்கும் ராடார் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. காலை 11.28 இற்கு அபாய அறிவிப்பு ஒலி எழுப்பப்பட்டது. 11.30 இற்கு உடனடியாக அருகில் உள்ள றொனால்ட் றீகன் விமான தளத்திலிருந்து ஏவுகணை தாங்கிய F-16 இரண்டு போர் விமானங்கள் மேல் எழுந்து வெள்ளை மாளிகையை நோக்கி வந்த விமானத்தை நோக்கி 3 எச்சரிக்கை புகையை




ஏவிவிட்டன.

மர்ம விமானத்தின் விமானியும் நிலைமையை உணர்ந்து கொண்டார். தவறுதலாக தடை செய்யப்பட்ட ஆகாய வெளிக்குள் வந்து விட்டதாக உணர்ந்த விமானி, போர் விமானத்தின் வழி காட்டலுடன் வாஷிங்டனில் உள்ள சிறிய விமான நிலையத்தில் தரை இறங்கினார். விமானியும் அருகில் இருந்தவரும் உடனடியாகக் கைது செய்யப்பட்டு விலங்கிடப்பட்டனர். விமானி, விமானப் பயிற்சியாளர் எனவும் மற்றவர் விமான ஓட்டி எனவும் தெரியவந்தது. விமானப் பயிற்சியாளர் அமெரிக்கர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி புஷ் இருக்கவில்லை புஷ்ஷின் மனைவியும் உப ஜனாதிபதியும் அவரது மனைவியும் அவசர அவசரமாக அதிகாரிகளினால் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். முன்னாள் ஜனாதிபதி றீகனின் மனைவியும் சந்திப்பு ஒன்றுக்காக வந்திருந்தார். கூடவே அவரையும் அதிகாரிகள் கூட்டிச் சென்றார்கள். வெள்ளை மாளிகையில் வேலை செய்யும் ஊழியர்களும், உல்லாசப் பிரயாணிகளும் அருகில் இருந்த சுப்ரீம் கோர்ட்டில் இருந்த நீதிபதி உட்பட அனைவரும் அவசரமாக வெளியேற்றப்பட்டனர். வெள்ளை மாளிகையே சிறிய விமானத்தினால் அல்லோல கல்லோலப்பட்டது. பின்பு நிலைமை வழமைக்குத் திரும்பியது. படத்தில், கைப்பற்றப்பட்ட விமானத்தையும் விமானி கைது செய்யப்பட்டு நிலத்தில் வைத்து விலங்கிடப்படுவதையும் வெள்ளை மாளிகையில் இருந்த ஊழியர்கள் அவசர அவசரமாக வெளியேறிச் செல்வதையும் காணலாம்.

# குழப்படிக் குரங்கார்




இந்தக் குழப்படிக் குரங்கார் செய்யும் குறும்புத்தனம் என்ன தெரியுமா? மிருகக் காட்சிச் சாலைக்கு வரும் பார்வையாளர்களிடம் சிகரட் கேட்டு வாங்கிக் குடிப்பதுதான். குரங்கார் குடிக்கும் பாணியே தனிரகமாம். மனிதர்கள் சிகரட் குடிப்பதைவிட ரசிக்கக் கூடியதாக இருக்கிறதாம். இதனால் பார்வையாளர்கள் படையெடுப்பதுடன் சிகரட்டைப் பற்ற வைத்துக் கொடுத்தும் விடுகிறார்களாம். இதனால் குரங்காரின் உடல்நிலை கெடுவதற்குரிய சூழ்நிலை இருக்கிறதாம்.

சாளி என்று செல்லமாக அழைக்கப்படும் இந்தக் குரங்கார், தென் ஆபிரிக்க நாட்டில் உள்ள மிருகக்காட்சிச் சாலைக்கு வரும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளையும் கவர்ந்து இழுக்கிறாராம். மிருகக்காட்சிச் சாலை பேச்சாளர் ஒருவர் கூறுகையில், சாளி ஒரு குழப்படிக்கார பாடசாலைச் சிறுவனைப் போல செயல்படுகிறார். காரணம் என்னவென்றால் மிருகக்காட்சிச் சாலை ஊழியர்களைக் கண்டவுடன் சிகரட்டை ஒளித்து விடுகிறார் குறும்புக்காரக் குரங்கார்.


# நெல்சன் மண்டேலா

நெல்சன் மண்டேலா அவர்கள் தென் ஆபிரிக்க சிறையில் 27 வருடங்கள் அரசியல் கைதியாக அடைக்கப்பட்டு விடுதலையாகி, தேர்தல் மூலம் நாட்டின் தலைவரானார். சிறையில் இருக்கும்போது அவருக்குக் கொடுக்கப்பட்ட இலக்கம் 46664. மண்டேலா பற்றிய பல நூல்கள் வெளிவந்தன. ஆனால், தனது கைப்பட எழுதிய புத்தகத்தின் பெயரும் 46664 என்ற இலக்கம்தான். இப் புத்தக விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தை ஆபிரிக்காவில், கொடிய வியாதியான எய்ட்ஸ் நிதிக்குக் கொடுக்கவிருக்கிறார்.




# அழகு ஆபத்து

ஆங்கிலத்தில் 'அல்பினோ கோப்ரா' என்றும் சிங்களத்தில் நாஜா நாஜா என்றும் அழைக்கப்படும் இவ் வெள்ளை நாகப் பாம்பு இத்தனை குட்டிகளை இட்டிருப்பது, இலங்கையில் இதுவே முதல் முறை என்று கூறும் மிருகக்காட்சிச் சாலையின் ஊர்வனப் பகுதியின் பராமரிப்பாளர் பிரேமசிறி பீரிஸ்,




தாய்ப் பாம்பு

தனக்குத் தெரிந்தவரையில் உலகத்திலேயே இந் நிகழ்வு முதன் முதலில் இடம் பெற்றுள்ளதாகக் கூறுகிறார். அவரிடம் தொடர்ந்து கேள்விகளைத் தொடுத்தோம்.

இப் பாம்புக் குட்டிகளின் பெற்றோர்களான பெரிய பாம்புகள் 1997ஆம் ஆண்டு பிலியந்தலைப் பகுதியிலிருந்து பிடிக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்டுள்ளன. அப்போது இந்தப் பாம்புகள் பிறந்து ஒரு மாதக் குட்டிகளாகவே இருந்துள்ளன. அது தவிர, இவ்விரண்டு வெள்ளை நாகப் பாம்புக் குட்டிகளையும் ஒரே தாய்ப் பாம்பே பிரசவித்திருக்கக் கூடும். ஆகவே, அவையிரண்டும் சகோதரனும், சகோதரியுமாக அப்போது இனம் காணப்பட்டு மிகக் கவனமாக வளர்க்கப்பட்டு வந்துள்ளன.

இவ்விரண்டு பாம்புக் குட்டிகளும் 2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை தனித்தனியாகவே வளர்க்கப்பட்டு, 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டு பாம்புகளையும் இணைவதற்காக ஒன்று சேர்த்துள்ளனர்.

பாம்புகளிரண்டும் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதங்கள் இணைந்




முட்டைகள்

திருந்தன. ஏப்ரல் 4ஆம் திகதி பெண் பாம்பு 21 முட்டைகளை இட்டுள்ளன. இரண்டு நாள் கழித்து அம் முட்டைகளைத் தாயிட மிருந்து பிரித்து, மண் பானையில் சருகு, குப்பை, புழுதி மண் ஆகியவற்றை ஒன்று சேர்த்து, அதற்குள் முட்டைகளையும் வைத்துள்ளனர்.

இக் காலப் பகுதியே மிக அவதான மானதாகும். முட்டைகளுக்கான தட்ப வெட்பம், குளிர் என்பவற்றைச் சீராக வழங்கிப் பாதுகாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பாதுகாக்கின்ற வேலைகளில் எமக்குத் தகவல் தந்த பிரேமசிறி பீரிஸ் மற்றும் கெலும் ஆகிய இருவரும் மிகவும் ஆர்வத்தோடு செயற்பட்டுள்ளனர்.

அடைகாக்கப்பட்ட முட்டைகளில் 12 முட்டைகள் மட்டுமே குட்டிகளின் இருப்பிட மாக இருந்துள்ளன. 12 குட்டிகளும் செம்



தந்தைப் பாம்பு

மஞ்சள் மற்றும் வெள்ளை நிறமுமாகச் சிவப்புக் கண்களோடு முட்டைக்குள்ளிருந்து வெளிப்பட்டபோது பராமரிப்பாளர்கள் அடைந்த பரவசத்துக்கு அளவே இல்லை என்கின்றனர்.

இதில் துரதிர்ஷ்டவசம், இவை பிறந்து இரண்டு நாட்களுக்குள் மாறிமாறி வால்ப் பகுதிகளைக் கடித்ததால் பரிதாபமாக



குட்டிப் பாம்பு

இரண்டு பாம்புக் குட்டிகள் இறந்து விட்டன. இதன் பிறகு மிகுதிப் பத்துக் குட்டிகளையும் தனித்தனியாகப் பெட்டிகளுக்குள் பிரித்து வைத்துள்ளனர். இவற்றில் ஏழு ஆண் பாம்புகள், மூன்று பெண் பாம்புகள் என்பது மற்றுமொரு விடயமாகும்.

இப் பாம்புக் குட்டிகளுக்கு உணவாக ஒரு பயிற்றங் கொட்டையளவான எலிக் குஞ்சுகளே கொடுக்கப்படுகின்றன. உங்கள் சின்ன விரலின் மேல் நுனிப் பகுதியளவே அந்த எலிக் குஞ்சுகள் என்றால் அளந்து பார்த்துக் கொள்ளுங்கள்.


இந்தக் குட்டிகளுக்கும் தாய்ப் பாம்பு களைப் போல் விஷம் இருந்தாலும், இவற்றால் பற்களைப் பதித்து விடக்கூடிய சக்தியோ, பற்களின் நீளமோ போதாது. இது தவிர இப் பாம்புக் குட்டிகள் மேற்படி பெரிய பாம்புகளின் முதல் பிரசவம் என்பதால், இவற்றின் நிறமோ, கண்களின் நிறமோ மாறாது என்றும், அடுத்தடுத்த வம்சப் பாம்புகளுக்குக் கண் நிறம் - உடல் நிறம் மாறக் கூடும் என்றும் கூறுகின்றனர்.

இலங்கையில் முதற் தடவையாகப் பிறந்துள்ள இவ்வெள்ளை நாகப் பாம்புக் குட்டிகளைப் பார்வையிடப் பலர் வந்து போகின்றனர். எதிர்காலத்தில் வெளிநாடுகளுக்கும் பரிமாற்றம் செய்யப்படும் என நம்புவதாக மிருகக்காட்சிச் சாலை அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார்.

இவ்வகையான வெள்ளை நாகப் பாம்புகள் வாழும் இடங்களாக பெல்லன்வில, பொரலஸ்கமுவ, பிலியந்தலை ஆகிய பகுதிகளைக் குறிப்பிடுகின்றனர்.

முரசு வாசகர்களுக்காக இந்த விபரங்களை உற்சாகத்தோடு தெரிவித்த மிருகக் காட்சிச் சாலை பராமரிப்பாளர்களான பிரேமசிறி பீரிஸ், கெலும், சிறிவர்தனா, சுனில், சம்பத் அமரசிங்க ஆகியோருக்கு எமது நன்றிகள்.

*பட உதவி: சிவா.*
*தகவல் திரட்டு: புளோரி.*
*தொகுத்திருப்பவர்: மதி.*



பிரேமசிறி பீரிஸ்




பிரித்திவி ராஜ் - சோனியா கபூர்
அற்புதத் தீவே

## இளையராஜாவின் பாணியில்.....

பரத்வாஜின் இசை ராஜாங்கத்தில் மேலும் ஒரு திருநாளாக இருந்தது 'ப்ரியசகி' படத்தின் ஒலிநாடா வெளியீட்டு விழா. இந்தப் படம் மட்டுமல்லாமல் பெப்ரவரி - 14, பைசா, இதயத்திருடன் என்று எப்போதும் ஆர்மோனியமும், சங்கீதமுமாகப் பிஸியாக இருக்கிறார் பரத்வாஜ்.

அவ்வப்போது தமிழ்நாட்டிலிருந்து இசைக் குயில்களை அழைத்துப் போய் வெளிநாடுகளில் சங்கீதக் கச்சேரிகள் செய்வதும் பரத்வாஜின் பணிகளில் ஒன்றாக இருக்கிறது. சென்ற ஆண்டு எம்.எஸ்.விஸ்வநாதன் - ராமமூர்த்தி இருவரையும் மலேசியாவுக்கு அழைத்துச் சென்று இசை நிகழ்ச்சி நடத்திய பரத்வாஜ், இந்த வருடம் கவிஞர்களை பிளைட் ஏற்றப் போகிறாராம். அதே மலேசியாவில் திரை இசைப்பயணம் என்ற நிழ்ச்சியை நடத்தப் போகிறார். 1939 முதல் 2005 வரையிலான பாடல் வரிகளின் பரிணாம வளர்ச்சி பற்றி பேசப் போகிறார்களாம் இந்த விழாவில். (கூடவே திண்டுக்கல் லியோனியையும் அழைத்துச் செல்லுங்கள்.)



## மாளவிகாவின் கவர்ச்சிக் கலக்கல்

கவர்ச்சியாக நடிப்பதோ அல்லது உடலைக் காட்டி நடிப்பதோ, அது எனது இஷ்டம். இதில் என்னை யாரும் கட்டுப்படுத்த முடியாது என்று கூறுகிறார் மாளவிகா.

ஒரு காலத்தில் தமிழ் சினிமாவில் நடித்துக் கொண்டிருந்தாரே, அதே மாளவிகா தான் இப்படிக் கூறுகிறார். சமீபத்தில் கூட சந்திரமுகியில் குட்டி ரோலில் வந்து போன மாளவிகா இப்போது இந்தியில் புயலைக் கிளப்பியுள்ளார். அதுவும் சும்மா புயல் இல்லை, 'உம்மா' புயல்!

'சி யூ அட் 9' என்ற இந்திப் படத்தில் வரைமுறையே இல்லாமல் வாய் விளையாட்டில் கலக்கியிருக்கிறார் மாளவிகா. அத்தோடு இல்லாமல் நான் தம் அடிக்கிற ஸ்டைலைப் பாரு என்று புகையை விட்டும் பட்டையைக் கிளப்பியிருக்கிறார்.

அப்புறம் அந்தப்புரத்தில் மட்டுமே நடாத்தப்பட வேண்டிய படுக்கையறைக் காட்சிகளிலும் புகுந்து விளையாடியிருக்கிறார். மொத்தத்தில் பூனையாகக் காட்சியளித்த மாளு, இப்படத்தில் புலியென பாய்ந்து பயமுறுத்தியிருக்கிறார்.

இப்படியாப்பட்ட மாளவிகாவுக்கு, 'சி யூ அட் 9' படத்தில் கவர்ச்சியாக நடித்ததற்காக பெண்கள் அமைப்புக்கள் பலத்த எதிர்ப்பும், கண்டனமும் தெரிவித்துள்ளன. இப்படியும் நடிப்பீர்களா என்று கேட்டு வசவுகளும் வந்து விழுந்த வண்ணம் உள்ளன.

ஆனால் மாளவிகாவோ 'டோண்ட் கேர்' என்ற ரீதியில் வசவுகளை வாங்கி வாசலில் போட்டு விட்டு போய்க் கொண்டே இருக்கிறார். அவரது கையில் இப்போது சில இந்திப் படங்கள். இதனால் கோலிவூட்டிலிருந்து இடம் பெயர்ந்து மும்பைக்கு ஜாகையை மாற்றியுள்ளார்.

ஏங்க மாளவிகா, தெலுங்கு நடிகர் ராஜேந்திர பிரசாத், ஷூட்டிங்கின் போது சில்மிஷம் செய்தார் என்பதற்காக ஊரைக் கூட்டி உலையை வைத்தீர்களே, அப்படிப்பட்ட நீங்க, இப்படி நடிக்கலாமா என்று மாளவிகாவைக் கேட்டால், அட அது வேற பிரச்சினை. இது வேற.

இப்படத்தின் காட்சிகளை என்னிடம் சொல்லி விட்டுத்தான் எடுத்தார் இயக்குனர். அந்தப் படத்தில் கவர்ச்சி அதிகம் என்பதை நான் மறுக்கவில்லை. அதேசமயம் அதில் ஆபாசம் இல்லை. நானே எனது குடும்பத்தாருடன் தான் அந்தப் படத்தை பார்த்தேன். இரசித்துப் பார்த்தோம்.

3 காட்சிகளில் மட்டும்தான் கிளாமர் கூடிப்போய் விட்டது. மற்றபடி கடுமையாக எதிர்க்கும் அளவுக்கு அப்படத்தில் கவர்ச்சியோ, அசிங்கமோ இருப்பதாக எனக்குத் தெரியவில்லை என்று தலையைக் கோதிக் கொண்டே கூலாக கூறுகிறார் மாளவிகா.

எல்லாம் சரி மாளு, படத்தில் வரும் சில படுக்கையறைக் காட்சிகளில் முதலில் நடிக்க மறுத்தீர்களாமே, மிரட்டிய பிறகு தான் நடித்தீர்களாமே? என்று கேட்டபோது, அப்படியெல்லாம் கிடையாது. முதல்ல ஒண்ணப் புரிஞ்சுக்கோங்க. இது எனது உடல், இதை எப்படிக் காட்டி நடிக்க வேண்டும் என்பது எனது விருப்பம்.



சத்தியராஜ்
தேவுடா

## பூஜாவைப் புரட்டியெடுத்த புதுச் சரக்கு!

பூஜாவைப் பத்தி கொஞ்ச நாளா சத்தமே காணோமே என்று விசாரித்துப் பார்த்தால் 'படா' செய்தி ஒன்று காதுக்குக் கிடைத்தது.

சிங்களத்து தாய்க்கும், இந்தியத் தந்தைக்கும் பிறந்தவரான பூஜா, இப்போது 2 சிங்களப் படங்களில் நடித்து வருகிறாராம்.

சி
னி
வி
சி
ட்

இந்தப் படங்களின் ஷூட்டிங் தற்போது இலங்கையில் நடந்து வருகிறது. உற் சாகப் பானப் பிரியையான பூஜா, சமீபத்தில் நடந்த ஷூட்டிங்கின்போது ஒரு சரக்கை வாங்கி உள்ளே தள்ளியுள்ளார்.

வெளிநாட்டிலிருந்து வந்த புதுச் சரக்கு என்று அதை பூஜாவுக்குக் கொடுத்துள்ளார்கள். சரக்கும் நன்றாக இருக்கவே கூட சோடா, வாட்டர் எதையும் கலக்காமல் அப்படியே அடித்துள்ளார் பூஜா.

அளவுக்கு மிஞ்சினால் எதுவும் நஞ்சு தானே. இது தெரியாமல் சும்மா கிடைத்த சரக்கை உள்ளே தள்ளிக் கொண்டே இருந்தார். சிறிது நேரத்தில் அந்த இடத்திலேயே வாந்தி எடுத்து மயங்கி விழுந்துள்ளார் பூஜா. உடனடியாக மருத்துவமனைக்குத் தூக்கிக் கொண்டு ஓடியுள்ளனர். அங்கு தீவிர சிகிச்சைக்குப் பிறகுதான் ஒரு வழியாக கண் விழித்தாராம் பூஜா. சரக்கு ஓவராக உள்ளே போனதால், அவரது மூளையை பாதிக்கும் அளவுக்கு நிலைமை சென்று விட்டதாம். சரியான சமயத்தில் கொண்டு வரப்பட்டதால் பூஜா தப்பித்தாராம்.

பல மணி நேரத்திற்குப் பிறகு தெளிந்த பூஜா இனிமேல் சரக்கு இருக்கும் திசைக்கே செல்லமாட்டேன் என்று தன் குடும்பத்தினருக்கு சத்தியம் செய்து கொடுத்தாராம்.

பூஜாவுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை!

## தமிழ் சினிமா நட்சத்திரங்களின் முகவரிகள்

**விஜய்**
No 86/87, State Bank Colony, 3rd street,
Saligramam,
Chennai - 600093.
Phone: 23765748.

**அஜித்**
No 5, Kamarajar Salai, Saligramam,
Chennai 600093.
Phone : 2362 4843

**விக்ரம்**
Gemini`s Rahul
Rangarajapuram
2nd street,
Corporation Colony,
Chennai 600024.
phone : 24846621.



விஜய்
சிவகாசி

**ரஜினி**
No 18, Raghava
Veera Avenue,
Poes Garden,
Chennai 600 086
Phone : 24991291

**கமல்**
New No 404 (Old No 218) T.T.K. Road,
Alwarpet,
Chennai 600018.
Phone : 24351199

வாசகர்களே! உங்கள் மனம் கவர்ந்த சினிமா நட்சத்திரங்களின் முகவரியை நீங்கள் பெற விரும்பினால் எமக்கு எழுதி அனுப்புங்கள். நாங்கள் அம் முகவரியை தர ஆவலாக உள்ளோம்.



சிம்பு - ரீமாசென்
வல்லவன்



ரவி கிருஷ்ணா - கோபிகா
பொன்னியின் செல்வன்

சின்னாவில் படுகவர்ச்சி காட்டி நடித்ததாக சினேகா மீது குற்றச்சாட்டு. இதுபற்றி விளக்கம் சொன்ன அவர், தான் நடித்த பாடல் காட்சி ஒன்றை வீடியோவில் ஒளிபரப்பினார். ஊகூம், அதில் துளியளவுகூட கவர்ச்சியே இல்லை. பாவம் இரசிகர்கள்!

---

கோபிகாவுக்குத் தமிழ்ப் படவுலகில் மவுசு குறைந்து விட்டதால், மலையாளத்தில் தயாராகும் இரண்டு படங்களில் நடிப்பதற்கு கால்ஷீட் கொடுத்துள்ளார்.

---

'காட் ஃபாதர்' வெளியாகும் வரை எந்தப் பத்திரிகைக்கும் பேட்டி கொடுக்க மாட்டேன் என்று சொல்லும் அஜித், பாலா இயக்கத்தில் நடிக்கும் 'நான் கடவுள்' படத்துக்காக தன்னை அடியோடு மாற்றியுள்ளார்.

---

'அந்நியன்' திரைக்கு வந்த பிறகு சம்பளம் ஏற்றுவதற்காகக் காத்திருக்கும் சதா, 'ப்ரிய சகி' படத்தில் மாதவன் மனைவியாக நடிக்கிறார். இந்தப் படத்தில் அவருக்கு குறைந்த சம்பளமாம்.

---

சிக்கன் என்றால் வெளுத்துக் கட்டும் விக்ரம், சிகரெட்டைத் தொடுவதே இல்லை. முன்பு இரண்டு பாக்கெட் பிடித்தவர், இப்போது ஒரு சிகரெட்டையும் பிடிப்பது இல்லையாம்.



நமீதா

தெலுங்கில் பெரிய வெற்றிபெற்ற படம் 'அத்தனொக்கடே'. இந்தப் படத்தைச் சூரியன் ஆர்ட்ஸ் சார்பில் தமிழில் ரீமேக் செய்து தயாரிக்க திட்டமிட்டுள்ள இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகரன், கதாநாயகனாக நடிக்கும்படி விஜய்யிடம் கால்ஷீட் கேட்டார். தற்போது பேரரசு இயக்கத்தில் 'சிவகாசி' படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் விஜய், அடுத்து 'அத்தனொக்கடே' படத்தில் நடிக்க கால்ஷீட் கொடுத்துள்ளார். இந்தப் படத்தை விஜய் நடித்த 'திருமலை', தனுஷ் நடித்த 'சுள்ளான்' ஆகிய வெற்றிப் படங்களை எழுதி இயக்கிய ரமணா இயக்குகிறார். ஏற்கனவே விஜய் ஜோடியாக 'கில்லி', 'திருப்பாச்சி' ஆகிய படங்களில் நடித்த த்ரிஷா, மீண்டும் ஜோடி சேர்ந்து நடிக்கிறார்.



த்ரிஷா

# நிலாவைப் பிழிந்து

**'அ-ஆ'** படத்தின் மூலம் தனது புதிய கண்டுபிடிப்பான நிலாவை அடுத்த சிம்ரனாக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் எஸ்.ஜே.சூர்யா.

வாலி படம் வருவதற்கு முன்பு வரை சிம்ரன் வெறும் கவர்ச்சி ராணியாகவே வலம் வந்து கொண்டிருந்தார் என்பது அனைவருக்கும் தெரியும்.

அந்தப் படம் வெளியான பிறகு தான் அடடா, சிம்ரனுக்கு நடிக்கவும் தெரியுமா? என்று பலர் மூக்கின் மேல் விரலை வைத்தார்கள். அந்த அளவிற்கு கவர்ச்சிக்கு கவர்ச்சி, நடிப்புக்கு நடிப்பு என்று அந்தப் படத்தில் சிம்ரன் பெரும் ரகளையே செய்திருந்தார்.

இந்தப் படத்தில் சூர்யா ஒரு துடிப்பு மிக்க இளம் பத்திரிகையாளராக நடிக்கிறார். இவர் எழுதும் சில அதிர்ச்சியான செய்திகளால் ஏற்படும் சிக்கல்கள் தான் இந்தப் படத்தின் கதையாம்.

நிலாவுக்காக இராப்பகலாக மூளையைக் கசக்கி பல சூப்பர் சீன்களை வைத்துள்ளார் சூர்யா. இந்த சீன்களுக்காக நிலாவை சக்கையாகப் 'பிழிந்தெடுத்து' வருகிறார். நிலாவும் முனகாமல் ஒத்துழைக்கிறார். அடிக்கடி தனது வீட்டுப் பக்கமும் கூட்டிப் போய்விடுகிறார். நடிப்புச் சொல்லிக் கொடுக்க போலிருக்கிறது!!

நிலாவை சிம்ரனாக்குவேன் என்று சூர்யா சொல்லிக் கொண்டிருந்தாலும், நிலா என்ன சொல்கிறார் தெரியுமா?

'சிம்ரனின் நடிப்புக்கு முன்னால் நான் ஒன்றுமே கிடையாது. நடிப்பில் அவர் ஒரு கடல். நான் அதில் ஒரு சிறுதுளி மட்டும் தான் (ஆகா, என்னே தன்னடக்கம்!). இப்போது தான் நான் சினிமா உலகத்திற்குள் நுழைந்துள்ளேன். இன்னும் எவ்வளவோ சாதிக்க வேண்டியுள்ளது. முதலில் இயக்குநர் சூர்யா என்னை நடிக்க அழைத்தபோது எனக்கு சரி, ஏதோ வந்தவரை நடிப்போம் என்று தான் நினைத்திருந்தேன்.

ஆனால் அவரது நியூ படத்தைப் பார்த்த பிறகுதான் சூர்யாவின் திறமை எனக்குத் தெரிய வந்தது. இதனால் எனக்கும் ஒரு வேகம் வந்துள்ளது. இந்தப் படத்தில் எனது முழுத் திறமையையும் காட்டி நடித்து வருகிறேன் (அது தான் தெரியுமே) என்கிறார்.

# 'மத்திய பிரதேச மகாராணி!'

குத்துப் பாட்டு ஆடுவதாக இருந்தால் சொல்லுங்கள், வந்து ஆடி விட்டுப் போகிறேன் என்று படு தில்லாக கூறுகிறார் சபீ கான்.

சபீ கான் யார் என்று தெரியாதவர்கள் உடனடியாக 'தகதிமிதா' படத்தைப் போய் பார்த்துவிட்டு வந்து இந்த செய்தியைப் படித்தால் நல்லது.

வாழைத் தண்டு போல படு நெகிழ்வாக இருக்கும் சபீ கான், பிறந்தது மும்பையில் (அதானே!). பேஷன் டிசைனில் கை தேர்ந்தவர், மாடலிங் செய்து கலக்கியவர், போனால் போகிறதென்று பி.காம் வரைக்கும் படித்தவர்.

பளிச் அழகுடன், படு கவர்ச்சியாக காணப்படும் சபீ கானுக்கு தமிழ் சினிமாவில் வரும் குத்துப் பாட்டுக்கள் என்றால் ரொம்ப இஷ்டமாம். இதனால்தான் மாடலிங்குக்கு தற்காலிகமாக டாட்டா காட்டி விட்டு கோலிவூட்டிற்கு வந்துவிட்டார்.

நடிப்பது, அவார்டு வாங்குவது எல்லாம் சுத்த ஹம்பக். எனக்கு நல்ல அழகு, இளமை உள்ளது. குத்துப் பாட்டு என்றால் ரொம்ப இஷ்டம். அது நமது உடலுக்கும், மனதுக்கும் ஒரு சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

எனவே குத்துப் பாட்டுக்கு மட்டுமே ஆடி இரசிகர்களை மகிழ்விப்பது என்ற கொள்கை முடிவில் இருப்பதாகக் கூறும் சபீ கான், பெல்லி டான்ஸிலும் கை தேர்ந்தவராம்.

தகதிமிதா ஷூட்டிங்கின் போது சபீயின் அழகைப் பார்த்து அசந்து போன யூனிட்டார் அவருக்கு 'மத்திய பிரதேச மகாராணி' என்றே பெயர் வைத்து அழைத்து மகிழ்ந்தார்களாம். மத்திய பிரதேசம் என்றால் என்ன என்று உங்களுக்கும் தெரியும்தானே!

இளம் நடிகர்கள், மூத்த நடிகர்கள், முத்தல் நடிகர்கள் என யாருடன் வேண்டுமானாலும் குத்தாட்டம் போட நான் தயார், அவர்கள் தயாரா என்று முண்டா தட்டி களத்தில் குதித்துள்ள சபீ, கோலிவூட்டில் குத்தாட்டத்தில் சாதனை படைக்காமல் மும்பை திரும்ப மாட்டேன் என்றும் சூளுரைக்கிறார்.



# 'ஸ்லிம்' ஆகிறார் சினேகா!

**ஜோ**திகாவுக்குப் போட்டியாக தொப்பை உப்பி வருவதாக வந்த புகாரையடுத்து உடலை 'ஸ்லிம்' ஆக்கும் முறையில் தீவிரமாக இறங்கி விட்டாராம் சினேகா.

புன்னகை இளவரசியாக வலம் வந்து கொண்டிருக்கும் சினேகா, சமீப காலமாக கவர்ச்சி கலக்கல் ராணியாகவும் மாறி வருகிறார்.

மும்பை இளசுகளுக்கும், கேரளத்து ரவுசுகளுக்கும் போட்டியாக தன்னாலும் கவர்ச்சி காட்ட முடியும் என்ற எண்ணத்தில் படத்துக்குப் படம் கவர்ச்சியில் புகுந்து விளையாட முடிவு செய்து விட்ட சினேகா, சின்னாவில் ஏகப்பட்ட சீன் காட்டி கவர்ச்சியில் கலக்கியுள்ளாராம்.

சின்னா படத்தில் அர்ஜுனுடன் கடற்கரையில் உருண்டு புரண்டதைப் பார்க்க அப்பகுதியில் பெரும் கூட்டமே கூடிவிட்டதாம். சினேகாவின் இந்தக் கவர்ச்சி துள்ளாட்டம் தான் கோடம்பாக்கத்தின் இப்போதைய ஹாட் டாபிக்.

கவர்ச்சி காட்ட முடிவு செய்துவிட்ட சினேகாவுக்கு சில சிக்கல்களும் கூடவே எழுந்துள்ளன. அதில் முதல் சிக்கல் அவரது தொப்பை. ஜோதிகாவைப் போல தனக்கும் சின்னத் தொப்பை அழகாக இருப்பதாக முதலில் பெருமைப்பட்டார் சினேகா.

ஆனால் தொப்பை நாளுக்கு நாள் உப்பத் தொடங்கியதால், பயந்து போன அவர், அதை எப்படிக் குறைப்பது என்று கண்ணில் படுகிறவர்களிடம் எல்லாம் அட்வைஸ் கேட்டார். சில முக்கிய புள்ளிகளின் அறிவுரையால் தொப்பையைக் குறைக்கும் முயற்சியில் சினேகா இப்போது தீவிரமாக இறங்கி விட்டார்.

டீ, காப்பி, தயிர், அரிசி சாதம், நொறுக்குத் தீனி ஆகியவற்றை அறவே தவிர்க்கத் தொடங்கியுள்ளாராம் சினேகா. அதேபோல சமயம் கிடைக்கும் போது பகலில் ஒரு குட்டித் தூக்கம் போடுவார். இதற்கும் 'பை' சொல்லி விட்டார்.

ஸ்லிம் ஆகும் முயற்சியில் சினேகா தீவிரமாக இறங்கியுள்ளதற்கு தமிழ்ப் படங்கள் மட்டும் தான் காரணம் என்று நினைத்து விடாதீர்கள். தெலுங்கும் தான் முக்கிய காரணம். தமிழை விட தெலுங்கில் பல மடங்கு கவர்ச்சி அதிகம் காட்ட வேண்டியிருப்பதால் உடம்பை அழகாக்கியே ஆக வேண்டிய கட்டாயம் சினேகாவுக்கு.

சினேகா ஸ்லிம் ஆனால் அவருக்கு மட்டுமா நல்லாருக்கும். நமக்கும் தான் பார்க்க நல்லாருக்கும். ஆகட்டும், ஆகட்டும்!



சூர்யா - அஸின்
கஜினி




## மறு பிறப்பு

சில சகுனங்களின் சாட்சியாய்,
மலர்வுகளைத் தடுக்க மனம் முயலும்.
உலர்ந்த இலைகள் கழறும்போது,
மலர்வுகள் விரைவாகும்.

தடுப்பதற்கென்றே கடவுளால்
படைக்கப்பட்ட ஆன்மாக்களின்
அழுகுரல்....!
கேட்பதற்கு முடியாதது.

வானம் வசப்படும் கணங்களில்,
காணாமல் போன என்னைத் தேடி,
நானாக இயல்பு தொலைத்து,
மைய மகழும் மகிழ்ச்சியில்
இசைபாடிக் கொண்டிருக்கிறேன்.

ஒவ்வொரு தோல்வியிலும்
உதிரிப் பூக்களைக் கைவருடும்,
கல்லறையில் வைத்து அழுவதற்காய்
அல்ல,
கற்பனையில் வாழ்வதற்காய்....!

வரையறைகளைக் கடந்து,
கனவுகளை விதைத்த உன்
மௌனங்களின் முன்
மண்டியிட்டுத் தொழுகிறேன்.

மறுபடியும் பிறந்துவா.....!
மயில்களின் தோகையுடனும்,
மழைக்காலப் பாடல்களுடனும்.....!

—வி.சாரங்கன், யாழ்ப்பாணம்.

## நிலவோடு ஒரு பேட்டி!

அந்தி
வார்த்தைகளைத் தேடி(க்)
கொண்டு வந்திருக்கின்றது.
இரவின் நிசப்தத்துள்
ான் மொட்டைமாடியில்
கவிதைகளுக்காகக்
காத்திருக்கின்றேன்
நிலவு எனைப்
ார்த்திருந்தது.

பௌர்ணமி நிலவு
ஒரு நல்ல கவிதையைப்
போல
ூரணமாகியிருந்தது.

வெண்ணிலவின்
வெள்ளைப் பார்வை
'வேண்டியதைக் கேள்'
ன்பது போல
னக்குத் தோன்றியது.
னக்கது போதாதா -
நிலவை
ஒரு பேட்டியே எடுத்தேன்.
வார்த்தைகளால் வாட்டியும்
டுத்தேன்.

ான் முதல் கேள்வி!
உங்கள் புகழுக்குக்
காரணம்?
நகலான அமைதி' விடை
வந்தது.

கேள்விகள் விரைந்தன;
விட்டுக்கொடுக்கவில்லை
விடைகளும்....

வயது?
வருடத்திற்கு
பலமுறை பிறக்கிறேன்.

ஒரே நண்பன்?
'கதிரவன்'.

பொழுது போக்கு?
"மேகங்களுடன்
விளையாடுவது"
முதல் விருந்தாளி?
'நாயும், குரங்கும்'.

பலம்?
'இருட்டு'
பலவீனம்?
'வெளிச்சம்'.

பயப்படுவது?
'பகலுக்கு'
வயப்படுவது?
'கவிஞனுக்கு'.

அடுத்த கேள்விக்குத்
தயாரான போது
அம்மா தட்டினாள்....
மொட்டை மாடியில்
என்ன குறட்டை? என்று!

—யூ.எம்.முனீர்,
நிககொள்ள.

## பள்ளிப் பருவ வாழ்க்கை

வெள்ளை உடையினிலே
துள்ளித்திரிந்த - அந்தப்
பள்ளிப் பருவ வாழ்க்கை
மீண்டும் வந்திடுமா?

சுள்ளெனப் புளிப்பூட்டும்
மாங்காயின் துண்டைக்கூட
இனிப்பாகப் பகிர்ந்துண்டோம்
பள்ளிப் பருவ வாழ்வில்.

வீட்டுப் பாடத்திற்கு
விடை எழுத மறந்ததனால்
துள்ளிப் பிரம்படியின்
அடையாளங்கள் அழிந்திடுமா?

கணக்கு வாத்தியாரவர்
வகுப்பிற்கு வரக்கூடாதென்று
கடவுளை வேண்டுகின்ற
காலத்தின் நினைவலைகள்...

எதற்கும் அடங்கிடாமல்
கட்டுப்பாடு பிடித்திடாமல்
வாத்தியாரை வஞ்சம் தீர்த்த
வாழ்க்கை தான் வந்திடுமா?

படி, படி என அடித்தார்;
அப்போது தெரியவில்லை.
இப்போது தெரிகிறது
விளையாட்டின் விபரீதம்.

—மாணிக்கன்
இளங்கோ, பட்டித்திடல்.

## ஒரு ஆத்மா அழுகிறது....!

நீ என்னைக்
கடந்து செல்லும்
ஒவ்வொரு வினாடியும்
ஏதோ இனந்தெரியாத
ரு குளிர்காற்று - எனது
இதயத்தின் ஆழத்தை
நெருடிச் சென்றிருக்கிறது!

நீ
இதழ் குவித்து
உதிர்க்கின்ற புன்னகையைக்
கண்ட என் கண்கள்
சில கணங்களில்
இமைக்க மறந்து
போனதுமுண்டு!

நீ செப்பும்
ஒவ்வொரு வார்த்தை
அமிர்தத்தினையும் - என்
செவிகள்
உன் உத்தரவின்றி
பருகிப் பார்த்திருக்கின்றன!

அடுப்பங்கரையில்
நீ சிந்தும்
வியர்வை முத்துக்களை
தாங்கிப் பிடிப்பதற்காக
இராவணத் தலையாய் -
என்
இதயக் கரங்கள்
என்னுள்
கிளைவிட்டதுமுண்டு!

நீ
வெயிலில் நின்று
சிகையுலர்த்தும் போது -
என்
ஆத்மாவுக்கு
அடிக்கடி வியர்த்திருக்கிறது
-
அந்த அமாவாசை இருட்டில்
அது குடியிருந்ததால்!

—அஸ்ஹனாரும், கிண்ணியா.

## சொர்க்கமென்றால்...?

சாமத்து இரவின்
கலைக்கப்படாத
நிசப்தம்
ூப்பெய்தாத
மொட்டுக்களில்
கறை தொற்றாத
அழகு சத்தங்கள்
தெறிக்காத
இயற்கையின்

மெல்லிய
சிரிப்பு
ஆர்ப்பாட்டமில்லாத
அலைகள் தூவும்
சங்கீதத் தூறல்கள்
இதோ, இதோ
எனக்குள்ளும் - ஒரு
சொர்க்கம் சுரக்கிறதே!

சுகம்தான் இது
என் தனிமை.
கலைக்கப்படுகின்ற
தருணம் வரை
சுகம்தான் இது.

—மு.கீர்த்தியன், ஸ்ரீபாத
கல்வியியல் கல்லூரி.

## சூன்யம்

மறந்துபோக
முடியாத
அளவுக்கு
வடுக்கள்
மனதை
ஆளுகின்றன.

இனி வாழ்ந்து
முடிக்க
எண்ணாத
காலத்திற்கும்
இறந்த
எண்ணிக்கை
ஏங்கிய
பதிவுகளாகும்.

ஓசைகளின்
சோகங்கள்
இப்படி எப்போதும்
இருந்ததே
இல்லை.
இனியும்
இருக்குமா?
என்பதும்
புரியவில்லை.

எத்தனை
எதிர்பார்ப்புக்கள்
எத்தனை
ஏக்கங்கள்
எவ்வளவு
முயற்சிகள்

எல்லாம்
ஏழ்மையாய்
எங்கோ....

இனி
வரலாற்றில்
வடுக்களாய்
இருக்குமே
வயதுபோன
பிற்பாடாய்.

எப்படிச்
சொல்லி
அழுவது.....
எதுவரைதான்
அழுவது
புழுங்கிப்
புழுங்கி
மனசெல்லாம்
வெந்துபோய்
விட்டதே...

ஒரு சமுதாய
பேர் அழிவு
சரித்திரம்
படைக்க
எத்தனை
பேர்களின்
வாழ்வு
தரித்திரமாய்.....

## கணிதமான காதல்...!

பூச்சூடி திலகமிட்டு புதுத்
தாவணியுடுத்து
புனிதமாயிருக்கும் நீ
எனக்குக் கணிதமாகவே
தெரிகிறாய்.

நிலா தேவதை
உலாவரும் அந்த நிசப்த
இரவில் நின்னை
நினைவில் நிறுத்தி
படித்துப் படித்து
தலைமயிரைப் போட்டுப்
பிய்த்து
விடை காணும்
முயற்சியிலே
விடிந்து போகிறது
ஞாயிறு.

நீ கூடுவதுமில்லை
குறைவதுமில்லை;
சரியாகத்தான்
இருக்கிறாய்
உன் கணக்கின்படி.

நான்தான் உன்னை
கூட்டிப் பார்த்தும்
கழித்துப் பார்த்தும்
பிரித்துப் பார்த்தும்

வீணாய் என்
இதயத் தாளை
நிரப்பிக் கொள்கின்றேன்.

—இராமச்சந்திரன்
தவேந்திரன், ஹாலி – எல.


# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

"கவிதையின் புறவடிவமான யாப்பு இன்றைய புதுக் கவிஞர்களால் தேவையற்றதெனக் கருதப்பட்ட போதிலும், கவிதையின் அடிப்படையான, உள்ளமைப்புச் சார்ந்த சில குணாம்சங்கள் அன்றும் இன்றும் பொதுவானவையாகவே இருந்துவருகின்றன. எக்காலத்திலும் யாப்பு – யாப்பின்மைப் பிரச்சினையையும் மீறிய அனுபவப் பகிர்தலாகவே கவிதை இருக்கிறது. எதுகை, மோனை உள்ளிட்ட யாப்பின் வரையறைகள் கவிதையின் அனுபவ வெளிப்பாட்டிற்குச் செறிவும் நுட்பமும் ஏற்படுத்துவதற்காக நேற்றைய கவிஞர்களால் கையாளப்பட்ட உத்திகளே அல்லாமல், கவிதையின் மூலக்கூறுகள் அல்ல என்பதை உணரலாம். செய்யுள் நடை வழக்கிழந்து, உரைநடையே எழுத்து மொழியாகப் பரவலாகிவிட்ட இன்று அந்த உத்திமுறைகள் காலாவதியாகி, புதிய உத்திமுறைகள் கையாளப்படுகின்றன. இந்தக் குழப்பங்களையெல்லாம் தவிர்த்துவிட்டு கவிதையில் கவிதையை, கவித்துவத்தை மட்டும் தேடும் பார்வை விரிவடைய வேண்டும். அப்போதுதான், நேற்றைய கவிதைகளில் மேலானவற்றையும், இன்றைய நவீன கவிதைகளில் மேலானவற்றையும் தெளிவாகத் தரம் பிரித்தறிந்து அனுபவிக்க இயலும்."

—அது ராஜமார்த்தாண்டனின் வார்த்தைகள். இவ்வாரம் கவிஞர் பூமா ஈஸ்வரமூர்த்தியின் நான்கு கவிதைகள்.



ஒருதரம் காதல்
என்னை மீட்டுத் தந்தது

ஒருதரம் புல்லாங்குழல்
என்னை மீட்டுத் தந்தது

ஒரு வண்ணத்துப் பூச்சியும்
என்னை மீட்டுத் தந்தது

நான்தான்
அடிக்கடி தொலைந்து விடுகிறேன்.

வாசல் கதவு
திறந்துதான் இருக்கிறது
யாருக்கும்

பளிச்சென்று
வெளியேறிவிட இயலும்தான்
யாருக்கும்

வெளிக்காற்றும்
இலைகளின் சாரல் சிரிப்பும்
வண்ணத்துப்பூச்சியும்
வெளியே வாவென
அழைக்கிறது யாரையும்

இருந்தும்
அதற்கும் வெளியே என்ன இருக்கிறது
என
கேட்கிறது

கேள்வி கேட்கவே பழகின மனது.

தொலைந்தது
புன்னகைச் சாவிகள்.
வெல்வெட்புறகள்
குதிரைகள் நான் என்றன

அழகுக் குறிப்புகள். கடைவீதிச்
சமரசங்கள்
தேநீர்த் தந்திரங்கள்

துர்தேவதைக் கனவுகள்
வேட்டைக்கான தடங்கள்
பிசாசின் இலக்குகள். மலையுச்சி
அம்புகள்
இறுதித் தீர்ப்பின் சமிக்ஞைகள்

எச்சரிக்கை என்றன
நட்சத்திரங்கள்

கணித உடுப்புகள். பேரெழுச்சி
திசைகள்
அழிந்த சுவர்கள்

மழைநீர் அடையாளங்கள்
வண்ணத்துப் பூச்சியின்
கனவாய்கள்
சயனைட் கலக்காத முத்தங்கள்
ஒரு ஜோடி பூனைக்குட்டிகள்

அலைகளில் முயங்கின
கடற்கரைக் கால்கள்.
மெல்லவே
அமிழ்ந்து ஆழத்தில்
வண்ணத்துப் பூச்சியின்
மனம் சுமந்த மீன்
கூடின அமைதியுடன்
கண்ணகலப் பார்த்துப்
பார்த்து

எது
எழுதின கவிதை
எது எழுதாத கவிதையென
திகைக்கும்
ஒரு உறங்காத தகப்பனருகே

முன்னிரவில்
காண நேர்ந்த
கார்ட்டூனைக் கட்டியணைத்தபடி


கனவுக்குள்
விழித்திருக்கும்
ஒரு உறங்கும் சிறுவன்.

நேரம் வந்ததும்


மெல்லவே
விளிம்புக்கு நகர்ந்து
கண் திறந்து
படுக்கை நீங்கும்
புதுக் கனவுகளுடன்

மறுவாசிப்பில்
வேறு என்னவோ சொல்லும்
ஒரு கவிதை.


## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி



பெயர் : ஆர்.எம். பரமநாதன்.
வயது : 22
முகவரி : ஹோம்வூட் டிவிசன்,
அக்கரப்பத்தனை.
பொழுதுபோக்கு: பத்திரிகை,
ரி.வி., கதை புத்தகம்.



பெயர் : என். விஸ்வநாதன்
வயது : --
முகவரி : 66, கிராண்ட்பாஸ்
வீதி, கொழும்பு – 14.
பொழுதுபோக்கு : பத்திரிகை,
கவிதை



பெயர் : கே.சிந்தியா.
வயது : 16
முகவரி : இராஜவரோதய
சதுக்கம், மட்டிக்களி,
திருகோணமலை.
பொழுதுபோக்கு :
வழமையானவை.



பெயர் : என். குமார்.
வயது : 19
முகவரி : எம்.ஆர்.சீ. கார்மன்ட்,
154, கெஸ்பேவ ரோட், பொரலஸ்கமுவ.
பொழுதுபோக்கு : டி.வி.,
பத்திரிகை.




# பெண்களின் ரொமான்ஸ் ஆசைகள்

கடலின் ஆழத்தையும் வானத்தின் நீளத்தையும் கூட அறிந்து கொண்டுவிடலாம். ஆனால் ஒரு பெண்ணின் உள்ளத்தில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வது கடினம் என்பார்கள். இதெல்லாம் மேம்போக்காகச் சொல்லப்பட்டவையே தவிர, உண்மையல்ல. ஏனெனில் எல்லாப்



பெண்களுமே உணர்ச்சியுள்ளவர்கள், நுகர்ச்சியுள்ளவர்கள், தங்கள் உள்ளத்தை உணர்ச்சிகளை, செய்கையால், சைகையால் ஏன் வார்த்தைகளால் கூட வெளிப்படுத்தத்தான் செய்கிறார்கள். ஆனால் அதைப் புரிந்துகொள்ளத்தான் பல ஆண்கள் தவறிவிடுகிறார்கள்.

தாம்பத்திய வாழ்க்கையிலாகட்டும் காதலிலாகட்டும் ஒவ்வொரு பெண்ணுமே ஓர் உறுதிப்பாட்டை, நிலைப்பாட்டை விரும்புகிறாளென்பதை ஆண்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

தனது காதலி சொல்வதெல்லாம் வேதவாக்கு, அவள் நடப்பதெல்லாம் தனது வழிகள் என்றிருந்த ஓர் ஆடவன், திருமணத்திற்குப் பிறகு, அவளை ஓர் அடிமை மாதிரி நடத்த ஆரம்பிக்கும் போது அவள் துவண்டு போகிறாள். மணிக்கணக்கில் உட்கார்ந்து ஆசை ஆசையாய்ப் பேசிய அவள், தனது கருத்துக்களைக்கூட வெளியே சொல்ல உரிமையில்லாதவள் போல, வாயிருந்தும் ஊமையாய் சுதந்திரமாய் உலவினாலும் அடிமையாய் இருக்கிறாளே. இதைத்தான் அப்பெண் விரும்புகிறாளா? இல்லை. இப்படி இருக்கப் பழகிக் கொண்டிருக்கிறாள் அவள். ஆனால், அவளை உசுப்பிவிட்டுப் பாருங்கள். அவளது உள்ளத்திற்குள்ளே இன்னொரு முகம் இருப்பது தெரிய வரும். அங்கே அவளது ஆசைகள், விருப்பங்கள் எல்லாம் புதைந்து, நெளிந்து கிடப்பதைக் காணலாம். சரி அப்படி என்னதான் ஒரு பெண் விரும்புகிறாள்?

தான் அங்கீகரிக்கப்பட வேண்டும். அதிலும் தனது கணவனுக்கு நிகராக மற்றவர்கள் அனைவரைக் காட்டிலும் அதிகமாக தனது கணவனால் அங்கீகரிக்கப்பட்டவளாக இருக்கவேண்டும் என விரும்புவாள்.

தனக்கு எது அளிக்கப்படுகிறதோ, அதை, பல மடங்கு திருப்பி அளிக்கத்தான் ஒரு பெண் விரும்புவாள்.

ஒவ்வொரு முறையும் அவள் ஏதோ ஒரு புத்தம் புதிய புத்தகம் போல, தன்னை கணவன் புரட்டிப் பார்க்க வேண்டும் என விரும்புவாள்.


தன்னைப் பற்றி ஒரு நாலு வார்த்தைகளை நல்லவிதமாகப் புகழ்ந்து பேசவேண்டும் என விரும்புவாள்.



தனக்குள்ளே இருக்கும் கனவுகளையும், விருப்பு வெறுப்புகளையும் கணவன் பேசவேண்டும் என விரும்புவாள்.

## வார்த்தையால் புகழுங்கள்

சந்தேகம் எழும்பாத விதத்தில் பேச்சுக்குப் பேச்சு உங்கள் மனைவியை புகழ்ந்து தள்ளுங்கள். இதை உங்கள்



மனைவி விரும்புவாள்.

தனது காதலை, காதல் உணர்வை வெளிப்படுத்துவதற்கு ஒருவனுக்கு விளையாட்டு வீரனின் திடமான உடற்கட்டு இருக்க வேண்டும் என்பதில்லை. கட்டுக்கட்டாக பணம் கைவசம் இருக்கவேண்டும் என்ற அவசியமுமில்லை, விரும்பப்படும் பெண் மிகவும் கவர்ச்சியாகவோ, ஒரு தேவதையைப் போன்றோ, புகழ்ச்சிக்கும் போற்றுதலுக்கும் உரியவளாக இருக்க வேண்டும் என்பதில்லை. உங்கள் கண்ணுக்கு அவள் கவர்ச்சியாக இருந்தால் போதும் என நீங்கள் நினைப்பதை அவள் தெரிந்துகொள்ள செய்யுங்கள். அவள் இதை விரும்புவாள். உங்கள் காதலியிடம், மனைவியிடம் நீங்கள் கண்ட சிறிய பெரிய விஷயங்களையெல்லாம் புகழுங்கள்.

மற்றவர்களிடையே இவ்வாறு புகழ்ந்து அது உங்கள் மனைவியின் காதுக்கு வரும் போது கிடைக்கும் வரவேற்பே தனியாக இருக்கும். உங்கள் மனைவியின் நகைச்சுவை உணர்வு, நிர்வாகத்திறன், அவளது கலை உணர்வு, பேசும்போது அவள் காட்டும் நளினம், தாய்மை நிலையிலிருந்து அவள் உங்களைப் பராமரிக்கும் விதம், அவளது நுட்பமான உணர்வுகள், காதல் திறன் போன்ற அனைத்தும் உங்கள் பாராட்டின் ஓர் அங்கமாக இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் உங்கள் மனைவியிடம் நேரடியாகச் சொல்வது நல்லது. இதையெல்லாம் வார்த்தையால் சொல்ல முடியாது என்றால், உங்கள் மனைவியின் கைகளுக்கு கிடைக்குமாறு அதை எழுதி வைத்துவிடுங்கள்.

அவளின் அழகை அங்கீகரியுங்கள், உலகிலேயே நீதான் எனக்கு அழகு என்று சொல்வதை விட, மனைவியின் ஒவ்வொரு அங்க அசைவையும் கவனித்து ரசிக்கப் பழகுங்கள். நீங்கள் ரசிப்பதை, இது அழகு என வாயால் சொல்லுங்கள். உங்களை எது தூண்டுகிறதோ அதை வாய்விட்டுச் சொல்லுங்கள். வர்ணனை கலந்து சொல்வது நல்ல பலன் தரும். உங்கள் மனைவி தன்னை அலங்கரித்துக்கொள்ள அதிக கவனம் செலுத்துங்கள்.

காதலித்த காலத்தில் மணிக்கணக்கில் காதலியோடு பேசிக்கொண்டிருந்தோம். என்ன பேசினோம் எதைப் பற்றி பேசினோம். எனக் கேட்டால் சொல்வதற்கு எதுவுமே இருக்காது. மையக்கருத்துக்களே இல்லாமல், மணிக்கணக்கில் நேரத்தைச் செலவிட்டு, அவளுக்காக நாமும், நமக்காக அவளும் காத்திருந்து அடேயப்பா நேர விரயத்தைக் கூட பொருட்படுத்தாமல் இருந்ததை, உண்ணவும், உடுத்தவும் கூட விரும்பாமல் அவளுக்காகக் காத்திருந்த அந்தக் காலத்தைக் கண் முன்னே கொண்டு வாருங்கள். அத்தகைய இன்பமான நேரத்தை இப்போது மனைவிக்கு ஒதுக்குகிறோமா என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.

தன்னோடு பேச நேரம் ஒதுக்குவதை எல்லா மனைவியருமே விரும்புவார்கள். பேசும்போது பொறுமையாக, கூடுமானால் அவர்களைப் பேசவிட்டு கவனிக்கும் விதத்தில் நடந்து கொள்ளுங்கள். மனைவியின் விருப்பத்தைத் தெரிந்து கொள்ள முயற்சியுங்கள். எது தேவையென விரும்புகிறாளோ, எது நேசிக்கப்பட வேண்டும் என விரும்புகிறாளோ எது அவசியமென விரும்புகிறாளோ அதை எல்லாம் பூர்த்தி செய்யுங்கள்.

தன்னைத் தனது கணவன் கவனிக்க நேரம் ஒதுக்குகிறான் என்பதை மனைவி புரிந்து கொள்ளும் போது அதற்காக அவள் அடையும் மகிழ்ச்சியே தனி இன்பம்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* -ஷோபா-

## பீட்ரூட் ட்ரை கேக்

***தேவையானவை***

| | |
|---|---|
| பீட்ரூட் | - 1 கிலோ. |
| சீனி | - 750 கிராம். |
| மைதா | - 100 கிராம். |
| பால் | - 1/4 லீட்டர். |
| போர்ன்விட்டா, மால்டோவா, பூஸ்ட், ட்ரிங்கிங் சாக்லேட் இவற்றில் ஏதேனும் ஒன்று | - 4 டேபிள் ஸ்பூன். |
| ஏலக்காய் | - 4. |
| டால்டா | - 100. |

***செய்முறை***

பீட்ரூட்டை மண்போகக் கழுவி, தோல் சீவி, கொப்ரைத் துருவியில் துருவி கொஞ்சமாக ஜலம் விட்டு, வேக வைத்து, ஜலத்தை வடிகட்டி எடுத்துக் கொள்ளவும். அதை மிக்ஸியிலோ, அம்மியிலோ வெண்ணெய் போல் அரைத்து எடுக்கவும்.

அடுப்பில் கனமான பாத்திரம் வைத்து 600 கிராம் சீனி போட்டு, ஏலக்காய் பொடியில் பாதியைப் போட்டுக் கம்பிப்பாகு வந்ததும் அடுப்பைத் தணித்து, பீட்ரூட் கலவையைப் போட்டுக் கிளறவும்.

இன்னொரு அடுப்பில் ஒரு ஸ்பூன் டால்டா விட்டு மைதாவை வறுக்கவும்.


பாக்கி சீனியைக் கம்பிப்பாகு வைத்து ஏலப்பொடி சேர்த்து, மைதா தூவிக் கிளறவும், சேர்ந்து வரும் போது அடுப்பில் இருந்து இறக்கிக் கிளறி மறுபடியும் அடுப்பில் வைத்துக் கிளறவும்.


பாலில் மால்டோவா (அல்லது வேறு ஏதேனும்) கலக்கி, மைதா மாவில் விட்டு, நெய்யையும் விட்டுக் கிளறவும். பீட்ரூட் சேர்ந்து ஜாம் போல் ஆகி இருக்கும். அதை மைதா கலவையில் கொட்டி, பாக்கி டால்டாவையும் காய்ச்சி கை விடாமல் கிளறி, ஒட்டாமல் சுருண்டு வந்ததும், நெய் தடவிய தாம்பாளத்தில் கொட்டி குளிர்ந்த நீர் நிரப்பிய பேசினிலோ .'. ப்ரிஜ்ஜிலோ வைத்து அரைமணி கழித்துத் துண்டம் போடவும்.

# பசு நெய்யின் மகத்துவம்.....!

பசு நெய்யின் குணம்: பசுவின் நெய் புத்தி, ஞாபக சக்தி, தாரணா சக்தி, பசி, ஆயுள், விந்து இவைகளை வளர்க்கும், கண்களுக்கு நலம் செய்யும், சிறுவருக்கும், வயதானவருக்கும் சந்தான விருத்தியை விரும்புகிறவருக்கும் அழகையும், ஒளியையும் நல்ல குரல்வளத்தையும் தருகிறது. ஆயுதம், நெருப்பால் பாதிக்கப்பட்டோரைக் காக்கிறது. வாயு பித்தம், கபம், விஷம், பைத்தியம், சயரோகம் இவைகளைப் போக்குகிறது. நோயற்ற நடு வயதை நிலை நிறுத்திக்காக்கிறது.

பத்து வருடங்களான பசு நெய்யின் குணம்: பத்து வருடத்திற்கு முற்பட்ட பசு நெய் வெறி, வலிப்பு, மூர்ச்சை, மண்டை, காது, கண், கருப்பை இவை சம்பந்தமான நோய்களைப் போக்குகிறது. பழைய நெய்யானது புதிய நெய்யின் குணங்களையும் பெற்றிருக்கிறது. இது அமிர்தத்திற்கு ஒப்பானது. 'திமிரம்' என்ற கண் நோயைப் போக்குகிறது. இருமல்,





குஷ்டம், விஷதோஷம் இவைகளை நீக்கி காக்கிறது.

நூற்றுப் பதினொரு வருட பழைய நெய்யின் குணம்: இதற்கு 'கும்பஸ்ர்பி' என்று பெயர். வன்மையை அளிக்கிறது. பவித்திரமானது. முற்றிலும் இழந்த கண் பார்வையை மீட்டுத் தருகிறது. கிரஹ தோஷங்களையும் நீக்கக் கூடியது. துரும்பாய் இளைத்தவரையும், தானாய் உயர்த்தி, உயிரூட்டுகிறது. சித்தர்களிடமும் மகாமுனிவர்களிடமும் மட்டுமே இது இருக்கக் கூடியது.

# சுகர் இருந்தால் தொற்றுநோய்கள் வரும்.....!

இன்று சிறியவர் முதல் பெரியவர் வரை வயது வித்தியாசம் இல்லாமல் ஆட்டிப் படைத்து வரும் நீரிழிவு நோய், சிறுநீர்ப் பாதை தொற்றுநோய், சுவாசக் கோளாறுகள் போன்ற பல்வேறு வகையான தொற்றுநோய்களுக்குக் காரணமாக இருப்பதாக விஞ்ஞானிகள் கூறி உள்ளனர். நெதர்லாந்தில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட 7500 நோயாளிகளையும், நீரிழிவு நோய் பாதிப்பில்லாத 19000 பேரையும் வைத்து ஆய்வு நடந்தது. அப்போது நீரிழிவு நோய்க்கும், தொற்று நோய்களுக்கும் இடையிலான தொடர்பு உறுதி செய்யப்பட்டது.

டைப் - 1, டைப்- 2 என்ற இரு வகை நீரிழிவு நோயாளிகளுக்குமே தொற்று நோய் ஆபத்து இருக்கிறது. நீரிழிவு நோயில்லாத ஆரோக்கிமான மனிதர்களுடன் ஒப்பிடும் போது டைப் - 1 வகை நீரிழிவு நோயாளிகளுக்கு சுவாசக் குழல் சம்பந்தமான தொற்றுநோய் வருவதற்கு 2 மடங்கு கூடுதலான வாய்ப்பு உள்ளது. இதுபோல நீரிழிவு இருக்கும் காரணத்துக்காக ஏற்கனவே வந்து போன தொற்று நோய்கள் மீண்டும் வருவதற்கான வாய்ப்புகளும் அதிகம் தான்.

ஆக, நீரிழிவு நோயாளிகள், தாங்கள் தொற்றுநோய் ஆபத்தில் இருக்கிறோம் என்பதை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தடுப்பூசிகள் போட்டுக் கொள்ள வேண்டும். நிறைய தண்ணீர் குடித்து, ஆரோக்கியமான வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள வேண்டும். ஏதாவது தொற்றுநோய் அறிகுறி தெரிந்தால், உடனடியாக மருத்துவரிடம் செல்ல வேண்டும்.

கண்பார்வை இழப்பு, சிறுநீரகம் பாதிப்பு, கடுமையான இருதய, ரத்த நாள பிரச்சினை



கள், நரம்புக் கோளாறு என பல பயங்கரமான நோய்களுக்கு நீரிழிவு வியாதி காரணமாக இருக்கிறது. டைப் 1 வகை நீரிழிவு பெரும்பாலும் குழந்தைகள் மத்தியில் தான் வரும் என்ற போதிலும் தற்போது பெரியவர்களுக்கும் இந்நோய் வருவது தெரிய வந்துள்ளது.

# நரை முடியைத் தடுக்க...

நரைத்த தலைமுடியை மறைக்க இனி டை அடிக்க வேண்டியதில்லை. அழகு சாதனப் பொருட்களும் வேண்டாம். எல்லாம் உங்கள் கையிலேயே உள்ளது.

கை விரல் நகங்களுடன் முடிக்கும் நரம்புகளுக்கும், தலைமுடியின் வேர்களுக்கும் இடையே நேரடித் தொடர்பு உள்ளது. இதனால் ஒரு கையில்



உள்ள நகங்களை மற்றொரு கையில் உள்ள நகங்களுடன் உரசுங்கள். இந்த உரசல் மூலம் மண்டை ஓட்டுக்குச் செல்லும் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். இதன் மூலம் நரைத்த முடி உண்டாவது தடுக்கப்படும்.

நகங்களை உரச பிடிக்கவில்லையா? அப்படியானால் மேலும் 2 வழிகள் உள்ளன.

1. காலையில் எழுந்ததும் முன்நெற்றியில் முடி தொடங்கும் பகுதியில் கைகளால் மெதுவாக அழுத்துங்கள். இப்படிச் செய்வதால் மண்டையோட்டில் செல்லும் இரத்த நாளங்களில் உள்ள அடைப்பு நீங்கி, சீரான இரத்த ஓட்டத்துக்கு வழி வகுக்கும். இதனால் நரைத்த முடி உண்டாவது தடுக்கப்படும்.

2. அடுத்து தலைமுடி நரைப்பதைத் தடுக்க கபல்பாட்டி என்ற ஸ்பெஷல் யோகாசனம் ஒன்று உள்ளது.

தரையில் அமர்ந்து கொண்டு 2 கைகளையும், தொடைகளுடன் சேர்த்து விறைப்பாக வைத்துக் கொள்ளுங்கள். இப்போது உள்ளே இருக்கும் காற்றை 2 மூக்கு ஓட்டைகள் வழியாகவும் வெளியேற்றி, வயிற்றை உள்ளுக்குள் இழுங்கள். எவ்வளவு காற்றை வெளியேற்றுகிறோமோ அந்தளவுக்கு வயிறு உள்ளுக்கு சென்று விடும். அப்போது வயிறு பழைய நிலையை அடையும்படி செய்யுங்கள். இப்போது நிறைய காற்றை உள்ளுக்குள் உறிஞ்சிக் கொள்வீர்கள். இதுபோன்ற பயிற்சியை திரும்பத் திரும்பச் செய்யும் போது நரைத்த முடி தலைகாட்டாது.

# ஒரு தாய் மகள் 39

சென்ற வாரம்

தன் மகளின் விபத்துக்கு காரணமாகிய பிலிப்பின் உடல் நல்லடக்கத்திற்குச் செல்ல பேஜ் ஆயத்தமாகிறாள். பிராட் செனட்டரின் மனைவியை குற்றஞ் சாட்டுகிறான். இதனால் இருவரும் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்...

எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

"அதெப்படி நிச்சயமாகச் சொல்கிறீர்கள்?"

"நிச்சயமாய் எனக்குத் தோன்றுவதால் சொல்கிறேன். பொலிசிலும் அவள் மேல் தப்பில்லை என்றுதான் நினைக்கி றார்கள். அதனால்தான் அவளிடம் இரத்தப் பரிசோதனை எடுக்கவில்லை."

"செனெட்டரின் பெண்டாட்டி என்பதால் விட்டு விட்டார்கள்." என்றாள் பேஜ். அவன் இப்படிப் பிடிவாதமாகப் பேசுவது அவளுக்கு வெறுப்பாக இருந்தது. வேண்டுமென்றே அவன் வாக்குவாதம் பண்ணுகிறான் என்று புரிந்ததால், "எப்படியும் நான் பிலிப்பின் சவ அடக்கத்துக்குப் போகிறேன். நீங்கள் வராவிட்டால் பரவாயில்லை. இரண்டே கால் மணிக்கு வந்து என்னை அழைத்துப் போவதாகத் தாரென்ஸன் சொல்லி யிருக்கிறார்." என்றாள்.

பிராடின் புருவங்கள் உயர்ந்தன. "ஓ! குஷியான ஏற்பாடுதான்!" என்று கேலி செய்தான்.

"மூடுங்கள் வாயை!" உடலில் ஏற்பட்டிருந்த களைப்பும் மனத்தில் ஏற்பட்டிருந்த கோபமும் சேர, கண்ணாலேயே அவனை எரித்துவிடுகிற மாதிரி முறைத்தாள்.



"ஆஸ்பத்திரி என்றால் உங்களுக்குக் குமட்டுகிறது. தாரென்ஸனுக்கு அப்படியில்லை. மூன்று நாளாக எனக்குத் துணையாக ஆஸ்பத்திரியில் தங்கிக் கொண்டிருக்கிறார். அவர் பெண் க்ளோவும்தான் பிலிப் ஓட்டிய காரில் இருந்தாள். அவளுக்கும்தான் பயங்கரமான காயம். ஆனால் தாரென்ஸனுக்கு அல்ப புத்தி கிடையாது. பிலிப்பின் அப்பா அம்மாவுக்கு அனுதாபம் தெரிவிக்க வேண்டும் என்ற பெருந்தன்மை இருக்கிறது."

"ஆகாகா! பிரமாதமான மனிதன்தான் தாரென்ஸன்!" என்று மேலும் கேலி செய்தான் பிராட். "இனிமேல் நீங்கள் இரண்டு பேரும் நெருங்கிய சினேகிதர்களாக இருக்கலாம். நான் தான் உனக்கு வேண்டாதவனாக ஆகிவிட்டேனே!"

தாரென்ஸனைப் புகழ்ந்து சொன்னது அவனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது என்பதைப் பேஜ் புரிந்துகொண்டாள். ஆனால் அதற்காகத் தான் நினைப்பதை மறைக்க விரும்பவில்லை.

"நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் தாரென்ஸன் பிரமாதமான ஆள்தான். அருமையான சினேகிதர். ஆலிக்கு விபத்து நேர்ந்த அன்று இரவு, நீங்கள் உங்கள் திருட்டுக் காதலியுடன் கூத்தடிக்க எங்கேயோ சுற்றிக்கொண்டிருந்த சமயம், எனக்குத் துணையாக இருந்தவர் அவர்தான். இரவு முழுவதும் என் கையைப் பிடித்துக்கொண்டு தைரியம் சொன்னவர் அவர்தான். இன்னொன்றும் சொல்கிறேன், கேட்டுக் கொள்ளுங்கள். உங்களைப் போலப் பெண் பித்துப் பிடித்து அலைகிறவரல்ல அவர். தன் குழந்தைகளைத் தவிர வேறு எந்த விஷயத்திலும் அவருக்கு அக்கறை கிடையாது. என்னை ஒரு பெண் என்கிற முறையில் அவர் பார்க்கவில்லை. சினேகிதியாகப் பார்க்கிறார். நானும் அவரை ஒரு சினேகிதராகத்தான் நினைத்துப் பழகுகிறேன். கணவன்தான் எனக்கு இல்லையென்று ஆகிவிட்டது. ஒரு நல்ல சினேகிதராவது இருக்கட்டுமே?"

படபடவென்று அவள் வெடித்ததைப் பார்த்து ஒரு நிமிடம் சிலையாக நின்றான் பிராட். பிறகு மடேலென்று கதவைச் சாத்திக்கொண்டு வெளியேறினான்.

கொஞ்ச நேரத்துக்குப் பேஜ் அப்படியே உட்கார்ந்திருந்தாள். பிராடைக் கழுத்தை நெரித்துக் கொலை செய்துவிட வேண்டும் போல் ஆத்திரம் வந்தது. இவ்வளவு விரைவாக, இவ்வளவு சீக்கிரமாக, இவ்வளவு தலைகீழாகத் தன் வாழ்க்கை மாறுமென்று அவள் கனவிலும் கருதவில்லை. இருதயத்தைச் சுமை அழுத்த, எழுந்து சென்று ஷவரில் குளித்தாள். பிலிப்பின் சவ அடக்கச் சடங்குக்குச் செல்வதற்கு ஏற்றபடி கறுப்பு லினன் சூட்டை அணிந்து கொண்டாள்.

சரியாய் இரண்டே காலுக்கெல்லாம் தாரென்ஸன் வந்துவிட்டான், அவளை அழைத்துப் போவதற்கு. கருநீல சூட்டும், வெள்ளை ஷர்ட்டும், கறுப்பு டையுமாகக் கண்ணுக்குப் பளிச்சென்று இருந்தான்.

செயின்ட் ஜான் எபிஸ்கோபல் சர்ச்சில் சவ அடக்கம் நடைபெறுவதாக இருந்தது. அங்கே அப்படியொரு கூட்டத்தைப் பேஜ் எதிர்பார்க்கவேயில்லை. நூற்றுக் கணக்கான பள்ளி மாணவர்களும், மாணவிகளும் வந்திருந்தார்கள். அனைவரும் இறந்து போன பிலிப்பின் தோழர்கள். அருமை நண்பனை இழந்ததால் வெடித்துப் போன உள்ளத்தின் துக்கம் அவர்கள் முகத்தில் வெளிப்படையாகத் தெரிந்தது. ஒரு மாணவன் இரங்கற்பா அச்சடித்து எல்லோருக்கும் வழங்கினான். பிலிப்பும் அவனுடைய நீச்சல் பயிற்சித் தோழர்களும் நின்றிருந்த அருமையான குரூப் போட்டோ ஒன்று அதில் அச்சிடப்பட்டிருந்தது.

கார் விபத்தில் சிக்கி, ஆனால் தெய்வாதீனமாக உயிர் தப்பிய ஜேமி வந்திருப்பதைக் கண்டாள் பேஜ். ஜேமியின் அப்பா ஆப்பிள் கேட்டும், அவன் அம்மாவும் அவனுக்கு இருபுறமும் அமர்ந்திருந்தார்கள். ஜேமி மிகவும் மனம் நொந்திருந்தான். அவன் பெற்றோர்கள் அவனை ஆதுரத்துடன் அணைத்துக் கொண்டிருந்தார்கள்.

பிலிப்புக்கும் அவனுடைய தோழர்களுக்கும் பிரியமான இசை வாசிக்கப்பட்டது. குறைந்தபட்சம் நானூறு மாணவர்கள் சர்ச்சுக்கு வந்திருந்தார்கள். ஆலிஸன் மட்டும் ஆஸ்பத்திரியில் மரணப் படுக்கையில் கிடக்காமலிருந்தால் அவளும் இங்கே இருந்திருப்பாள் என்று பேஜ் நினைத்துக் கொண்டாள். துக்கம் தொண்டையை அடைத்தது.

பிலிப்பின் அம்மாவும் அப்பாவும் தங்கள் வேதனையை வெளிக்காட்டாமல் கண்ணியமாக வந்து முன் வரிசையில் நின்றார்கள். ஆனால் அவர்களின் பின்னாலேயே வந்த வயோதிபர்களைக் கண்டதும் எல்லாருக்கும் கண்கலங்கி விட்டது. பிலிப்பின் தாத்தாவும் பாட்டியும்தான் அவர்கள்.

பாதிரியார் பிலிப்பைப் பெரிதும் பாராட்டிப் பேசினார். எப்படியெல்லாம் அனைவருக்கும் பிரியமானவனாக அவன் இருந்தான் என்பதையும், எத்தனை சிறந்த எதிர்காலம் அவனுக்குக் காத்திருந்தது என்பதையும் அவர் விவரித்துக் கொண்டிருந்தபோது -

ஆலிஸனின் நினைவுதான் பேஜின் மனத்தில் திரும்பத் திரும்ப எழுந்தது. அவளும் எல்லாருக்கும் பிரியமானவள். அவளுக்கும் சிறப்பான எதிர்காலம் காத்திருக்கிறது.

'ஆலிஸன் இறந்து போனாலும் இவர்கள் இப்படித்தானே பாராட்டிப் பேசுவார்கள்?' பாடுபட்டு அந்த நினைப்பை விரட்டியடித்தாள் பேஜ்.

வந்திருந்தவர்கள் தனித் தனியாகவும் கும்பலாகவும் எழுந்து போய் மலர் வளையம் வைத்து விட்டுத் திரும்பினார்கள். தாளமுடியாத துயரத்துடன் இருக்கும் அவர்களை நோக்கிப் பார்வையைச் சுழற்றிய பேஜ் திடுக்கிட்டாள்.

வந்திருந்த கூட்டத்தில் செனெட்டரின் மனைவி லாரா ஹட்சின்ஸும் இருந்தாள்.

எல்லாரையும் போலவே அவளும் கைக்குட்டையால் வாயைப் பொத்திக் கொண்டு விம்மலை அடக்கிக் கொள்வதாகத் தோன்றியது. தனியாக வந்திருந்தாள்.

(தாய் தொடர்வாள்.....)

# செலினா ஜெட்லி




செலினா ஜெட்லி

பாலிவுட்டின் இளம் நடிகைகள் பலர் இப்போது தமது நடிப்புத் திறனை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அந்த வகையில் இப்போது கலக்கும் புயல் செலினா ஜெட்லி ஆகும். இவர் கவர்ச்சிக்கென்றே தனது உடலை வளர்த்து வருகிறார். தற்போது இவர் காதல் வலையில் சிக்கியுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. இது பற்றி அவரிடம் கேட்டபோது,

"யார் சொன்னது? எனக்கு இன்னும் 24 வயதுதான் ஆகிறது. என்னுடைய வாழ்க்கைத் திட்டங்கள் பெரியது. இன்னும் 10 வருடங்களுக்கு நான் திருமணம் பற்றிச் சிந்திக்கப்போவதில்லை. எனக்குத் திருமணம் பற்றிய பெரிய கனவுகள் இருக்கின்றன. அவற்றை அடைய முன்பு நான் எனது நடிப்புத் துறையில் நன்கு பிரசித்தி பெற்றிருத்தல வேண்டும். எனவே இந்த கிசு கிசுக்கள் மூலம் நான் ஒன்றும் பயப்படப்போவதில்லை. கிசு கிசுக்கப்படும் நபருக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று உறுதியாகக் கூறிவிட்டார். கிசு கிசுக்கப்படும் அந்த நபர் யாரோ?

# பாலிவுட்டின் லேட்டஸ்ட் ஹட்டாக்



ரியாசென்

ரியா சென்னின் 'அஜால் குஜால்' தான் இன்டர் நெட்டில் சில மாதங்களுக்கு முன்பு வெளியான த்ரிஷாவின் குளியல் காட்சி பரபரப்பை ஏற்படுத்தியது. அதன் பின்பு, கரீனா கபூர் தன் வல்லவரை உதட்டைக் கவ்வி முத்தம் கொடுக்கும் காட்சியை வட இந்தியப் பத்திரிகைகள் வெளியிட்டன. அந்த வரிசையில்... இப்போது சிக்கியுள்ளவர் ரியா சென். இவர் தன்னுடைய பாய் பிரண்ட் அஷ்மிட் பட்டேலுடன் நெருக்கமாக இருக்கும் 'அஜால் குஜால்' காட்சிகளை யாரோ படம் பிடித்து இன்டர்நெட்டில் உலவ விட்டிருக்கிறார்கள். 'ம்ஹூம்... அது ரியாவே இல்லை. கிராப்பிக்ஸ் வேலை...' என்று வழக்கம் போல ரியாவின் ஆதரவாளர்கள் ரியாவுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளார்கள். பாலிவுட்டின் லேட்டஸ்ட் ஹாட் டாக்... இப்போதைக்கு ரியாசென்தான்... தேவுடா.... எப்போதிருந்துவாங்களோ?



த்ரிஷா

# உரிமை மடல்...18

மலை தடை கடந்து
புயலிடை எழுந்து
உங்களுக்காக
ஓர் உரிமை மடல்!

உண்மை எதுவென உரத்த குரலெடுத்து
உன்னத வழிகாட்டி எழுதும்
உரிமை மடல்!

இது
செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ்
தேவானந்தா அவர்கள்
இடர் படும் எம் தேசத்து மக்களுக்காக எழுதும்
தொடர் மடல்!...

### அன்பான என் தேசத்து மக்களே!.....

புலம் பெயர்ந்து வாழும் எம் தாயகத் தேசத்து உறவுகளே!...

உங்களுக்கு வணக்கம்!.....

மக்களாகிய உங்களது மகிழ்ச்சிக்காக.... நிம்மதியான வாழ்வுக்காக.... சுதந்திரமான இருப்புக்காக.... எமது மண்ணில் மாற்றமொன்று நிகழவேண்டும் என்று நெடிய நாட்களாகவே நீங்கள் காத்திருக்கின்றீர்கள்!

அன்று தமிழ் பேசும் மக்களின் அரசியல் தீர்வுக்காக முன்வைக்கப்பட்ட பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி – செல்வா ஒப்பந்தம் என்பன கைகூடாமல் போனதற்கான முழுப்பொறுப்பையும் அன்றைய சிங்கள அரசியல் தலைமைகளே ஏற்கவேண்டும்.

இனப் பிரச்சினைத் தீர்வுகள் மீது தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கை இழப்பதற்கு மேற் கூறப்பட்ட தீர்வுகளைச் சிங்கள அரசுத் தலைமைகள் அமுல்படுத்தாமல் விட்டதும், பிரதான காரணமாகும்.

ஆனால், இலங்கை – இந்திய ஒப்பந்தத் திற்குப் பிந்திய வரலாறுகள் யாவும் எமது மக்களை ஏமாற்றி வருபவர்கள் சிங்களப் பேரினவாதிகள் அல்ல என்ற உண்மையை வெளிப்படுத்தி நிற்கின்றன! இதனை மக்களாகிய நீங்கள் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

சிங்களப் பேரினவாதத்தை எதிர்ப்பதாகக் கூறி.... இன்னொரு புதிய வடிவத்தில் தமிழ் பேசும் மக்களின் நிம்மதியான வாழ்வுக்குத் தடையாக இருந்து வரும் புலிகளே இன்று மக்களாகிய உங்களை ஏமாற்றி வருகின்றனர்!

நெஞ்சு பொறுக்குதில்லையே!... இந்த நிலை கெட்ட மனிதரை நினைத்துவிட்டால் என்கிற உள்ளத்தின் வேதனைத் துடிப்போடு..... ஆனாலும் நாங்கள் சாதித்தே முடிப்போம் என்ற வீரிய சிந்தனைகளோடு மற்றொரு உரிமை மடல் ஊடாக மக்களாகிய உங்களைச் சந்திப்பதில் மனநிறைவு கொள்கிறேன்!

மீண்டும் ஒரு வரலாற்றுக் காலகட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் சமூகம் இன்று வந்து நிற்கின்றது!

எமது தேசத்தில் சமாதான மலர்கள் பூத்துக் குலுங்க வேண்டுமா?... அல்லது கொடிய ரணங்களை உருவாக்கும் யுத்தம் நிகழ வேண்டுமா?...

இதற்கான தீர்மானம் என்பது இன்று தமிழ் பேசும் தரப்பின் கைகளிலேயே விடப்பட்டிருக்கிறது!

கடந்த காலங்களிலும் இது போன்ற சமாதானச் சூழ்நிலைகள் தோன்றி மறைந்தன! யுத்தத்தின் மீது மட்டுமே வெறிகொண்டு அலையும் மக்கள் விரோத வன்முறையாளர்களின் சுயலாப அரசியலினால் சமாதானத்திற்கான அந்த வாய்ப்புகள் அத்தனையும் கைநழுவிப் போயிருக்கின்றன!

ஆதலால் மக்களாகிய உங்களது சமாதானக் கனவுகள் யாவும் சிதறடிக்கப்பட்டன! வளம்பெற்று வாசம் வீசவேண்டிய நமது மக்களின் வாழ்வு, பல்வேறு தடவைகளில் யுத்த நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது.

இன்றைய சமாதானத்திற்கான வாய்ப்புகளும் கடந்த காலங்களைப் போலவே சிதறடிக்கப் பட்டுவிடுமோ என்ற ஏக்கத்தில், மக்களாகிய உங்களின் ஏக்கங்களுடன் ஒன்றாகக் கலந்தவனாக.... சில வரலாற்று உண்மைகளோடு நான் உங்களை இம்மடலின் ஊடாகச் சந்திக்கின்றேன்!

எம் இனிய மக்களே!

சாம்பல் பூத்த தெருக்களில் நாங்கள் வாழ்ந்த நாட்கள் இனியும் வேண்டாம்!

சமாதானம் பூத்த தேசத்தில் நாங்கள் வாழ்வோம் என்று உறுதி கொள்வோம்!

குடும்பத்தவர்களை.... கூட இருந்தவர்களை.... நண்பர்களை.... உறவினர்களை...

இன்னும் இன்னும் தமிழ்த் தலைவர்களை.... எங்களது போராளிகளை நாங்கள் பேரினவாதத் திற்கும் புலிப் பாசிசத்திற்கும் பலி கொடுத்த வரலாறுகள் இனியும்....

எமது மண்ணில் இடம்பெற வேண்டாம்!

இடப்பெயர்வுகள் வேண்டாம்.... இனிய உறவுகளின் பிரிவுகள் வேண்டாம்!....

நாங்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையில் உரிமை பெற்ற மக்களாக எமது தாயகத்தில் தலைநிமிர்ந்து வாழவேண்டும்!

யுத்தமற்ற ஒரு சுதந்திரமான தேசத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும்!

இதுவே ஈ.பி.டி.பி.யின் அரசியல் எதிர்பார்ப்பும், கொள்கை நிலைப்பாடுமாகும்!

ஆனால், புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் யுத்தத்தை விரும்புகிறார்களா?

அல்லது மக்களாகிய நீங்கள் அமைதியோடும் சமாதானத்தோடும் வாழ வேண்டும் என விரும்புகிறார்களா என்பதைக் கடந்த கால, சம கால அனுபவங்களினூடாகவே நீங்கள் கண்டுகொள்ள முடியும்!

நான் இதை ஏன் கூறுகின்றேன் என்றால் மக்களின் பெயரால் இன்றைய அரசியல் களத்தில் தொடர்ந்தும் ஏமாற்று வித்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன!

மாற்றத்தை விரும்பும் ஈ.பி.டி.பி. ஏமாற்றத்தை வெறுக்கிறது!

சமாதானத்தை விரும்பும் ஈ.பி.டி.பி. யுத்தத்தை வெறுக்கிறது!...

ஆனால் புலிகள் எம்மிலிருந்து.... மக்களாகிய உங்களிலிருந்து மாறுபட்டவர்கள்!

நீரின்றி மீன்கள் வாழ முடியாது! போரின்றி பிரபாகரனால் வாழ முடியாது!

புலிகள் சமாதானத்தைக் கண்டு அச்சப்படு கிறார்கள்! யுத்தம் ஓய்ந்துவிட்டால் தங்களது தேவையும் தீர்ந்துவிடும் என்று புலிகள் கவலை கொண்டுள்ளனர்!

தொடர்ச்சியான சமாதானச் சூழலில் புலித் தலைமையால் உயிர் வாழ முடியாது என்பதையே கடந்த கால, சம கால வரலாறுகள் எமக்கு ஆதாரங்களாகப் பதியப்பட்டு நிற்கின்றன!

புலிகளின் தலைவர் பிரபாகரனும், அவரது நெருங்கிய சகாக்களும் தாங்கள் வாழ்வதற்காக அப்பாவி இளைஞர், யுவதிகளை யுத்த களத்திற்கு அனுப்பத் திட்டமிடுகிறார்கள்!

கொன்று பலியாக்கப்பட்ட மக்களின் சடலங்களின் மீது ஏறி நின்று தங்களது சுயலாப அரசியலைத் தொடர்ந்தும் நடத்த ஏற்பாடு செய்து வருகின்றார்கள்!

புலிகள் தங்களது கோரிக்கைகளில் ஒரு போதும் உறுதியாக இருந்த வரலாறு கிடையாது! சமாதானம் என்ற முக்காடு அணிந்துகொண்டு அரச தரப்போடு 2002.02.22இல் மீண்டும் கைகுலுக்கிக் கொண்டனர் புலிகள்.

இனப் பிரச்சினையின் இறுதித் தீர்வில் சர்வதேச சமூகமும், தமிழ் முற்போக்குச் சக்திகளும், தனி நாடு சாத்தியப்படாது... சமஷ்டித் தீர்வுதான் ஒரே வழியெனச் சொல்ல ஆரம்பித்தன. புலிகளை சமஷ்டி நோக்கித் தள்ள முயற்சித்தன.

சமஷ்டிக் கோரிக்கையிலும் புலிகள் உறுதியாக இருக்கவில்லை!

சமஷ்டித் தீர்வு சரிவந்துவிடுமோ என்று புலிகள் அச்சப்பட ஆரம்பித்த போது, தமிழ் பேசும் மக்களுக்கான நிரந்தரத் தீர்வான...

சகலராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய நியாயமான தீர்வான...

சமஷ்டிக் கோரிக்கையினைக் கைவிட்டு இடைக்கால நிர்வாகம் கேட்டார்கள்! அதற்கு மனிதாபிமானப் பிரச்சினை, நாளாந்தப் பிரச்சினை என்ற முகமூடியைப் போட்டார்கள். இறுதியாகப் புலிகள் பொதுக் கட்டமைப்பு கேட்டார்கள்!

சுனாமி அழிவுகளின் பின்பு பொதுக் கட்டமைப்பு என்ற கோரிக்கையினைப் புலிகள் முன் வைத்திருந்தார்கள்! ஆனாலும் அதை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்ற விருப்பத்தில் இருந்து அல்ல..

மாறாக தமது கோரிக்கை எதுவும் நிறைவேறி விடக் கூடாது என்ற மக்கள் விரோத நிலைப்பாட்டில் இருந்துதான் புலிகள் அந்தக் கோரிக்கையினை முன்வைத்திருந்தனர் வழமை போல...

பண்டா – செல்வா ஒப்பந்தம் கிழித் தெறியப்பட்டது போல்....

டட்லி – செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப் பட்டது போல்.....

பொதுக் கட்டமைப்புக்கு எதிராகவும் பேரினவாதிகள் மிச்ச சொச்சத்தினால் கண்டனம் கிளப்புவார்கள்.... ஆகையால் அது நிறைவேற முடியாமல் போகும் என்றே புலிகள் எதிர்பார்த்தனர்.

புலிகள் எதிர்பார்த்தது போல் கண்டனங்கள் எழுந்தன...

தமது அரசியல் மதியூகத்திற்குப் பலன் கிடைத்தது என்று புலிகள் மகிழ்ந்து நின்ற போதுதான், கண்டனங்களுக்கு மத்தியிலும்.... கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும்...... ஜனாதிபதி அவர்கள் பொதுக் கட்டமைப்பு என்ற கோரிக்கையினைத் துணிந்து நிறைவேற்றி வைத்திருக்கிறார்.

எம் இனிய மக்களே!...

புலிகள் கேட்டபடி பொதுக் கட்டமைப்பு என்பது இன்று இருதரப்பாலும் கைச்சாத்திடப் பட்டுள்ளது!

சுனாமி அழிவுகளினால் அவஸ்தைப்பட்டு நிற்கும் எமது மக்கள் இனி தங்களது இடர்கள் தீர்க்கப்பட்டுவிடும் என்ற கனவுகளோடு காத்திருக்கும் இத்தருணத்தில், புலிகள் புதிதாக இன்னொரு கோரிக்கையினை நிபந்தனையாக அரச தரப்பிடம் விடுத்திருக்கின்றனர்.

புலிகளின் இந்நிபந்தனையானது பாதிக்கப்பட்ட மக்களுக்கான துயர்துடைக்கும் பணியினைத் தடுத்து நிறுத்தும் செயலாகும்! தடைக் கல்லாக விழுந்திருக்கும் இடியாகும்.

ஒரு கோரிக்கையினை நிபந்தனையாக விடுப்பதும், அந்தக் கோரிக்கை நிறைவேறும் பட்சத்தில் குறிப்பிட்ட கோரிக்கையினைக் கைவிட்டு புதியதொரு கோரிக்கையொன்றினை விடுத்துக் குழப்பங்களை ஏற்படுத்துவதும்தான் புலித் தலைமையின் இதுவரைகால வரலாறு!

வன்னியிலிருந்து அண்மையில் கிழக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்த புலிகளின் பஸ் மீது தாக்குதல் நடத்தியவர்கள் புலிகள் கூறுவதுபோல் வேறு யாருமல்ல!

புலிகள் மீது தாக்குதல் நடத்தும் போர்வையில், புலிகளே நாடகம் ஒன்றை நடாத்தி விட்டு, அதை அடுத்தவர்கள் மீது பழி சுமத்தி வருகின்றனர் வழமை போல...

புதிய நிபந்தனையினை முன்வைத்துப் புதிய சிக்கலொன்றை ஏற்படுத்தி, அதனூடாக ஒரு பதற்றமான சூழலை ஏற்படுத்துவதற்காகவே இத்தாக்குதல், புலிகளால் நடத்தப்பட்டிருக்கிறது!

பிரபாகரனது அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற கருணா அணியினர் மீது பிரபாகரன் அணியினர் தாக்குதல் நடத்தி வருவது போல், பிரிந்து சென்ற கருணா அணியினரும் பிரபாகரன் அணியினர் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். அதை நான் மறுக்க வில்லை!

இது போன்ற சகோதர யுத்தத்தை ஈ.பி.டி.பி. என்றும் வன்மையாகக் கண்டித்து வருகின்றது!

என்றுக் கருத்துடையவர்களை.... ஏன்? எதற்கு?... என்று கேள்வி கேட்ட மக்களை... கொன் றொழிப்பதற்காகக் கைத்துப்பாக்கிகளோடு அலையும் புலிகள்......

மக்களை மேலும் அச்சுறுத்துவதற்குரிய பாரிய ஆயுதங்களோடு நடமாடுவதற்கான கபட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே இத்தாக்குதலை தாங்களே தம்மீது நடத்தியுள்ளனர். இது புலிகளின் வழமையான அரசியல் யுக்தியாகும்.

தங்களது போராளிகளைத் தாங்களே கொல் வதற்குப் புலிகள் முன்வருவார்களா என்று யாரும் கேட்கலாம்.... ஆனால் புலிகளின் கடந்த கால வரலாறுகள் அப்படித்தான் நிகழ்ந்திருக்கின்றன!....

வரலாற்று ஓட்டத்தில் புலிகளினால் நமது மக்கள் கடந்து வந்த கசப்பான நிகழ்வுகளை மறு படியும் உங்கள் முன் உண்மையுள்ள சாட்சியங்களாக எடுத்துக்கூற விரும்புகிறேன்!

இலங்கை – இந்திய ஒப்பந்தக் காலத்தில் அர்த்தமற்ற நிபந்தனைகளை விதித்து அடம்பிடித்து நின்ற புலிகளோடு இந்தியத் தரப்பு உடன்பாடு காண முற்பட்டது!...

அப்போது திலீபன் என்ற புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரை உண்ணாவிரதப் போராட்டம் என்று கூறிக்கொண்டு புலித் தலைமை பலிக்களத்திற்கு அனுப்பவில்லையா என்று கேட்கின்றேன்!

தம்பி திலீபா!... நீ முன்னால் போ!.... நான் பின்னால் வருகின்றேன் என்று திலீபனுக்கு தந்திரமாக உற்சாகம் ஊட்டிய பிரபாகரன், தனது யுத்த வெறிக்கு திலீபனைப் பலிகொடுத்திருந்தார்.

திலீபனோ தனது இறுதி நாட்கள் எண்ணப் பட்டுக்கொண்டிருக்கும் போதே, தன்னைத் திட்ட மிட்டுத் தனது தலைமை பலிகொடுப்பதை உணர்ந்தார். இந்த உண்மை பலருக்குத் தெரியாதிருக்கக் கூடும். ஆனால், அன்று யாழ்ப்பாணத்தில் அரசியல் பணியில் இருந்த பலருக்கு இந்த உண்மை நன்கு தெரிந்த சங்கதிதான்.

யுத்தத்தைத் தொடங்குவதற்கு.... சமாதானப் பேச்சுக்களை முறியடிப்பதற்கு... தமது உறுப்பினர்களைப் பல தடவைகளில் அர்த்தமற்ற வகையில் பிரபாகரன் பலி கொடுக்கவில்லையா என்று கேட்கின்றேன்!

அதே காலப் பகுதியில் புலிகளின் கடற்புறா என்ற படகு மூலம் ஆயுதங்களைக் கடத்திச்செல்ல முற்பட்ட குமரப்பா, புலேந்திரன் உட்படப் புலிகளின் முக்கிய தளபதிகள் பன்னிரண்டு பேர்கள் கடலில் வைத்துக் கைதுசெய்யப்பட்டிருந்தனர்!

அவர்களை விடுவிப்பதற்குப் புலிகள் நியாயமான வழியில் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தால் அது பயனளித்திருக்கும்! ஆனால் சமாதானச் சூழலைத் திட்டமிட்டுச் சிக்கலாக்குவதற்காகப் பலாலி படை முகாமுக்குள் தமது உறுப்பினர்களுக்கு நச்சுக் குப்பிகளைக் கொடுத்து தற்கொலை செய்யுமாறு உத்தரவிட்டது புலித் தலைமை!

யுத்தத்தை வலிந்து வரவழைப்பதற்குப் புலித் தலைமை எத்தகைய விலையையும் கொடுக்கத் தயங்காது!

அதன் வாழ்வே யுத்தத்தில்தான் தங்கியுள்ளது.

மீண்டும் இன்றைய சூழலிலும் யுத்தத்தைத் தொடங்குவதற்கும்.... சமாதானப் பேச்சுக்களை முறிப்பதற்கும் புலிகள் நாடகமாடி வருகின்றனர்.

இவைகள் குறித்து ஈழப் போராட்டத்தின் முன்னோடியும், எமது கட்சியின் பிரசாரச் செயலாளருமாகிய, புலிகளினால் பலிகொள்ளப்பட்ட தோழர் சின்னபாலா அவர்கள் தமது 'முளையில் வாடிய பயிர்கள்' என்ற நூலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்!

நேசத்திற்குரிய எம் தேசத்து மக்களே!

1990ஆம் ஆண்டு புலித் தலைமை பிரேமதாசா அரசோடு கைகுலுக்கி தேன்நிலவு கொண்டாடிக் கொண்டிருந்தது.

அப்போது புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா பேச்சுவார்த்தைகளில் ஆர்வம் காட்டி வந்தபோது, பிரபாகரன் ஒரு கட்டத்தில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த குழுவினரிடம் கூறியிருந்தார். "ஜனநாயகம் என்பது ஒரு சேறு. நீங்கள் சேறு பூசிக்கொள்ள விரும்பினால், தாராளமாகப் பேச்சுவார்த்தையைத் தொடருங்கள். சேற்றைப் பூசிக்கொள்ளுங்கள். நான் யுத்தத்தை ஆரம்பிக்கும் போது நீங்கள் எங்கிருப்பீர்கள் என்பதை இட்டு நான் அக்கறைப்பட மாட்டேன்" என்றார்.

அப்போது புலிகளின் முக்கிய தலைமைப் பொறுப்புள்ளவர்கள் பேச்சுவார்த்தையில் பிரேம தாசாவுடன் கொழும்பில் இருந்து ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்! அந்நேரத்திலும் யுத்தத்தைத் தொடங்குமாறு உத்தரவிட்டது புலித் தலைமை!

எதிரியின் கோட்டைக்குள் தங்கியிருக்கும் தமது தலைமை உறுப்பினர்கள் பலியாகிப்போனால் என்ன.... கைது செய்யப்பட்டால் என்ன.... என்ற சிந்தனையே இன்றி புலித் தலைமை அன்று யுத்தத்தைத் தொடங்கவில்லையா?....

புலிகளின் வரலாறு இப்படித்தான் நிகழ்ந்து வருகிறது! யுத்தத்தைத் தொடங்குவதற்காக, தமது உறுப்பினர்களை அர்த்தமற்ற வகையில் பலிகொடுக்கும் வரலாறு என்பது அன்று தொடக்கம் இன்று வரை தொடர்கின்றது!

அந்த வரிசையில்தான் இன்றும் புலிகள் தங்களது உறுப்பினர்கள் பயணம் செய்த பஸ் மீது தாக்குதல் நாடகத்தை நடத்தியுள்ளனர்.

ஏனென்றால் புலிகளுக்கு மக்கள் மீதான விருப்பு எதுவும் இருப்பதில்லை! மக்களின் வாழ்வியல் மீதான அக்கறை எதுவும் இருப்பதில்லை! மாறாக யுத்தத்தின் மீதுதான் அவர்களது விருப்பும் இருப்பும் என்பது வரலாறு கண்ட உண்மை!

அதற்குப் புலிகளுக்குத் தேவைப்படுவது புதிய புதிய நிபந்தனைகள்! புதிய புதிய சந்தர்ப்பவாதங்கள்!

பதற்றமான சூழல்!... பலி கொடுக்கும் தந்திரம்! பலியெடுக்கும் தாகம்!... இவைகள் மட்டும்தான்!

இலங்கை – இந்திய ஒப்பந்தக் காலத்திற்கு முன்பு மரணித்த புலி உறுப்பினர்களின் தொகை 651 பேர்கள் மட்டுமே!

புதிய நிபந்தனைகளை, புதிது புதிதாக உருவாக்கிப் புலிகள் யுத்தத்தை அன்று தொடங் கியதால் மரணித்த புலி உறுப்பினர்களின் தொகை இன்று பதினெண்ணாயிரத்தைத் தாண்டி நிற்கிறது, தமது பொறுப்பற்ற செயற்பாடுகளினால் தவறாக வழிநடத்தப்பட்டு பலிகொள்ளப்பட்ட எமது இனத்தின் இளம் குருத்துகளுக்கு உரிமையும் கோருகிறார்கள்.

மரணித்த மக்களின் தொகை அன்றையதை விடப் பல மடங்கு பெருகி இன்று அறுபது ஆயிரத்தையும் தாண்டி நிற்கிறது!

இந்த இழப்புக்கள் யாருடைய தவறான அணுகுமுறையால் ஏற்பட நேர்ந்ததோ அவர்களால் மீண்டும் அந்த வரலாற்றுத் தவறுகள் இழைக்கப்பட ஒத்திகை பார்க்கப்படுகின்றன. எச்சரிக்கைகள் விடப்படுகின்றன.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு, புலிகள் அமைதி வழிக்குத் திரும்பி இருந்தால், நமது மக்கள் இத்தகைய பாரிய இழப் பினைச் சுமந்து நிற்பார்களா என்பதனைச் சிந்தித்துப் பார்க்குமாறு என் தேசத்து மக்களை உரிமையுடன் கேட்கின்றேன்.

1995காலப் பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்களோடு புலிகள் பேச்சு வார்த்தை நடத்தியபோது அரசியல் தீர்வு குறித்து பேசப்பட்டது.

அதைக் கைவிட்டு புலிகள், இயல்பு வாழ்க்கை சீராக்கப்பட வேண்டும் என நிபந்தனைகளை மாற்றிக்கொண்டார்கள்.

பூநகரி இராணுவ முகாமை அகற்றுமாறு புலிகள் அப்போது புதிய நிபந்தனை விதித்தார்கள்... கிழக்கில் ஆயுதங்களுடன் சுதந்திரமாக நடமாட வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தனர்.

அதனால் யுத்தம் வெடித்தது! அதன் பின்பு என்ன நடந்தது? புலிகள் நீக்கிவிடுமாறு கோரியது ஒரேயொரு சோதனைச் சாவடியைத்தான்.


ஆனால் யுத்தம் தொடங்கியதால் யாழ். குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததன் பின்பு வீதிக்கு வீதி பல நூறு சோதனைச் சாவடிகள் முளைத்தன!

இந்த விவேகமற்ற அரசியல் தவறுகள் அன்று யாரால் நிகழ்த்தப்பட்டனவோ, இன்று மறுபடியும் அவர்களே அதே தவறுகளைச் செய்வதற்காகக் கங்கணம் கட்டி நிற்கின்றனர், நமது மக்களின் வாழ்வைப் பலி எடுக்கும் வகையில்...

இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஒரு பொன்னான சந்தர்ப்பம்! அந்தச் சந்தர்ப்பத்தினை தமிழ் பேசும் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்குப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. ஒன்று – புலித்தலைமைக்கு!.... இன்னொன்று – ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைமைக்கு!...

புலிகளிடம் தொலைதூரப் பார்வை இருக்கவில்லை! ஆனால் பாசிசத் தன்மையுடன் கூடிய ஒரு கட்டுக்கோப்பு இருந்தது! ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைமையிடம் அன்று கட்டுப்பாடான நெறிப்படுத்தல் இருக்கவில்லை! ஆனால் அவர்களிடம் தொலைதூரப் பார்வை இருந்தது! சந்தர்ப்பத்தைச் சரிவரக் கையாளாமல், பொறுப்பற்ற முறையில், நமது மக்களின் வாழ்வின் மீது அக்கறை இன்றி இரு தரப்பும் அந்தப் பொன்னான வாய்ப்பினைப் போட்டுடைத்தனர்! ஆனாலும் அந்தப் பொன்னான வாய்ப்பு எங்களை விட்டுக் கைநழுவிப் போனமைக்கான பிரதான பொறுப்பு புலிகளையே சாரும்!

13 வருடங்கள் கழித்து 2000ஆம் ஆண்டு புலிகளின் மாவீரர் தினத்தின்போது இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் நல்ல அம்சங்கள் இருந்தன என்று புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கூறியிருந்தார்!



டக்ளஸ் தேவானந்தா

காலம் கடந்த ஞானம்!.... கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் என்பார்கள் இதனைத் தான்.

1995இல் அரசியல் சீர்திருத்த யாப்பினை இன்றைய ஜனாதிபதி அவர்கள் வெளியிட்டிருந்தார். அதைத் தயாரித்திருந்தவர் கலாநிதி நீலன் திருச் செல்வம் அவர்களே! அதே நீலன் திருச்செல் வத்தை புலிகள் பலியெடுத்தனர்.

13.03.2003 அன்று யாழ். பத்திரிகை ஒன்றில் புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் அந்த 1995இன் தீர்வு வரைபு நல்லதொரு அம்சம் என்று கருத்துக் கூறியிருந்தார். புலிகளினால் கொல்லப்பட்ட நீலன் திருச்செல்வத்தை உலகத்தில் இருந்த மிகப் பெரும் அரசியல் அமைப்பு நிபுணரை – எம்மால் திரும்பிக் கொண்டுவர முடியுமா?

காலம் கடந்த ஞானம்!.....

சமாதானத்திற்கான சந்தர்ப்பங்களைச் சுட்டெரித்துவிட்டு..... ஆயிரம் ஆயிரம் மக்களையும் தமது இயக்க உறுப்பினர்களையும் சுடுகாட்டுக்கு அனுப்பிவிட்டு... சுடலை ஞானம் பேசுவதில் என்ன பயன்?..., அந்தச் சுடலை ஞானமும் சந்தர்ப் பத்திற்கும் தம் வசதிக்கும் ஏற்றவாறே புலிகளினால் பேசப்படும்.

இன்றைய சமாதானச் சூழலையும் புலிகள் தட்டிக்கழித்து வருகின்றனர்!

புலிகளினால் 'மாமனிதன்' பட்டம் வழங்கப்பட்ட 'தராக்கி' என்கின்ற சிவராம் தனது கடைசிக் கட்டுரை ஒன்றில், தற்போது புலிகளின் ஆர்ப்பாட்டங்களில் மக்கள் அவ்வளவாகக் கலந்துகொள்வதில்லை என்றும், மக்களது பிரச்சினைகள் எவ்வளவோ இருந்தும் அவைகள் கோஷங்களாகவும் கோரிக்கைகளாகவும் புலிகளது ஆர்ப்பாட்டங்களில் எடுக்கப்படுவதில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

அன்பார்ந்த மக்களே! நீங்கள் கூறுங்கள்! புலிகள் தற்போது விதித்திருக்கும் காலக் கெடுவானது, மக்களாகிய உங்கள் நலன் சார்ந்த கோரிக்கையா?.... அல்லது தங்களது சொந்த இருப்புக்கான கோரிக்கையா?... அதுவும் பொதுக் கட்டமைப்பு கையெழுத்து வைக்கப்பட்டதன் பின்...

தங்களது பாதுகாப்பைத் தாங்களே கேள் விக்கிடமாக்கிவிட்ட புலிகள், புதிய நிபந்தனை விதித்திருப்பது தங்களுக்காகவா?.... அல்லது மக்களாகிய உங்களது சமாதானக் கனவுகளுக் காகவா?...

இன்னொரு பத்து வருடங்களின் பின்பு புலிகள் கடந்த காலங்களைப்போலவே மறுபடி கூறுவார்கள்! 2005இல் சமாதானத்திற்கான முன்னெடுப்பில் நல்ல அம்சங்கள் இருந்தன என்று காலம் கடந்த ஞானம் பேசுவார்கள்!

அப்போது இந்த மண்ணில் சாம்பல் மேடுதான் எஞ்சியிருக்கும்! மனிதப் புதைகுழிகள்தான் மிச்சமிருக்கும்!

அந்த ஆபத்தைத் தடுப்பதற்காகவே.... ஆபத்திலிருந்து மக்களாகிய உங்களை மீட்பதற்காகவே ஈ.பி.டி.பி.யினராகிய நாங்கள் உறுதியோடு, எமது தாயக மண்ணில் கால் பதித்து நின்று மக்களுடன் மக்களாக எழுந்து நிற்கின்றோம்!

இறுதியாகப் புலிகளின் மனோ நிலையைப் புரிந்துகொள்வதற்காக ஒரு வரலாற்றுச் சம்பவத்தை நான் கூறலாம் என நினைக்கின்றேன்!

1986ஆம் ஆண்டு நவம்பரில் முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களினால், ராஜீவ் காந்தி, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரபாகரன் உடனான பெங்களூர் பேச்சு வார்த்தைக்கான முன் முயற்சி மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டம் அது...

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்....)

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## அமிர்தலிங்கத்தின் புதல்வர்களுக்கு எதிராகப் பயங்கரச் சதி

இந்திரா காந்தியின் மரணம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்தைத் தனிப்பட்ட ரீதியிலும் பெரிதும் பாதித்தது. அமிரின் இரண்டு புதல்வர்களான காண்டீபனையும் பகீரதனையும் பயங்கரவாத நடவடிக்கைகளோடு தொடர்பு படுத்தி இலங்கை அரசு மேற்கொண்ட பயங்கரச் சதியை வன்மையாகக் கண்டித்தவர் திருமதி காந்தி.

1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சர்வகட்சி மாநாட்டுக் கூட்டத் தொடரில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா முன்வைத்த யோசனைகள் தமிழ் தலைவர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித்தன. இந்திரா காந்தி 1984 அக்டோபரில் கொலை செய்யப்படுவதற்கு ஒரு வருடம் முன்னதாக நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இலங்கை அரசின் தந்திரோபாயங்கள் குறித்துக் கடுமையாகச் சாடியிருந்தார். 1983ஆம் ஆண்டு அக்டோபரில், புதுடில்லியில் நடத்திய பத்திரிகையாளர் மாநாடொன்றில் மட்டக்களப்பு, வடமுனை சிங்களக் குடியேற்றத் திட்டம், பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கூட்டணி எம்.பிக்கள் இழக்கும் நிலை மற்றும் அமிர்தலிங்கத்தின் புதல்வர்களைப் பயங்கரவாதிகளெனக் காட்ட இலங்கை அரசு எடுத்த முயற்சிகளையெல்லாம் குறிப்பிட்ட இந்திராகாந்தி, இனப் பிரச்சினைத் தீர்வை இலங்கை அரசு இழுத் தடிப்பதாகக் குற்றஞ்சாட்டினார்.




அமிர்தலிங்கத்தின் இரண்டாவது புதல்வர் பகீரதனுக்கு திருமணம் நிச்சயதார்த்தம் செய்து வைக்கப்பட்டிருந்த மலர்விழி என்ற யுவதியின் சகோதரனான வள்ளுவன் என்பவரை தலைமன்னாரில் தற்செயலாக இராணுவத்தினர் கைது செய்திருந்தனர். வள்ளுவன் இராஜலிங்கம் என்ற இந்த 19 வயது மாணவர் சென்னையிலிருந்து தனது சகோதரியை


**அமிர்தலிங்கத்தின் இரண்டாவது புதல்வர் பகீரதனுக்கு திருமணம் நிச்சயதார்த்தம் செய்து வைக்கப்பட்டிருந்த மலர்விழி என்ற யுவதியின் சகோதரனான வள்ளுவன் என்பவரை தலைமன்னாரில் தற்செயலாக இராணுவத்தினர் கைது செய்திருந்தனர். வள்ளுவன் இராஜலிங்கம் என்ற இந்த 19 வயது மாணவர் சென்னையிலிருந்து தனது சகோதரியை அழைத்து வந்திருந்தார். தலைமன்னார் இராணுவ சோதனைச் சாவடியில் கைது செய்யப்பட்ட இந்த மாணவர் தள்ளாடி இராணுவ முகாமுக்கும் பின்னர் பலாலி இராணுவ முகாமுக்கும் கொண்டு செல்லப்பட்ட பின்னர் கொழும்பிலுள்ள இரகசியப் பொலிஸ் தலைமையகத்துக்கு அழைத்து வரப்பட்டார். அம் மாணவரைக் கைது செய்த தலைமன்னார் இராணுவத்தினர் அவரிடமிருந்து தமிழில் எழுதப்பட்ட நான்கு கடிதங்கள் கைப்பற்றப்பட்டனவென்று கூறினர்.**


அழைத்து வந்திருந்தார். தலைமன்னார் இராணுவ சோதனைச் சாவடியில் கைது செய்யப்பட்ட இந்த மாணவர் தள்ளாடி இராணுவ முகாமுக்கும் பின்னர் பலாலி இராணுவ முகாமுக்கும் கொண்டு செல்லப்பட்ட பின்னர் கொழும்பிலுள்ள இரகசியப் பொலிஸ் தலைமையகத்துக்கு அழைத்து வரப்பட்டார். அம் மாணவரைக் கைது செய்த தலைமன்னார் இராணுவத்தினர் அவரிடமிருந்து தமிழில் எழுதப்பட்ட நான்கு கடிதங்கள் கைப்பற்றப்பட்டனவென்று கூறினர்.

வள்ளுவனை அரச தொலைக்காட்சியான ரூபவாஹினியில் தோன்றச் செய்த அரசாங்கத் தகவல் பிரிவினர், அக் கடிதங்களை வள்ளுவனைக் கொண்டே வாசிக்கச் செய்தனர். அக் கடிதத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பையும் வள்ளுவனே வாசித்தார். பேட்டி கண்டவரின் கேள்விக்குப் பதிலளித்த வள்ளுவன், கடிதமொன்றினை அமிர்தலிங்கத்தின் மூத்த புதல்வரான காண்டீபன் எழுதினாரெனக் குறிப்பிட்டார். தமிழர்

(அரசியல் தொடர்)

விடுதலைக் கூட்டணியின் இளைஞர் அணித் தலைவரான மாவை சேனாதிராஜாவுக்கு அந்தக் கடிதம் விலாசமிடப்பட்டிருந்ததாகவும் கூறினார். தமிழீழ தேசிய இராணுவமொன்றினை அமைக்க தமிழர் விடுதலைக் கூட்டணி திட்டமிட்டுள்ளதாகவும், உசிதமான தருணத்தில் இலங்கை இராணுவத்தை எதிர்த்துப் போராட ஐம்பது முதல் நூறுபேர் வரையிலான தமிழ் இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது. தமிழ் நாட்டில் பயற்சி முகாம்களை அமைக்க தமிழகவாசியொருவர் மூலம் இரண்டு காணித் துண்டுகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணி வாங்கியுள்ளதாக அக் கடித்தில் எழுதப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. லண்டனில் சேகரிக்கப்பட்ட பணத்தைக் கொண்டே இக் காணிகள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும், அமிர்தலிங்கம் புலி இயக்கத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்ததாகவும், லிபியாவுடனான தொடர்புகளை அமிர்தலிங்கமே கையாள்வதாகவும் கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததாக ரூபவாஹினியில் வாசிக்கப்பட்ட கடிதம் கூறியது. அத்துடன் வவுனியா ஐ.தே.க. அமைப்பாளரான வி.புலந்திரனைக் கொன்றது தாமேயென தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. புலந்திரனின் கொலைக்குப் பின்னர், புலந்திரனின் மனைவி இராஜமனோகரி பின்னாட்களில் வவுனியா எம்.பி.யாகவும் இணையமைச்சராகவும் பணிபுரிந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இக் கடிதம் அரசாங்கத்தின் திட்டமிட்ட தயாரிப்பெனவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டவை வெறும் கட்டுக்கதைகளென்றும் அமிர்தலிங்கம் உடனடியாக மறுப்புத் தெரிவித்திருந்தார்.

அக்டோபர் மாதம் 17ஆம் திகதி சென்னையில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் உயர் பீடம் அரசாங்கத்தின் அபாண்டப் பிரசாரங்களை வன்மையாகக் கண்டித்து அறிக்கையொன்றினை வெளியிட்டது. புலிகளுடனோ அல்லது வேறெந்த தமிழ் தீவிரவாதக் குழுக்களுடனோ தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத் தொடர்பில்லையென அமிர் லண்டன் பி.பி.சி.க்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார். அரசின்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம் + அம்பி மகன்**

அபாண்டப் பிரசாரங்களைக் கண்டித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் பீடம் விடுத்த அறிக்கை காரசாரமானதாக அமைந்திருந்தது. வவுனியா ஐ.தே.க. அமைப்பாளர் புலந்திரனின் கொலைக்கும் தமக்கும் தொடர்பில்லையென்றும், எந்தவொரு தமிழ் தீவிரவாதக் குழுவுடனும் கூட்டணிக்கு உறவுகள் கிடையாதென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. "எமது அரசியல் கட்சி, அகிம்சைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதென்பதை நாம் வலியுறுத்த விரும்புகின்றோம். எந்தவொரு வன்செயல் சம்பவத்திலோ அல்லது எந்தவொரு வன்செயல் அமைப்புடனோ அல்லது இயக்கத்துடனோ எமக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பில்லை. இவ்வாறு எமது கட்சியைத் தொடர்பு படுத்த எடுக்கப்படும் முயற்சிகளை நாம் முழுமையாக நிராகரிக்கிறோம்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கூட்டணியின் அறிக்கை வெளியிடப்பட்ட மறுதினம் அதாவது, அக்டோபர் 18ஆம் திகதி கொழும்பில் இலங்கை அரசின் தகவல் திணைக்களம் விசேட பத்திரிகையாளர் மாநாடொன்றினைக் கூட்டியது. இம் மாநாட்டில் அமிரின் புதல்வர்களைச் சம்பந்தப்படுத்திய ஏனைய மூன்று கடிதங்களும் வெளியிடப்பட்டன. ஒரு கடிதம் அமிர்தலிங்கத்தின் இளைய புதல்வர் பகீரதனால் அப்போதைய மன்னார் எம்.பி. சூசைதாசனின் அந்தரங்கச் செயலாளரான ஆர். ஜெயராஜா என்பவருக்கு எழுதப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சியளிக்க தமிழகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட காணி பதின்மூன்று ஏக்கர்கள் விஸ்தீரணம் கொண்டது என்று இக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது. மூன்றாவது கடிதம், பிரேம்குமார் என்பவருக்கு எழுதப்பட்டிருந்தது. மன்னாரையும் வவுனியாவையும் சேர்ந்த இளைஞர்களுக்கு 'ஏயர் ரைபிள்' எனப்படும் வானப் பரப்பை நோக்கிச் சுடும் ரைபிள் பயிற்சியளிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. லிபியாவின் தொடர்பு கிடைத்திருப்பது எமக்குப் பெருவெற்றி என்றும் அக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

அரசாங்கம் இந்த பிரசாரங்களை மேற்கொண்டபோது அமிர்தலிங்கம் லண்டனில் தங்கியிருந்தார். அவர் இந்திரா காந்தியைச் சந்தித்து நிலைமைகளை விளக்குவதற்காக அக்டோபர் 18ஆம் திகதி லண்டனிலிருந்து புதுடில்லி வந்து சேர்ந்தார். முதல்நாளே சென்னையிலிருந்து சிவசிதம்பரமும் சம்பந்தனும் புதுடில்லி சென்றடைந்தனர். மூன்று தலைவர்களும் இந்திரா காந்தியைச் சந்தித்து நிலைமைகளை விளக்கினர்.

(தொடர்ந்து வடியும்....)




"ஸ்ரீதேவிக் குட்டிதான் 'எனக்கு உன்னோட வீட்டையே காண்பிச்சுக் கொடுத்தவள்...."

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் துள்ளிப் பாய்ந்து படுக்கையிலிருந்து எழுந்த பிரபாகரன், சட்டென்று நெருப்புப்பெட்டியை எடுத்து அருகில் வைத்திருந்த விளக்கை ஏற்றினான்.

"கடவுளே.... பகவதி! இவன் என்னென்னமோ சொல்றானே?" பிரபாகரனின் குரலில் பீதி அப்பட்டமாகத் தெரிந்தது.

'ஸ்ரீதேவிக் குட்டி' என்ற பெயரை குமார் உச்சரித்ததில், ரொம்பவேதான் அதிர்ந்து போனான் பிரபாகரன்.

குமார் கவலைப்படாமல் தொடர்ந்தார்.

"சரி, நீ மிச்ச விஷயத்தையும் தெரிஞ்சுக்க. ஸ்ரீதேவிக் குட்டி இப்ப எங்க காலேஜில் இருக்கிற லாபரெட்டரி ரூம்லதான் அருபமா இருக்கிறாள். இன்னும் சரியா சொல்றதானா என் படுக்கையறைக்குப் பக்கத்திலேயேதான் இருக்கிறாள்...."

பிரபாகரன், நம்பாமல் புன்னகைத்தான்.

"ஓகோ அப்படியா சேதி? இப்ப புரிஞ்சு போச்சு, சின்னத் திருமேனி பயங்கரமான ஆளுதான். காலேஜில படிக்கிற யாராவது ஒரு பெண்ணா இருக்கும். நீ இப்ப சொன்ன ஸ்ரீதேவிக் குட்டி ஆனா, அவள்தான் இந்த வீட்டை அடையாளம் காட்டினாள்னு புருடா விடாதே."

"இப்போதைக்கு அப்படியே இருக்கட்டும். மற்றதையெல்லாம் அப்புறம் சொல்றேன்."

நண்பன் தன்னை நம்பாதது குமாருக்குப் பிடிக்கவில்லை. சற்றுநேரம் மௌனமாக இருந்துவிட்டு, கண்களை மூடிப் படுத்துக் கொண்டார். ரொம்ப நேரம் தூக்கமில்லாமல் தவித்தார்.

காலையில் எழுந்தவுடன் கோயில் குளத்தில் குளித்து விட்டு, தேவியை வணங்குவதற்காகக் கோயிலுக்குப் போனார் குமார்.

**எழுதுவது சிவன்**

ஒரு காலத்தில் அபரிமிதமான சக்தியுடன் விளங்கிய கோயில் என்றுதான் அதைப் பற்றிப் பேசிக் கொண்டனர். பறவைகள்கூட கருவறையின் மேல் பறக்காது என்பார்கள். அப்படிப் பறந்த பறவைகள் எரிந்து விழுந்ததாகவும் சொன்னார்கள். கிராமத்தில் இதுபோல எத்தனையோ நம்பிக்கைகள்!

கோயிலிலிருந்து திரும்பி வந்த குமார், பிரபாகரனின் வீட்டில் சிற்றுண்டி சாப்பிட்டார்.

முதல்நாள் இரவு வந்தபோது, பிரபாகரனின் அம்மாவைக் குமார் பார்க்கவில்லை. அவள் வேறு அறையில் உறங்கிக் கொண்டிருந்தாள். இப்போது அந்த அம்மாதான் சிற்றுண்டி பரிமாறினாள்.

ஒரு காலத்தில் அவர், குமாரின் பரம்பரை வீட்டை பெருக்கும் வேலைக்காரியாக இருந்தாள். இப்போது வயது ஐம்பத்தைந்துக்கு மேல் இருக்கும்.

"என்ன சின்னத்திருமேனி! தறவாடு (பரம்பரை வீடு) நண்பர்கள் எதுவும் வேண்டாம்னு நினைச்சுட்டாங்களா?"

"அப்படி இல்லைம்மா. பட்டணத்திலேயே வேலை கிடைச்சுடுச்சு. கொஞ்ச தூரமா என்ன? அடிக்கடி இங்க வந்திட்டுப் போறதும் அவ்வளவு சுலபமாயில்லை. அப்படியே கஷ்டப்பட்டு வந்தாலும் இங்க யார் இருக்கிறாங்க?"

குமார், பிடிப்பில்லாமல் பதில் சொன்னார்.

"அதெல்லாம் சரிதான். இருந்தாலும் எவ்வளவு நாளைக்குத்தான் உங்க வீடு புல் பூண்டத்துப்போனது மாதிரி கிடக்கிறது?"

"அதுக்கெல்லாம் ஒரு ஏற்பாடு பண்ணிடலாம்."

குமார் அப்போதைக்கு அந்த விஷயத்திலிருந்து நழுவ முயன்றார்.

"நாம் அப்படியே காலாற நடந்துட்டு வரலாமா குமார்? அப்படியே உங்க வீட்டையும் பார்க்கலாமே!"

- பிரபாகரன் கேட்டான்.

இருவரும் புறப்பட்டனர். அவர்கள் முதலில் போனது, தறவாடு காரிவஸ்தரின் வீட்டுக்குத்தான்.

பொழுது விடிந்தபிறகுதான் அப்புநாயருக்கு குமார் வந்திருக்கும் சேதி தெரிந்தது. உடனே பிரபாகரனின் வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனால், அதற்குள் அவர்களே அவரது வீட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

"என்ன திருமேனி-ஒரு வார்த்தை சொல்லியனுப்பியிருந்தா நானே அங்க வந்து பார்த்திருப்பேனே?"

- அப்பு நாயர் மிகவும் பணிவான குரலில் கேட்டார்.

"சும்மாதான் வந்தேன். ஒரு தடவை ஊரைப் பாத்துட்டுப் போகலாமேன்னு தோணிச்சு. அப்படியே கிளம்பிட்டேன். நாளைக்கே திரும்பிப் போயிடுவேன். இப்ப நம்ம வீட்டைப் போய்ப் பார்க்கலாமா?" என்றார் குமார்.

எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு இந்த வீட்டின் கதவைத் திறந்தார் அப்புநாயர். துருப்பிடித்திருந்த தாழ்ப்பாள் கரகரவென்று



சத்தத்தை எழுப்பியது.

உள்ளே நுழைந்ததும் முற்றப் பகுதி முழுவதும் பச்சைப் புல் வளர்ந்திருப்பது தெரிந்தது. துளசி மாடத்தின் பாதியளவு உயரம் வரை புல் செழித்து வளர்ந்திருந்தது.

"போன வாரம்தான் புல் வெட்டினோம்."

"மறுபடி எல்லாத்தையும் ஒரு தடவை சுத்தம் பண்ணி வையுங்க. போகும்போது பணம் தர்றேன்."

"பணமே வேண்டாம், திருமேனி. தேங்கா வெட்டின வகையில கொஞ்சம் பணம் என்கிட்ட இருக்கு. நான் பார்த்துக்கிறேன். அப்புறம் இந்த இடத்தை விற்கவா போறீங்கன்னு ரொம்பப் பேர் எங்கிட்ட கேக்கிறாங்க...."

"இப்ப அப்படி எதுவும் எண்ணமில்லை" என்ற குமார், வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு பிரபாகரனோடு திரும்பினார்.

மதிய உணவுக்குப் பிறகு கொஞ்ச நேரம் படுத்து ஓய்வெடுத்தார் குமார்.

மாலை நேரத்தில் இருவரும் கோயிலை நோக்கி நடந்தனர்.

(வாசனை வீசும்....)

# நம்மைப் பார்க்குது உலகம்!

"நீ உன் வாழ்க்கைத் துணையிடம் அன்பு செலுத்து. பதிலுக்கு அவர் உன் மீது அன்பு செலுத்துவார் என்கிறீர்கள். நான் என் மனைவியை மனதார நேசிக்கிறேன். ஆனால், அவள் நான் சொல்வது எதையுமே கேட்பதில்லை....இது அவள் எனக்குச் செய்யும் தொடர்ந்த அவமதிப்பு! அப்படி என்னை அவமதிக்கும் மனைவியிடம் நான் எப்படித் தொடர்ந்து அன்பு காட்டுவது?" - இப்படிக் கேட்பவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள்.

மனைவி என்று பார்ப்பதனால்தான் இந்தக் குழப்பம். உங்கள் குழந்தைகளை எடுத்துக்கொள்ளுங்கள்! அவர்கள் நீங்கள் சொல்லுகிற எல்லா விஷயத்தையும் கேட்டு நடக்கிறார்களா? இல்லையே! அதனால் உங்கள் குழந்தைகளுக்கு உங்கள் மீது ஆசையும் பாசமும் இல்லை என்றா அர்த்தம்? அதேபோலத்தான் நாம் ஒருவர் மீது ஆசையாக இருக்கிறோம், அன்பு செலுத்துகிறோம் என்பதற்காக நாம் சொல்லும் அத்தனை விஷயங்களையும் அவர் கேட்டு அதன்படி நடக்க வேண்டும் என்பது அவசியம் கிடையாது.



இது மேலைநாடு ஒன்றில் நடந்த கதை -

அன்று அவர்களுக்கு வெள்ளி விழா! அதாவது அவர்கள் திருமணம் நடந்து இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்ததைப் படு ஆர்ப்பாட்டமாகக் கொண்டாடிவிட்டு, இரவை அந்நியோன்யமாக அனுபவிப்பதற்கு வீடு திரும்பினார்கள். இருபத்தைந்து ஆண்டுகள் டைவர்ஸ், கோர்ட், கேஸ் என்று இல்லாமல் வாழ்க்கை நடத்துவது என்பது அந்த நாட்டில் செவ்வாய் கிரகத்தில் ஒரு ராக்கெட்டைக் கொண்டுபோய் இறக்கிற அளவுக்குச் சாதனை!

அந்த இரவு, கணவன் மனைவியிடம் கேட்டான். "டார்லிங்! நாம் திருமணம் செய்து இத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டாலும் உன் அலமாரி பக்கம்கூட என்னை அனுமதிப் பதில்லை! இன்றாவது நான் உன் அலமாரியைத் திறந்து பார்க்கலாமா?"

"ஓயெஸ், பாருங்களேன்!" என்று அவள் அலமாரியைத் திறந்து காட்டினாள். ஆடைகள், அணிகலன்கள் என்று நிரம்பி வழிந்துகொண்டிருந்த அலமாரியின் ஒரு பகுதியில், கத்தைக் கத்தையாகப் பணம். அதன் பக்கத்தில் இரண்டு முட்டைகள்!

இதைப் பார்த்ததும் கணவனுக்கு மனைவி மீது ஏகப் பெருமை வந்துவிட்டது. 'சே! செலவாளி என்று நினைத்த நமது மனைவி இத்தனை பணம் சேர்த்து வைத்திருக்கிறாளே' என்று பூரித்துப்போன கணவன், மனைவியிடம் கேட்டான் -

"டார்லிங்! எல்லாம் சரி...அலமாரியில் ஏன் முட்டைகளை வைத்திருக்கிறாய்?"

மனைவியின் முகம் திடீரென்று மாறியது. கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு மனைவி சொன்னாள் : "என்னை மன்னிப்பீர்கள் என்ற நம்பிக்கையில் இதைச் சொல்கிறேன்! வேறு ஆடவர்களிடம் நான் என்னை இழக்கும்போது, அதன் அடையாளமாக ஒரு முட்டை வாங்கி அலமாரியில் வைத்துவிடுவது என் வழக்கம்."

இதைக் கேட்டு கணவனுக்குக் கோபம் வரவில்லை! அலமாரியைப் பார்த்தான்! இரண்டே இரண்டு முட்டைகள்தான்! ஆனந்தக்கண்ணீரோடு மனைவியை ஆரத்தழுவிக்கொண்டு சொன்னான்: இருபத்தைந்து ஆண்டுகால திருமண வாழ்க்கையில் இரண்டே இரண்டு முறைதான் நீ தவறு செய்திருக்கிறாயா? யூ ஆர் ரியலி கிரேட்!"

மனைவி சொன்னாள்: டார்லிங்....நான் முழுமையாகச் சொல்லி முடிப்பதற்குள்ளேயே நீங்கள் ஏதேதோ பேசுகிறீர்கள். ஒவ்வொரு முறையும் அலமாரியில் முட்டைகளின் எண்ணிக்கை ஒரு டஜன் ஆனதும், ஒரு சிறு தொகைக்கு அவற்றை விற்றுப் பணமாக்கி அதையும் முட்டையின் பக்கத்திலேயே வைத்துவிடுவேன்!"

அந்த இரண்டு முட்டைகளின் பக்கத்தில் கத்தைக் கத்தையாக இந்தப் பணத்தைப் பார்த்து பிளட் பிரஷர் ஏறிப்போய், அந்தக் கணமே மனைவியை டைவர்ஸ் செய்துவிட்டான் கணவன்!

இந்தக் கதையை இங்கே சொன்னதற்குக் காரணம். உண்டு! யோசித்துப் பாருங்கள்...உலகின் எந்த நாட்டையும்விட குடும்ப வாழ்க்கை என்பது சிதையாமல் நெறியோடு பாதுகாப்பாகச் செழித்து வளர்வது நமது பாரத நாட்டில்தான்! கணவன் - மனைவி - குழந்தைகள் - குடும்பம் இதெல்லாம் எப்படி இருக்கவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள உலகம் நம்மைத்தான் பார்க்கிறது.

குறிப்பாக, ஆண்களுக்கு ஒன்று சொல்கிறேன் - நமது நாடு உண்மையிலேயே புண்ணியம் செய்த நாடு! நெறியோடு வாழ்வது என்பதுதான் நமது நாட்டுப் பெண்களின் வாழ்க்கை முறை. நமது நாட்டுப் பெண்களில் சிலர் கோபமாகச் சத்தமாகப் பேசும் குணம் கொண்டவர்களாக இருக்கலாம். ஆனால், அவர்கள் நெறி தவறமாட்டார்கள்! ஆனால், மேலைநாட்டில் எத்தனை பெண்களுக்கு இந்த வர்ணனை பொருந்தும் என்றும் யோசித்துப் பாருங்கள்!

நன்றி : சுவாமி சுகபோதானந்தா.

(தொடர்ந்து வரும்........)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 127க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

சு. சதுர்ராமன், 77, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. எட்வட்மைக்கல், 26/17, வெளியாமுன வீதி, எந்தல, வத்தளை.
2. பி. லோகநாத், 2ஆம் கட்டை, ஹப்புத்தளை வீதி, பண்டாரவளை.
3. க. நிரோஷிதா, இராமகிருஷ்ண வீதி, களுதாவளை, களுவாஞ்சிக்குடி.
4. க. லெ. பாத்திமா றிஸ்னா, 134, ஜின்னா வீதி, அக்கரைப்பற்று -05.
5. எம். எம். ஜலீல், 11, எம். ரி. மஹய்யாவ, கண்டி.
6. ச. சொ. மகிழ்ராஜ், 70/3 A, அலன் அவனியூ, தெகிவளை.
7. டு. ரஜந்தினி, 40, தபாற்கந்தோர் வீதி, திருகோணமலை.
8. பி. கேதீஸ்வரன், செலூலர் போன் சொப், பிரதான வீதி, காரை தீவு.
9. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை, 84/10, பாரதி வீதி, திருகோணமலை.
10. நஜிமா நவ்சர், 143/12A, மொஹீதீன் மஸ்ஜித் வீதி, மருதானை, கொழும்பு - 10.

### குறுக்கெழுத்துப் போட்டி 129

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | |
| 7 | | | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | | | 18 |
| 19 | | 21 | | 23 | 24 |
| 25 | 26 | 27 | | | 30 |
| | | 33 | 34 | 35 | |

### இடமிருந்து வலம்

1. ஒரு நாடு.
10. ஒவ்வொரு நாளும் மாறும்.
13. பெண்கள் சொல்லத் தயங்குவர்.
22. உடலின் மேற்புறத்தில் உள்ளது.
25. வியாபாரிகளிடம் கேட்காதே (மாறியுள்ளது)
33. சம்பந்தருக்கும் இதற்கும் தொடர்பு உண்டு.

### மேலிருந்து கீழ்

1. இவனும் இலங்கையை ஆண்டவன்.
4. சிறைக்குப் போனவன்.
12. பழம் ஒன்று (குழம்பியுள்ளது).
15. மனிதர்களை வஞ்சிக்கும் நிலை/சில மனைவி மார் கணவனுக்கு இதையும் செய்வார்கள்.

### குறுக்கெழுத்துப் போட்டி 127 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வி | 2 ணை | | 4 யு | 5 றா | |
| 7 ற | 8 ஜூ | 9 ற | 10 த | 11 னி | 12 ன் |
| 13 ன் | 14 ய | | 16 ல் | 17 இ | 18 தி |
| | | 21 ன் | 22 ய | 23 ல | 24 க |
| 25 இ | 26 டை | | | | 30 |
| 31 சை | | 33 ன் | 34 மா | 35 கு | 36 ற |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 20.07.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-129
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# வெளிநாட்டு மாப்பிள்ளை

அன்று இரவு முழுவதும் வைதேகியால் தூங்கவே முடியவில்லை. விடிந்தால் ஆனந் போய்விடுவான் என்ற ஆதங்கம் அவளுக்கு.திருமணமாகி ஒரு கிழமை கூட ஆகாமலிருக்க, தன் கணவன் தன்னை விட்டுச் செல்வதை நினைக்கும்போது அவளால் எப்படித்தான் தூங்க முடியும். தூக்கமின்றித் தவித்த கண்களிற்கு ஆறுதலளிக்கும் வகையில் வெளியே வந்தவள், முற்றத்திலிருந்து இருண்டு கிடந்த வானத்தை வெறித்துப் பார்த்தபடி மௌனமாகக் கண்ணீர் வடித்தாள். அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத சில நிகழ்வுகளைக் கற்பனையில் நினைத்த போது ஓவெனக் கத்தவேண்டும் போல் இருந்தது.

காலை விடிந்ததும் ஆனந் எழுந்து சற்றும் வைதேகியைப் பற்றிக் கவலையில்லாமல் புறப்படுவதற்குத் தயாரானான். ஆனந் குளித்துவிட்டுச் சாப்பிட வந்தபோது வைதேகி அவனருகில் வந்தமர்ந்து அன்புடன் உணவைப் பரிமாறியபடியே என்னங்க............ என்று இழுத்தவள் மீதியைச் சொல்ல முடியாமல் திண்டாடினாள். "என்ன வைதேகி கொஞ்ச நாளைக்கு இப்படித்தான் இருக்கும், பிறகு எல்லாம் சரியாயிடும். நீ ஒண்டுக்கும் யோசிக்காம என்னை வழியனுப்பிவை" நான் போய் 6 மாசத்திலை உன்னைக் கூப்பிடுவன் என்று அவள் கன்னத்தில் செல்லமாகக் கிள்ளி அவளைச் சமாதானப் படுத்தினான் ஆனந். வைதேகியால் ஒன்றுமே கூற முடியவில்லை. அன்று காலையே ஆனந் எல்லோரிடமும் விடைபெற்றுச் சென்றுவிட்டான்.

துன்னாலை என்ற அழகிய கிராமத்திலே வடிவேலுவுக்கும் கனகம்மாவிற்கும் முத்தபிள்ளையாகப் பிறந்தவளே வைதேகி.இவளுக்குக் கீழே நான்கு பெண் பிள்ளைகள் இருந்தார்கள். வைதேகி க.பொ.த. உயர்தரம் வரையும் படித்திருந் தாள். வடிவேலு ஐந்து பிள்ளைகளையும் வளர்ப்பதற்கு மிகவும் கஸ்ரப்பட்டார். அவர் ஒரு கூலித்தொழிலாளியாக இருந்தாலும் அக் கிராமத்திலே அவருக்கு "கஸ்ரத்திலும் கௌரவமாக வாழ்பவன்" என்ற நற்பெயர் கிடைத்திருந்தது. வடிவேலுவைப் போலவே அவருடைய ஐந்து பிள்ளைகளும் வாழ்ந்து வந்தனர். குறிப்பாக அழகிலும் அடக்கத்திலும் வைதேகிக்கு நிகராக அக்கிராமத்திலே யாரும் இருக்கவில்லை.

அன்றொருநாள் அக்கிராமத்திலே நடைபெற்ற கோயில் திருவிழாவிற்கு வைதேகி தன் தங்கையுடன் சென்றிருந்




தாள். கோயிலிலே பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. பக்தர்கள் கூட்டம் நிறைந்து வழிந்தாலும், அழகு தேவதையாக வந்திருந்த வைதேகியை இரண்டு கண்கள் வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தன. அதை வைதேகி பொருட் படுத்தவில்லை. திருவிழா முடிந்து வீட்டுக் குத் திரும்பிக்கொண்டிருக்கையில் "அக்கா உங்களை யாரோ கூப்பிடினம்". தங்கையின் குரல் கேட்டுத் திரும்பிய வைதேகி, தன்னை வைத்தகண் வாங்காமல் பார்த்த அதே இளைஞன் அருகில் வந்து ஹலோ....... உங்கடை பேரென்ன? என்று கேட்டான். வைதேகி முறைத்துப் பார்த்து விட்டுச் சென்றுவிட்டாள்.

வீட்டுக்குச் சென்றவள் இதைப்பற்றி எதுவுமே கூறவில்லை. ஆனாலும் அன்று முழுக்க அந்த இளைஞனின் ஞாபகம்தான் அவளுக்கு.

மறுநாள் காலை வீட்டுவாசலில் மணியடிக்கும் சத்தம் கேட்டு கேற்றடிக்குச் சென்றாள் வைதேகி. கோயிலில் வைத்த கண் வாங்காமல் பார்த்த அதே இளைஞன் கேற்றடியில். படாரென கேற்றைச் சாத்திவிட்டு வந்துவிட்டாள். இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் மிகவும் ஆறுதலாக கேற்றைத் திறந்து வந்த அந்த இளைஞனை வைதேகியின் தாய் கண்டுவிட்டாள்.

"வாங்கோ தம்பி......... என்ன வேணும் யாரையாவது தேடுறையளோ?" எனக்கேட்ட கனகம்மாவிற்கு "உங்களோடை கொஞ்சம் கதைக்க வேணும்" என்றவனைப் புரியாமல் பார்த்தவள், உள்ளே கூட்டிச் சென்று சாய்மனைக் கதிரையில் உட்கார வைத் தாள். அந்தநேரம் வடிவேலு இல்லாததால் "இருங்கோ தம்பி, இவர் கடைக்குப் போனவர். இப்ப வந்திடுவார்" என்று கூறிவிட்டு அடுக்களைப்பக்கமாகச் சென்றுவிட்டாள் கனகம்மா. தேநீருடன் வரவும் வடிவேலு கடையால் வரவும் சரியாக இருந்தது.

"இஞ்சாருங்கோ உங்களைத்தான் தம்பி ஏதோ உங்களோடை கதைக்க வேணுமாம்" என்று கனகம் சொல்லவே, வடிவேலு திண்ணையில் வந்து அமர்ந்து கொண்டார்.

அந்த இளைஞன் தான் வந்த விடயத்தை மிகவும் துணிச்சலுடனும் சாதுரியமாகவும் கூறத்தொடங்கினான். "ஐயா நான் உங்கட மகளை விரும்பிறன், என்றவன் பணிவாக "எனது பெயர் ஆனந். நான் கனடாவில் நிரந்தர வதிவுரிமை பெற்றவன்" எனது பெற்றோர் பக்கத்துக் கிராமத்திலதான் இருக்கினம். அவர்களைப் பார்த்திட்டுப் போகலாம் எண்டுதான் வந்தனான். அதோட கல்யாண விசயமாயும்.........." என்று இழுத்தவன், "உங்கடை மகளைச் செய்து தந்தா கலங்காமல் வைச்சிருப்பன், இதுக்கு மேலயும் ஏதும் தேவைப்பட்டால் எங்கடை வீட்டுக்கு வந்து கதைக்கலாம்" எனக்கூறி தனது வீட்டு முகவரியையும் கொடுத்து விட்டு விடைபெற்றுச் சென்றுவிட்டான்.

ஆனந்தின் குடும்பம் மிகவும் வசதியானது. பருத்தித்துறையில் சொந்த வீட்டுடன் காணி என்று ஏகப்பட்ட சொத்து. ஆனந்துக்கு இரண்டு தம்பிமார் மட்டும். 14 வயதில் வெளிநாடு சென்றவன், பெற்றோரின் வற்புறுத்தலின் பேரில் திருமணத்துக்காக 14 வருடங்களின் பின்னர் சொந்த இடத்துக்கு வந்திருக்கிறான். நல்ல கட்டுமஸ்தான உடல்வாகைக் கொண்ட ஆனந்தை ஒரு ஆணழகன் என்று கூடச் சொல்லிவிடலாம். எல்லாவிதத்திலும் வைதேகிக்குப் பொருத்தமானவனாகவே இருந்தான்.

வெளிநாடு என்றவுடன் வைதேகிக்கு சற்றும் விருப்பமில்லை. இருந்தாலும் பெற்றோர் சொற்படி கேட்கவேண்டுமென்று நினைத்தாள். இதைவிட வெளிநாட்டு மாப்பிள்ளைக்குரிய சீதனமும் பெற்றோரிடம் இருக்கவில்லை. ஆனால், தாய் கனகம் மாவோ "இஞ்சாரப்பா பெடியனைப்பார்த்த நல்ல பெடியன் போல கிடக்கு. அதைவிட குடும்பமும் வசதியானது போல தெரியுது கனடாவாமல்லே" வடிவேலுவிடம் கண்களை அகல விரித்துக் கொண்டாள். வடிவேலு அமைதியாக "இஞ்சாரப்பா வெளி நாட்டு மாப்பிள்ளையெண்டாச் சும்மாவே எவ்வளவு சீதனம் கேட்கப்போறாங்களோ" எனப் பெருமூச்சு விட்டுக்கொண்டார். அதற்குக் கனகம் "நீங்க இங்கயிருந்து கற்பனை பண்ணாம பெடியனர் வீட்டுக்குப் போய் கதைச்சுப் பாருங்கோவன்" என்று ஒரேயடியாகக் கூறிவிட்டாள்.

வடிவேலு ஆனந்தின் வீட்டை ஒருவாறு கண்டுபிடித்து அவர்கள் வீட்டுக்குச் சென்றபோது, அவர்கள் வீட்டில் அமோக வரவேற்பு இருந்தது. வடிவேலு, ஆனந் - வைதேகியின் திருமண விடயம் பற்றிக் கதைத்தபோது ஆனந்தின் அப்பா "என்ர மகனுக்கு உங்கடை மகளை நல்லா பிடிச்சுப்போட்டுதாம். செய்தா உங்கடை மகளைத்தான் செய்யிறது; இல்லாட்டில் கல்யாணமே வேண்டாமெண்டெல்லோ சொல்லிப்போட்டான். அவனும் கனடா விலிருந்து 14 வருசமாக் கஸ்ரப்பட்டு வந்திருக்கிறான். அதாலை அவன்ர விருப்பப்படியே செய்வோம்." என்று கூறியவரை நிமிர்ந்து பார்த்தார் வடிவேலு. உடனே ஆனந்தின் அம்மா "நீங்கள் சீதனமெண்டு ஒண்டும் கொடுக்க வேண்டாம். உங்கடை பிள்ளைக்கெண்டு சந்தோசமா இரண்டு லட்சம் காசைக் குடுங்கோவன். வேற ஒண்டும் நாங்க எதிர்பாக்கல்ல" இதைக் கேட்ட வடிவேலுவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. ஒருவாறு அவர்களிட மிருந்து விடைபெற்றார் வடிவேலு.

மறுநாள் இது பற்றி பக்கத்துவீட்டுக் கந்தையாவிடம் கேட்டபோது "இஞ்சபார் வடிவேலு, இது வலிய வந்த சம்மந்தம். அதோட கனடா மாப்பிள்ளை. இனி இப்பிடி ஒரு சம்மந்தம் வராது. ஏதோ உன்னட்டை கிடக்கிறதைக் குடுத்துச் செய்து வை" என்று கூறிவிட்டார். இதுபற்றி வைதேகியிடம் கேட்டபோது "உங்கட விருப்பம்தான் என் விருப்பம் அப்பா" என்று கூறி விட்டாள்.

வடிவேலு ஊரெல்லாம் கடன்பட்டு தானிருந்த வீட்டையும் விற்று 3 லட்சம் பணம் சேர்த்து ஆனந்துக்கும் வைதேகிக்கும் திருமணத்தை நடத்தி வைத்தார். திருமணம் முடிந்து ஒரு கிழமை கூட ஆகவில்லை. ஆனந் வைதேகியை அவள் பெற்றோருடன் விட்டுவிட்டு கனடாவிற்குச் சென்று விட்டான்.

ஆனந் போய் மூன்று மாதங்களின் பிறகு ஒரேயொரு கடிதமே வைதேகிக்கு வந்தது. கடிதம் கண்ட வைதேகியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இரவிரவாகப் பதிலெழுதி மறுநாட் காலையே ஆனந்திற்கு அனுப்பிவிட்டாள். ஆனால் அதன்பிறகு அவளுக்கு ஏமாற்றமே பதிலாக அமையுமென அவள் எதிர்பார்க்கவில்லை.

ஆனந் போய் வருடங்கள் ஆகிவிட்டன. வைதேகி ஒரு குழந்தைக்கும் தாயாகிவிட்டாள். ஆனால் ஆனந் தைப்பற்றி எதுவுமே தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தாள்.

பக்கத்து வீட்டுக் கலா அக்காவின் கணவர் கனடாவில் இருப்பதை அறிந்து, அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தன் கணவனைப் பற்றி விசாரித்தபோது, மறைந்திருந்த உண்மைகள் பல வெளிவந்தன. ஆனந் முதலே திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை என்றும் தற்போது வேறொரு பெண்ணுடன் தொடர்பு இருப்பதாகவும் தான் வேலைசெய்யும் ஹோட்டலிலேயே ஆனந் வேலை செய்வதாகவும் கூறியதைக் கேட்டு வைதேகி திகைத்தாள். இதைக்கண்ட வடிவேலு செய்வதறியாது துடித்தார்.

ஆனந்தின் பெற்றோரிடம் இதுபற்றிக் கேட்டபோது அவர்கள் மௌனமாயிருந்தனர். தன் தலைவிதியை நொந்த வண்ணம் வீடு வந்த கந்தையா, வீட்டு வாசலில் கடன்காரரும் வீட்டுவாடகைப் பணத்திற்காக வீட்டு உரிமையாளரும் நிற்பதைக் கண்டவர் அவ்விடத்திலேயே விழுந்து விட்டார். அன்று விழுந்த கந்தையா திரும்ப எழும்பவில்லை.

கந்தையா இறந்து மூன்று நாட்களாகிவிட்டன. கனகம்மா செய்வதறியாது திகைத்தாள். தன் நான்கு பிள்ளைகளையும் எப்படிக் கரைசேர்ப்பது என்று முழித்தாள். வைதேகி ஒரு மூலையில் தன் குழந்தையை அணைத்தபடி அழுதுகொண்டிருப்பதைப் பார்க்கின்ற போது, பெற்ற வயிறு பற்றி எரிந்தது. கனகம்மா வெளியில் வந்து வானத்தை வெறித்துப் பார்த்தபடி முற்றத்திலே குந்தி விட்டாள்.

ஆனாலும் தன் ஆனந் அப்படிச் செய்திருப்பான் என்பதை வைதேகியால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. எந்தக் காலத்திலும் தன்னைத் தேடி ஆனந் வருவான் என்ற நம்பிக்கையில் வைதேகி காத்திருக்கிறாள்.

# பாசமும் துயரமும்

வெள்ளிக்கிழமை. கோவிலுக்குச் சென்று வீடு திரும்பிய ரதி, தன் கணவர் கொழும்பிலிருந்து வருவதால் அவருக்கு மதிய உணவு தயாரிப்பதற்காக அவசர அவசரமாகச் சாறியைக் கழற்றிவிட்டு, உடுப்பை மாற்றிக்கொண்டு சமையலறைக்குச் சென்று சமையலுக்குத் தேவையான காய்கறி வகைகளை குளிர்சாதனப் பெட்டியிலிருந்து பிரித்தெடுத்துக் கொண்டிருக்கையில், அருகு வீட்டு சின்னம்மா கிழவி வந்து "பிள்ளை ரதி எனக்கொரு தந்தி வந்திருக்கின்றது. அதைப் பிரித்துப் படித்துச் சொல்லென்றது.

தொடர்ந்த வேலையை முடிக்காத ரதி, அவசர அவசரமாகச் சின்னம்மா கிழவி கொண்டு வந்த தந்தியைப் பிரித்துப் படித்தாள். அதில் சின்னம்மா கிழவியின் மகன் ரவியும், மனைவியும், பிள்ளைகளும் இந்தியாவிலிருந்து திருகோணமலை பத்திரகாளியம்மன் கோவிலுக்கு நேர்த்திக்கடன் செய்வதற்காக வருவதாக எழுதியிருந்தது. இதை விளக்கமாக அந்தச் சின்னம்மா கிழவிக்கு கூறிய ரதி தொடர்ந்து கணவருக்குச் சமையல் செய்ய ஆயத்தமானாள்.

மதியம் ஒரு மணியளவில் கணவர் ஆட்டோவில் வந்து இறங்கி, வீட்டிற்குள் நுழையும் போது, வீட்டின் முன்பக்கமாக நின்ற ஜிம்மி நாய்க்குட்டி கத்திக்கொண்டு ஓடிப்போய் கணவரை முகர்ந்து, அவர் மேல் பாய்ந்து, அவரின் வரவை எசமானிக்குத் தெரியப்படுத்தியது. கணவரின் வரவையறிந்த ரதி, ஓடிப்போய் கணவரை எதிர்கொண்டு அவர்கொண்டு வந்த சாமான் பெட்டியை வாங்கினாள். திருமணமாகி ஒரு மாதத்தின் பின்புதான் கணவர் வேலைக்குச் சென்று முதல்தடவையாக வீடு திரும்புகிறார். கணவரைக் கண்டதும் மிகவும் ஆனந்தமடைந்தவள், கணவருக்கு வேண்டிய சகல தேவைகளையும் செய்தாள்.

அன்று இருவரும் தங்கள் தங்கள் மனநிலையை பரிமாறிக் கொண்டு, கணவரைப் பார்க்க வந்த உற்றார் உறவினர்களுக்குத் தேநீர் பகிர்ந்தளித்து அவர்களுடன் கதைத்ததிலேயே அன்றைய பொழுது இனிதாகக் கழிந்தது. இரண்டு நாட்கள் லீவில் வந்த கணவர் திரும்பவும் வேலைக்கு கொழும்பு போக வேண்டியிருப்பதால், அவருக்கு வேண்டிய தேவைகளைச் செய்வதில் ரதி கவனம் கொண்டாள்.

ரதி உயர்தரம் படித்தவள். பல்கலைக்கழகம் போவதற்கு அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போதுதான் அவளின் திருமணம் நடைபெற்றது. இத்திருமணம் ரதியின் அண்ணர்சிவராமனால் நிச்சயிக்கப்பட்டது. இளமையில் தாய், தந்தையை இழந்த ரதிக்கு, அண்ணா சிவராமன் மட்டும்தான் அவளுக்கு துணையாக இருந்து படிப்பித்து, பல்கலைக்கழகம் செல்ல வழிவகுத்தது. அண்ணன் சிவராமன் ஒரு பெண்ணைக் கட்டாயத் திருமணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதால் தங்கை ரதியை தனது நண்பனாகிய சுரேஸுக்குத் திருமணம் செய்து வைத்தான்.

ரதிக்குத் துணையாக இருந்த

-இ.மாதவராஜா,
திருகோணமலை.



அண்ணனும் குடும் பத்துடன் வெளி நாடு சென்றதால் ரதிக்குக் கணவரைத் தவிர வேறு உதவி யாருமில்லை. இதை அறிந்த சுரேஸ் ரதியைத் தான் வேலை செய்யும் இடமான கொழும்பிற்கே கூட்டிச் சென்றான். ஒரு தனி வீடு வாடகைக்கு எடுத்து அங்கேயே வாழ்ந்தார்கள். காலங்கள் கடந்தன. ரதிக்கு ஒரு வேலையும் கிடைத்தது.

இருவரின் மாத வருமானத்தில் தங்கள் வாழ்க்கையை எவ்வித கஷ்டமுமின்றி நடத்திக்கொண்டிருந்தனர். சகோதரியை தனிமையில் விட்டுவிட்டு வெளிநாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் ரதியின் அண்ணன் சிவராமன், அடிக்கடி சகோதரியுடனும் அவள் கணவனுடனும் (சுரேஸ்) தொலைபேசி மூலம் சுகங்களை விசாரிப்பான் விசாரிப்பதுடன் நின்றுவிடாமல் சகோதரியின் தேவைக்காக பணமும் அனுப்புவான.

ஒரு மாதமாக அண்ணன் சிவராமனிடமிருந்து எந்தவிதத் தொடர்புகளும் இல்லாததால் ரதி கவலையுடன் காட்சியளித்தாள். மனைவியின் கவலையை அறிந்த சுரேஸ், கனடாவிலுள்ள நண்பர் சதீஸ் மூலமாக மைத்துனர் சிவராமனை விசாரித்தான். சுரேஸின் தகவல்படி சிவராமனின் விலாசத்திற்குச் சென்று அவன் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொண்டவன், திடீரென ஒரு அதிர்ச்சியான சம்பவத்தைத் தெரிந்துகொண்டான். சிவராமன் அண்மையில் கனடாவிலிருந்து குடும்பத்துடன் அவருடைய நண்பர் வீட்டிற்குப் போகும் வழியில் கார் விபத்தில் இறந்ததாக அறிந்தான். இதை நண்பன் சுரேஸுக்கு உடன் தொலைபேசி மூலம் தெரிவித்தான்.

மைத்துனர் சிவராமனின் இறப்பை மனைவி ரதிக்கு எப்படித் தெரிவிப்பது எனத் சுரேஸ் தடுமாறினான். எப்படியும் இதைத் தெரிவிக்கத்தானே வேண்டும் என்ற யோசனையில் இருக்கையில் ஒரு தந்தியொன்று வந்தது. அத் தந்தி அண்ணனிடமிருந்துதான் வந்திருக்கவேண்டுமென்று அவசர அவசரமாகத் தந்தியை வாங்கிப் படித்தாள் ரதி. அவள் எதிர்பார்த்த விடயம் எதிர்மாறாக இருந்தது. உடன் கணவரைக் கட்டியணைத்து அழுதாள். மனைவியின் துயரம் தாங்காத கணவன் சுரேஸ் மனைவிக்கு எப்படி ஆறுதல் கூறுவதெனத் தெரியாமல் அவதிப்பட்டான். அண்ணானின் பிரிவைத் தாங்கமுடியாத ரதி, அண்ணனின் ஆத்மசாந்திக்காகச் செய்ய வேண்டிய ஈமக்கிரியைகளைச் செய்து முடித்தாள்.

(யாவும் கற்பனை)

*படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.*

## சிந்தித்துப் பார்க்க...

# வாழ்க்கை உங்கள் கையில்

எல்லா மனிதர்களும் தீயவர்கள் என்று தீய எண்ணம் கொண்ட மனிதர்கள் வலியுறுத்திய போதிலும், நம்மைச் சுற்றி நல்ல மனிதர்கள், ஏன் பெண்களும்கூட இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களில் சிலரைத் தெரிந்துகொள்ளும் அதிர்ஷ்டகரமான வாய்ப்பு உங்களுக்கு ஏற்பட்டிருக்கும்.

உண்மையிலேயே, நல்லெண்ணம் கொண்ட ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பாலாரின் வழி நடத்துதலில்தான் ஒரு சமூகமே இயங்குகிறது. பொதுச் சேவைப் பணியாளர்கள், கருத்துக்களைக் கூறும் தலைவர்கள், தனியார் துறையில் தங்களது பணியை செய்துவரும் பணியாளர்கள் போன்ற பெரும்பாலோர் மிகவும் நல்லெண்ணம் கொண்டவர்கள். இவ்வாறு இவர்கள் இருந்திருக்காவிடில் தங்கள் பணியினைச் செவ்வனே செய்து முடிக்காத நிலை ஏற்பட்டிருக்கும்.

இப்படிப்பட்ட மனிதர்கள் தாக்குதலுக்கு எளிதாக ஆளாகிறார்கள். இவர்களின் கட்டொழுங்கான குணங்கள், தங்களை அளவிற்கதிகமான நிலையில் பாதுகாப்பிலிருந்து தடுக்கின்றன. இருந்தபோதிலும் சமூகத்தில் பெரும்பாலான மனிதர்களின் வாழ்க்கை அவரவர் கையில்தான் சார்ந்துள்ளது.

- 'மகிழ்ச்சி' எனும் நூலிலிருந்து.

---

## இலக்கி நயம்

திண்ணையில் சாய்கதிரைக்குள் அமுங்கிக் கிடந்தபடி விட்டத்தைப் பார்த்திருந்தான் பூவண்ணன். மனம் அமைதியற்றிருந்ததால், அடிக்கடி ஏதாவது ஒரு விஷயத்தின் மீது எரிச்சலும், கோபமும் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. வெளியே செல்லப் பிடிக்கவில்லை.

தெருவில் பேச்சுக்குரல் கேட்டு அங்கே பார்த்தான். ஆண்களும் பெண்களுமாகச் சிலர் போய்க் கொண்டிருந்தார்கள். பட்டும், ஆபரணங்களும் கண்ணைக் கூச வைத்தன. 'என்ன' சிரிப்பும் சலசலப்பும் இவர்களுக்கு? தங்களுக்குத்தான் கல்யாணம் என்பதைப் போல!

# கொள்ளை கொண்ட நெஞ்சில் கொள்ளி வைத்துச் சென்றாள்!



முற்றத்தில் காலை வெய்யில் மஞ்சளாய்க் கிடந்தது. புற்கள் இன்னும் ஈரலிப்போடு மின்னின. அவள் விழிகளில் எப்போதும் இப்படியொரு பளபளப்பு மின்னுவதைப் பார்த்திருக்கிறான். அந்த இளஞ் சிவப்பு உதடுகளிலும் கூட. அந்த ஈர மினு மினுப்புத்தான் எப்போதும் அவள் முகத்தில் கேலிப் புன்னகையாக ஒட்டிக்கொண்டிருக்கக் காரணம் என்று நினைத்தான். அவள் கல்யாணத்திற்குத்தான் ஊரே கும்மாளமிட்டு விரைந்து கொண்டிருக்கிறது. என்

### தருவது முழுடிஸ்யன்

வாழ்வையே கேலி செய்து விட்டவளின் கல்யாணத்திற்காக!

மனப் புழுக்கம் புறங்கழுத்தில் வழிந்தது. வியர்வையைத் துடைத்தான். அம்மா மட்டும் போகும் போது, "நீ வரவில்லையாடா?" என்று ஒரு சொல் கேட்டாள். ஆனால், அவன் பதில் சொல்ல மாட்டான், வரவும் மாட்டான் என்பது தெரிந்தவள் போல, "சமைத்து மூடி வைத்திருக்கிறேன். எடுத்துச் சாப்பிடு. கதவைத் திறந்து வைத்துவிட்டு எங்கும் போய்விடாதே. முகத்தைக் காட்டிவிட்டு நான் உடனே வந்து விடுவேன்...." என்று அவனை ஆறுதல்படுத்துவது போன்ற குரலில் கூறியபடியே புடவை சரசரக்க அவனைக் கடந்து போனாள்.

நெஞ்சு ஏன் இப்படி பாறாங் கல்லாகக் கனக்கிறது? ஆனால், உள்ளே எதுவுமற்ற வெறும் வெளியின் காதடைப்பாகவும் அல்லவா திணற வைக்கிறது! அவமானப்படுத்தப்பட்டு விட்ட ஆங்காரம்! கொதிப்பு!

போய்ப் பேசியிருக்கலாம். இந்தக் கல்யாணத்தைத் தடுத்திருக்கலாம்..... ஏன் செய்ய வில்லை?

"நல்ல பிள்ளையடா.... பணக்காரி, படிச்சது என்ற திமிர் கொஞ்சமும் இல்லை. எவ்வளவு அன்பாய்ப் பழகுது!"

முதலில் அம்மாவைத்தான் அவள் வளைத்துப் போட்டுக் கொண்டாள்.

"மாமி தனியாகவே இருக்கிறீங்கள்?"

"வா பிள்ளை. எல்லாம் ஆம்பிளைப் பிள்ளைகளாகப் பெத்த துக்கு இதுதான் தண்டனை. வீட்டில இருக்கிறதுக்கு ஆருக்கும் நேரமில்லை....."

அம்மாவுக்குப் பெண் பிள்ளை ஒன்று இல்லாத குறையை அவள் வெகு எளிதாக இட்டு நிரப்பினாள்.

"மாமி எப்ப இவ்வளவு பூ வேலைகளெல்லாம் தைக்கப்பழகினீங்கள்?... நீங்கள் வைக்கிற பாயாசத்திற்கு மட்டும் எப்படி இவ்வளவு சுவை வருது....? இந்த வெள்ளை ரோஜாவில ஒரு பூ பறித்துக் கொள்ளட்டுமா?" என்று அம்மாவின் செல்லத்துக்குரியவளாகிவிட அவளுக்கு எந்தச் சிரமமுமிருக்கவில்லை.

"கெட்டிக்காரப் பிள்ளையடா! நறுவிசும் துப்பரவும்.... இந்தா காலமை வெள்ளெனப் பூத்திருக்கிற இந்த ரோஜாவைப் போல....!"

அதற்குப் பிறகுதான் பூவண்ணன் அவளைக் கவனிக்க ஆரம்பித்தான்.

அவள் அவனைப் பார்க்காமலேதான் கடந்து போய்க் கொண்டிருந்தாள். ஆனால், அவள் கவனம் முழுதும் இவனைத் தீண்டியபடியே கடந்தன என்பதை அறிந்தான். தான் வீட்டினுள் இருப்பதை அவனுக்கு எப்போதும் உணர்த்தியபடியேதான் வளைய வருகிறாள் என்பதைத் தெரிந்துகொண்ட போது அலட்சியமும் மெல்லிய எரிச்சலும்தான் அவனுக்கு வந்தது.

அவன் நினைவுகளில் கொஞ்சம் கொஞ்சமாகச் செதுக்கி முழுமையாக்கி வைத்திருந்த கனவுப் பெண்போல அவள் இருக்கவில்லை என்பது அவன் முதல் ஏமாற்றமாக இருந்தது. சோகை பிடித்தவள் போல வெளிறியிருந்தாள். கால்களும், கைகளும் எப்படி ஒடிந்துவிடாமலிருக்கின்றன என்ற வியப்பை ஏற்படுத்தினாள். சதைப் பிடிப்பற்ற அவள் உடல் அவனைக் கிளர்த்துவதாக இருக்கவில்லை. ஆனால் அந்தக் கண்கள்!

அவள் கண்களைச் சந்தித்த அன்றிரவு அவள் திரும்பத் திரும்ப நினைவுக்கு வந்தாள். மனம் பரபரப்புக் கொண்டு தவிப்பதை உணர்ந்தான். தூக்கம் வராமல் எழுந்து நடந்தான். மீண்டும் படுத்தபோது அந்தக் கண்கள் சித்திரவதை செய்ய வந்தன. அவற்றை ஒரு கணம்தான் பார்த்திருந்தான். அதற்குள் அது அவனைப் பாடாய்ப்படுத்த ஆரம்பித்திருப்பது பெரிதும் வியப்பூட்டியது.

உதடுகள் மற்றும் அவள் உருவம் முழுவதற்கும் அவன் ஊகம் அலைந்தது. இறுக்கமும் வேகமும் அலைக்கழிக்க அன்றிரவு தூக்கத்தை இழந்தான்.

அடுத்த நாள் காலையில் அவள் வந்தபோது கூச்சத்துடனேயே பார்த்தான். இவன் பார்க்கிறான் என்பதை உணர்ந்துகொண்ட அவள், வெட்கத்துடன் ஓடி அம்மாவிடம் ஒளிந்து கொண்டாள். அவளது மிகையான பாவனை முதலில் அவனுக்கு எரிச்சலையே ஏற்படுத்திற்று.

பிறகு நாள் செல்லச் செல்ல அவள் அவனது ஈர்ப்பு மையமானாள். அவள் வருகையை ஒருவித துடிப்போடு எதிர்பார்த்திருக்க ஆரம்பித்தான்.

அவனைக் கண்டு அச்சப்படுவதிலும், அம்மாவிடம் மறைந்து கொண்டு அவனைக் கள்ளப் பார்வையாகப் பார்ப்பதிலும் போதையேற்றியபடி இருந்தாள்.

அதன் பிறகு அவள் வராத நாட்களில் இவன் தவிக்க ஆரம்பித்தான். இவனுக்காகவே அவள் ஒவ்வொரு அசைவும் என்றானது.

அம்மாவும் இவர்களை உணர்ந்துகொண்டவள் போல் அனுசரணையாக இருந்தாள். அவளிடமே தேநீர் கொடுத்தனுப்புவாள். ஓசைப்படாமல் இவனருகே வைத்துவிட்டு நழுவி விடுவாள். அறை முழுக்க அவள் சுகந்தம் நிரம்பி இவனை அமுக்கும் உணர்வில் அவள் போன பிறகும் சில நிமிடங்களுக்குத் தத்தளிப்பான்.

அன்று அவள் கோப்பையை வைத்துவிட்டுத் திரும்ப எத்தனிக்கையில் அவளது ஒடிசலான கரத்தை இவன் பிடித்தான். கையை விடுவித்துக்கொள்ள முற்படாமல் தலைகுனிந்து நின்றாள். துணிவு வர, இவன் எழுந்து அவளைத் தோள்களுடன் அணைத்தான். இறுக்குகையில் ஒல்லியான மூங்கில்கள் போலிருந்த தோள்கள் ஒடிந்துவிடுமோ என்ற பயம் ஏற்றபட்டது. ஒரு சிறு புறாக் குஞ்செனெ அவன் பிடிக்குள் சிறகடித்தாள்.

அவன் கையை விடுவித்த கணம், அவள் அறைக்கு வெளியே சிறகடித்தாள். இவள் தனக்குரியவள் என்ற இறுமாப்பு அவனை மிதக்க வைத்தது.

இந்நேரம் அவள் கழுத்தில் தாலி ஏறியிருக்கும். அம்மா அவளைப் பெண் கேட்டுத் தூதனுப்பியபோது, வேலை எதுவுமில்லாதவனுக்குக் கட்டிக் கொடுக்க முடியாது என்று மறுத்து விட்டாராம் அவள் தந்தை.

ஆற்றாமையில் கோபமும், மனம் நிரம்பிய கசப்புமாகக் கதிரையை விட்டு எழுந்தான். அவமானத்தில் துடிக்கும் உடலைச் சமனப்படுத்த வேகமாக நடந்தான் பூவண்ணன். ஏக்கமும் அவனுடன் கூட நடந்தது.

*அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்*
*பரு இலைக் குளவியொடு பசுமரல்கட்கும்*
*காந்தள் வேலிச் சிறுகுடிப் பசிப்பின்*
*கடும்கண் வேழத்துக் கோடு நொடுத்து*
*உண்ணும் வல்வில் ஓரிக் கொல்லிக்*
*குடவரைப் பாவையின் மடவந்தனளே*
*மணத்தற்கு அரிய பணைப் பெருந்தோளே.*

*(குறுந்தொகை: 100)*

---

✍ **கிழக்கில் மனித உயிர்களுக்கு உள்ள மரியாதையைப் பார்த்தீர்களா?**

-கோபி பிரியா, வெலிமடை.

பாம்பைக் கூட பயத்தில் கொன்று விட்டால், பிறகு நமக்குள் பச்சாத்தாபம் உண்டாகிறது. கொல்லப்படும் போது எவரிடமிருந்தும் இரக்கத்தைப் பெறாதவை புழுக்கள்தான்! இன்று மனித உயிர்களை தமிழினம் எப்படிப் பார்க்கிறது என்பதற்கு நம் ஊடகங்கள் சாட்சி!

✍ **நீங்கள் இன்பமாகக் கருதுபவற்றில் முதலிடம் எதற்கு?**

-வபீஸ், கல்முனை.

மனதை நாதமயமாக ஆக்கும் இசைக்கு!

✍ **'அந்நியன்' படம் தாமதமானதுக்கு, அதே கதையுடன் 'ராம்' படம் வெளிவந்ததுதான் காரணம் என்று சொல்லப் பட்டதே. இரண்டு படங்களுக்கும் என்ன ஒற்றுமை?**

-க.அருள், நீர்கொழும்பு.

தவறுகளைக் கண்டால் தாங்கிக் கொள்ள முடியாத மனம் படைத்தவர்கள் இரண்டு நாயகர்களும் என்பதுதான் ஒற்றுமை. காவியுடுத்தி, குங்குமம் அப்பி, மலை மீது ஒற்றைக்கால் தவம் செய்த படியெல்லாம் சங்கார நாதத்தோடு ராம் ஆவேசமாகப் புறப்படுமளவுக்கு, அவரது எதிர்த்தரப்பு அழுத்தமாகச் சொல்லப்பட வில்லை. அந்நியனில் விக்ரமின் நடிப்பு, சுஜாதாவின் வசனம், ஷங்கரின் உழைப்பு என்பன அவன் சமூகக் கோபத்தை நம்பக மாக்கியிருக்கின்றன. வசூலிலும் முதலிடத்தில் நிறுத்தியிருக்கின்றன.

✍ **ஒன்றுதான் எல்லாம் அதற்குள் அனைத்தும் அடக்கம் என்பது உண்மையா?**

-இ.முருகநேசன், வவுனியா.

"ம்....அது வந்துவிட்டால் அப்படித்தான் இருக்கும். எங்காவது ஒரு கழிப்பிடத்தைத் தேடி, அதை வெளியேற்றி விட்டு, "அப்பாடா!" என்று பெருமூச்சு விடும்வரை வேறு எதிலும் கவனம் செல்லாது.

✍ **பழைய பாடல்களுக்கும் புதிய பாடல்களுக்கும் என்ன வித்தியாசம்?**

-இரா.உமா, கினலன் எல்ல.

இசைப் பெருக்கம்.

✍ **நம்ம கூட்டமைப்பின் சமீபத்திய கூத்து என்ன?**

-ஆர்.வாகன், வவுனியா.

மேடையில் அவர்களைக் காணோம். வசனகர்த்தா, இயக்குனர், தயாரிப்பாளர்களே நேரடியாகத் தோன்றுகிறார்கள்.!

✍ **உண்மையில் விதியை மதியால் வெல்ல முடியுமா?**

-எம்.இசட்.எம்.ஹனபி, தர்கா நகர்.

அவ்வளவு சர்வநம்பிக்கையுடன் என்னால் சொல்ல முடியாது. வெல்ல முடியாமல் போனால் எனக்கு மதி இல்லை என்றாகி விடுமே!

✍ **ஏப்ரல் முதலாம் திகதியன்று எங்கள் வீட்டுக்கு வந்தீர்களே! எங்கள் வரவேற்பு எப்படி இருந்தது?**

-சிஹ்னாஸ் தெளபீக், ஹுஸைனியாபுரம்.

உரிய நாளில் உரியவர்களைச் சந்திக்கக் கிடைத்தால் மகிழ்ச்சி ஏற்படாமல் போகுமா!

✍ **கலைப்பித்து என்கிறார்களே.... என்ன அது?**

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

அண்மையில் பார்த்த தொலைக்காட்சிப் பாட்டுப்போட்டி நிகழ்ச்சி ஒன்றில், நடுவராக வந்திருந்த ஜமுனாராணி சொன்னார்: "ஸ்டுடியோவுக்குள் சந்திரபாபுவைப் பாட வைத்துப் பாட்டுப் பதிவுசெய்து கொள்வது இலகுவானதல்ல. ஆடிக் கொண்டே விலகிப் போய்விடுவார் அவர். யாராவது ஒருவர் அடிக்கடி அவரை இழுத்து வந்து மைக்கிற்கு அருகில் நிறுத்த வேண்டியிருக்கும்...."

வெள்ளித் திரைக்கு வெளியேயும் சந்திரபாபு என்ற கலைஞராகவே இருந்தவர் அவர்!

✍ **உள்ளொன்று வைத்தும் புறமொன்று வைத்தும் பேசுபவர்கள், குற்றவுணர்வு எதுவுமின்றி ஆனந்தமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே, எப்படி?**

-பெ.கோகிலன், மேபீல்ட்.

யுத்தம் நடைபெறாத போதும், கொல்லப்படும் உயிர்களுக்குத் 'துரோகிகள்' என்று பெயர் சூட்டிவிட்டால், திருப்தியோடு விடுதலைக்கான கொலைகளாக அதை அங்கீகரித்து ஆனந்தமாகத் தானே வாழ்ந்து வருகிறோம்! குற்றவுணர்வா, அதென்ன?

✍ **காதலித்து ஏமாற்றுவது பெண்களுக்குக் கைவந்த கலைதானே?**

-எஸ்.விஜயன், குவைத்.

மனம் நொந்து குவைத் வரை சென்றிருக்கும் விஜயன் அவர்களே, 'கண் வந்த கலை' என்று திருத்திவிட்டு வருத்தப் படுங்கள்!

✍ **அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலையில் விடுதலைப் புலி உறுப்பினர்களைக் கொலை செய்து வருவது கருணா அணியினர்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும்போது, புலனாய்வுத் தகவலறிவில் கில்லாடிகளான புலிகள் மட்டும் மாறாக, படையினர்தான் செய்ததாகச் சொல்லி வருவது ஏன்?**

-எம்.ஏ.எம்.றிபாஸ், கதுருவெல.

கருணா அணியினர் செய்தால் அது யுத்த நிறுத்த மீறல் ஆகாது என்பதால்!




✍ **இலங்கை முதலில் வேடர்களுக்குத்தான் சொந்தம் என்றால், இப்போது மண்டைகளை உடைத்துக் கொள்ளும் சிங்கள, தமிழ், முஸ்லிம்களின் உரிமை என்ன?**

-நோப்ஜினா, பாண்டிருப்பு.

மண்டைகளை உடைத்துக் கொள்வதுதான்!

✍ **உரிமைகளுடனான வாழ்வுக்காகத்தானே இத்தனை உயிர்களைப் பலி கொடுத்தோம். இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் பலி கொடுத்துக் கொண்டிருப்பது?**

-சி.மகேஸ்வரன், யாழ்ப்பாணம்.

ஒரு போலந்து நாட்டுக் கவிதை :

"பாவம் விட்டில் பூச்சி
நான் உனக்கு உதவ முடியாது;
விளக்கை அணைக்க மட்டுமே
என்னால் முடியும்."

✍ **இந்த உயிரும் பொய்; உடலும் பொய்; இருப்பும் பொய்; வாழ்வும் பொய். எல்லாம் மாயைதானே?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

ஒரு ஸென் கதை :

தெஸ்ஸு என்றொரு ஞானி, மிகுந்த அறிவாளி எனப் புகழ்பெற்றிருந்தார். தம் ஞானத்தால் மற்றவர்களைத் திகைக்க வைத்துக் கொண்டிருந்தார்.

ஊர் ஊராகச் சென்று தம்முடைய தார்க்கீதியான கருத்துக்களால் எல்லோரையும் வியப்பிலாழ்த்திக் கொண்டிருந்தார்.

ஓர் ஊரில் தொகான் என்ற துறவியைச் சந்தித்தார்.

அவரிடமும் தம் ஞானப் பிரகடனங்களை எல்லாம் எடுத்து விட்டார்.

"எல்லாமே பொய்; மாயை; சூனியம்; ஒன்றுமில்லை" என்றார்.

துறவி அமைதியாக இருந்தார்.

"சூனியம்தான் இயற்கையானது. அறிவும் இல்லை; அறியாமையும் இல்லை. ஞானியும் இல்லை; பாமரனும் இல்லை. உழைப்பும் இல்லை; பயனும் இல்லை. உலகமே ஒரு மாயை" என்றார் ஞானி தொடர்ந்து!

துறவி, கையில் வைத்திருந்த கரண்டியால் ஞானியின் தலை மேல் ஓங்கி அடித்தார்.

"ஐயோ!" என்று அலறினார் ஞானி தெஸ்ஸு. தலையைத் தேய்த்தபடி "என்னை ஏன் அடித்தீர்கள்?" என்று சீறினார்.

"என் அடியும் ஒன்றுமில்லை; உங்கள் கோபமும் ஒன்றுமில்லை. எல்லாம் பொய்; மாயை" என்றார் துறவி அமைதியாக.

✍ **'லக லக லக லக....' தமிழில் இதன் அர்த்தம் என்ன?**

-இ.குமரேசன், கினலன் எல்ல.

சும்மா ஒரு 'கல கல' வுக்குத்தான்!




# கிரிக்கெட்டின் வரலாறு 47

**1924ஆம்** வருடம் தென்னாபிரிக்க அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் பர்மிங்ஹாமில் நடைபெற்ற ஒரு டெஸ்ட் போட்டியின் போது, தென்னாபிரிக்க அணியின் முதலாவது இன்னிங்ஸ் 50 நிமிடங்களே நீடித்தது. சகல துடுப்பாட்ட வீரர்களும் 30 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். டெஸ்ட் போட்டி வரலாற்றிலேயே மிகவும் குறுகிய இன்னிங்ஸ் என்ற வகையில் இது கருதப்படுகின்றது. இந்த இன்னிங்ஸ் 12 ஓவர் மற்றும் மூன்று பந்து வீச்சுகளுக்குள் முடிந்துவிட்டது.

இப்போட்டியின் போது இங்கிலாந்து அணி ஒரு இன்னிங்ஸாலும் 18 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

மேற்படி போட்டியின் போது இங்கிலாந்து அணிக்கு ஏ.ஈ.ஆர். கிலிகனும் தென்னாபிரிக்க அணிக்கு எச்.டபிள்யூ. டேலரும் தலைமை தாங்கியுள்ளனர்.

இதே நேரம் பந்தினை கையினால் பிடித்தமை காரணமாக ஆட்டமிழந்துள்ள முதலாவது வீரர் என்ற வகையில், கிரிக்கெட் உலகில் கருதப்படுபவர் தென்னாபிரிக்க அணி சார்பாக விளையாடிய டபிள்யூ.ஆர்.என்டீன் என்பவராவார்.1956-57களில் கேப்டவுனில் வைத்து தென்னாபிரிக்க அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியொன்றின் போது ஜிம் லேக்கப் வீசிய பந்தினை கையினால் ஸ்பரிசம் செய்து என்டீன் இவ்வாறு ஆட்டமிழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1960-61களில் இந்திய அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் இடம் பெற்ற டெஸ்ட் போட்டியொன்றின்போது இந்திய அணியின் துடுப்பாட்ட வீரரான ஜே.எஸ்.சொலமன் தான் அணிந்திருந்த தொப்பி 'பேல்ஸ்' மீது பட்டதனால் பேல்ஸ் அகன்று ஆட்டமிழந்துள்ளார். இப்போட்டி மெல்போர்னில் வைத்து இடம்பெற்றுள்ளது. இன்னுமொரு சுவாரஸ்யமான விடயமொன்று 1979-80களில் அவுஸ்திரேலிய அணிக்கும் இங்கிலாந்து அணிக்குமிடையில் பேர்த்தில் வைத்து இடம் பெற்ற டெஸ்ட் போட்டியொன்றின் போது இடம் பெற்றுள்ளது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் விளையாடிய டெனிஸ் லிலி முதல் நாள் இரவு ஆட்டமிழக்காமல் விக்கெட்டில் தரித்து நின்றுவிட்டு, மறுநாள் தனது இன்னிங்ஸை ஆரம்பிக்க வரும்போது வழமையாகக் கொண்டுவரும் விலோ துடுப்புக்குப் பதிலாக அலுமினியத் துடுப்புடன் வந்துள்ளார்.

இவர் அலுமினியத் துடுப்பின் மூலம் பந்துகளை அடிக்கும் போது பயங்கரமான சப்தம் எழ ஆரம்பித்துள்ளது. இதன்போது இங்கிலாந்து அணியின் தலைவர் மைக் பிபர்லி, டெனிஸ் லிலி இந்த துடுப்பை உபயோகப்படுத்துவதன் மூலம் பந்து பழுதடைவதாக முறைப்பாடு செய்துள்ளார்.

இதனால், அலுமினியத் துடுப்புக்குப் பதிலாக சாதாரணத் துடுப்பை உபயோகிக்குமாறு போட்டி நடுவர் கூறியுள்ளார். எனினும் இதனை நிராகரித்த லிலி, மைக் பிபர்லியுடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டுள்ளார்.



சுனில் கவாஸ்கர்

மீண்டும் நடுவர் உறுதியாக லிலியின் போக்கைக் கண்டிக்கவே, மைதானத்தில் இருந்து வெளியேறிய லிலி மீண்டும் அலுமினியத் துடுப்புடனே மைதானத்துக்கு வருகை தந்துள்ளார்.

நடுவர் மீண்டும் அவரை எச்சரிக்கை செய்த போது லிலி மிகுந்த கோபத்துடன் அலுமினியத் துடுப்பை வீசி எறிந்து விட்டு, விலோ துடுப்பைப் பயன்படுத்தியுள்ளார்.

கிரிக்கெட் உலகில் மிகுந்த மரியாதையுடன் நடந்து கொண்டவர்கள் கூட கோபப்பட்டுள்ள அபூர்வமான சம்பவங்களும் இல்லாமலில்லை.

லிட்டில் மாஸ்டர் எனப் புகழ்பெற்ற இந்திய அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் சுனில் கவாஸ்கர் கிரிக்கெட் உலகில் மட்டுமல்லாது, அதற்கு வெளியிலும் மிகவும் கண்ணியமான ஒரு மனிதராகவே கருதப்பட்டு வருபவர்.


லிலி

1980 - 81களில் அவுஸ்திரேலிய மெல்போர்ன் மைதானத்தில் இந்திய அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியொன்றின் போது கவாஸ்கர் துடுப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளை, துடுப்பில் இலேசாகப்பட்ட பந்து கால் கவசத்தில் பட்டு விழுந்த போது அவர் ஆட்ட மிழந்ததாக நடுவர் கைவிரலை உயர்த்திவிட்டார்.

இதனால் கோபமுற்ற சுனில் கவாஸ்கர், மறுபுறத்தில் துடுப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த சீ.பீ.எஸ். சௌஹானையும் தன்னுடன் மைதானத்தை விட்டு வெளியேறுமாறு கேட்டுள்ளார். இதன்படி இருவரும் மைதானத்தை விட்டு வெளியேறும்போது உடனடியாக அங்கு வந்த இந்திய அணியின் முகாமையாளர் துரானி, மீண்டும் மைதானத்துக்கே செல்லுமாறு சௌஹானைப் பணித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்காக 143 ஓட்டங்கள் பெற இருந்த நிலையில், கபில் தேவ் மற்றும் திலிப் டோஷி ஆகியோர் மிகச் சிறப்பாக பந்துவீசி அணியை தோல்வி பெறச் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரே பெயர் வரக் கூடியதான விளையாட்டு வீரர்கள் கிரிக்கெட் உலகில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இருந்துள்ளனர்.

எனினும் இப்படியான நால்வர் ஒரே டெஸ்ட் போட்டியில் கலந்துகொண்டதாக கிரிக்கெட் வரலாற்றில் ஒரேயொரு முறைதான் குறிக்கப்பட்டுள்ளது.

'ஹோர்ன்' என்பது அப்பெயராகும். 1891-92களில் தென்னாபிரிக்க அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் கேப்டவுனில் இடம் பெற்ற டெஸ்ட் போட்யொன்றின்போது ஏ.ஹோர்ன் ஜீ.ஈ.ஹோர்ன் - ஜே.டி.ஹோர்ன் போன்றவர்கள் இங்கிலாந்து அணி சார்பாகவும், எப்.ஹோர்ன் தென்னாபிரிக்க அணி சார்பாகவும் பங்கு பற்றியுள்ளனர்.

**-மைந்தன்**

## எந்தக் கிழமையில் பிறந்தீர்கள்?

**மி**ன்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு, இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப, விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக எண் அருள் ஞான ஜோதி சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலாபலன்களாகும்.

சொல்பவர் :
ஜோதிட அறிஞர், பேராசிரியர்.
**டாக்டர் பீ.கே. சாமி** J.D.G.A.N., (J.P.
**(சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

## ஆதிக்கம் 9: பிறந்த கிழமை சனி

**பி**றப்பெண் 9இலும் சனிக்கிழமையிலும் பிறந்துள்ள நீங்கள் எப்பொழுதும் திறந்த மனம் உடையவர்களாக இருப்பீர்கள். எதையும் வெளிப்படையாகப் பேசக்கூடியவர் நீங்கள். மனதில் எதையுமே வைத்திருக்க மாட்டீர்கள். பொய், பித்தலாட்டம், ஊழல், ஏமாற்றுதல், களவு, வஞ்சகம், துரோகம் இது போன்ற தீய பண்புகளை அறியாதவர், தெரியாதவர் நீங்கள்.

கபடு, சூது வாது என்பவற்றை அறியாத நீங்கள், பிறரை இலகுவில் நம்பிவிடுவீர்கள். உங்களைப் போன்றுதான் மற்றவர்களும் இருப்பார்கள் என்ற எண்ணத்தின் காரணமாக இந்த உலகத்தைப் பற்றிப் புரியாது இருப்பீர்கள். இரகசியம், பரகசியம் என்பனவற்றுக்கு வேறுபாடு உங்களுக்குத் தெரியாது. ஒரு இரகசியத்தைப் பிறரிடம் கூறினால் என்ன நடக்கும் என்பதைக் கொஞ்சங்கூட யோசிக்க மாட்டீர்கள். பிறரின் மனதை ஒருபோதும் நோகடிக்க மாட்டீர்கள். பிறர் மீது அதிக அன்பும் அக்கறையும் உடையவர் நீங்கள். தெளிந்த நீரோடை போன்றவர்தான் நீங்கள். உங்கள் மனதில் அசிங்கம் கிடையாது. ஒரு குழந்தையின் மனதுக்கு உங்களை ஒப்பிடலாம்.

இரக்க குணம் உங்களிடம் மிகுதியாகக் காணப்படும். பண விடயத்தில் எச்சரிக்கையுடன் இருப்பீர்கள். பிறரை நம்பிக் கடன் கொடுக்க மாட்டீர்கள். கொடுத்தால் அதைக் கேட்டுக் கேட்டுத் தொந்தரவும் தொல்லையும் பிறருக்குக் கொடுக்க மாட்டீர்கள்.

செலவு விடயத்தில் அனாவசிய வீண் செலவுகளை ஒரு நாளும் செய்யமாட்டீர்கள். யோசித்து முடிவு செய்த பிறகுதான் செலவு செய்வீர்கள். அதுவும் பிரயோசனமான செலவுகளைத்தான் செய்வீர்கள். பிறரை எளிதில் நம்பிவிடும் கள்ளங்கபடமில்லாத நீங்கள் ஏமாறுவீர்கள். உங்களை எளிதாகப் பிறர் ஏமாற்றிவிடுவார்கள்.

ஒரேயொரு தொழில் செய்து பணம் சம்பாதிக்கமாட்டீர்கள். பல தொழில்களில் ஈடுபட்டு நிறையப் பணம் சம்பாதிப்பீர்கள். பல இடங்களில் மாறி மாறி வசிப்பவராகவும் வெளியூருக்குச் சென்று திரும்பக் கூடியவராகவும் இருப்பீர்கள். நீங்கள் பிறர் மீது அன்பு, இரக்கம் உடையவராக இருந்தாலும் பிறருடன் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளமாட்டீர்கள். இதனால் அதிக நண்பர்கள் உங்களுக்கு இருக்கமாட்டார்கள்.

பொது விடயங்கள், கேளிக்கைகள், விழாக்கள் போன்றவற்றில் ஈடுபாடு இல்லாதவர் நீங்கள். 32 வயது வரைக்கும் அடிக்கடி தொழில் மாறிக் கொண்டிருப்பீர்கள். 32 வயதுக்குப் பின்னர்தான் ஒரு நிலையான தொழிலைச் செய்வீர்கள். தொழிலைப் பொறுத்தவரையில் இலகுவான தொழில் செய்து இலகுவாகப் பணந்தேடக் கூடிய நிலை உங்களுக்கு இல்லை. கஷ்டப்பட்டுத்தான் உழைக்க வேண்டியிருக்கும்.

36, 39, 42, 45 வயதுவரை வருமானம் படிப்படியாக உயர்ந்த வண்ணம் இருக்கும். வசதியாக வாழக்கூடிய பலனைப் பெற்றுள்ளீர்கள் நீங்கள். 86 வயதில் கூடிய பணத்தொகை உங்களுக்குக் கிடைக்கும். இந்தப் பணத்தினைக் கொண்டு பழம், காய்கறி வியாபாரம் செய்வீர்கள். சொத்து சுகம் பெற்று ஆயுள் வரை அழகாகவும் சந்தோஷமாகவும் வாழ்வீர்கள்.

வாழ்க்கையில் உங்களுக்கு எந்த ஆபத்துக்களும் இல்லை. 21 வயதில் உடற்சூடு சம்பந்தமான நோய்கள் ஏற்பட்டு 41 வயது வரை சிரமம் கொடுக்கும். சில மாதங்கள் நன்றாக இருப்பீர்கள். சில மாதங்கள் மலச்சிக்கல், வயிற்றுவலி, காய்ச்சலால் துன்பப்படுவீர்கள். பின்னர் குணமடைந்து விடுவீர்கள்.

உடற்சூட்டைத் தணிக்கும் உணவு வகைகளை நீங்கள் சாப்பிட வேண்டும். சிறுபசளைக் கீரை, உளுந்து, கோதுமை, பருப்பு, வாழைப்பழம், பசுப்பால், நெய், மோர், தயிர், மிளகு, முந்திரிப்பழம், முருங்கைக்காய், வெங்காயம் போன்றவை.

உங்களுடைய அதிர்ஷ்ட எண் நான்கு. இதனால் மாதத்தில் வருகின்ற 4, 13, 22, 31 ஆகிய திகதிகளில் முக்கியமான காரியங்களைச் செய்யுங்கள். வெற்றி கிடைக்கும். இந்தத் திகதிகள் சனிக்கிழமையில் அமையுமாக இருந்தால் விசேட நல்ல பலன் கிடைக்கும். வெளிறிய நீல நிற சர்ட் அணியுங்கள். வெளிர் நிறமான நீலக்கல் பதித்த வெள்ளி மோதிரம் நீங்கள் அணிந்தால் அதிர்ஷ்டமாகும். நீங்கள் எந்த எண் உள்ள வீட்டில் வசித்தாலும் நன்மை கிடைக்கும்.

ஆகவே எண் 9ஐயும் சனிக்கிழமையினையும் உடைய நீங்கள் வாழ்வில் பல செல்வங்களையும் பெற என ஆசீர்வாதங்கள்.

**சனியும் எண் ஒன்பதும் உடைய மனிதன் கனிபோன்ற மனமுடையவன். புனிதன் போல் உயர்ச்சியுண்டு. புன்னகை வாழ்வு நன்குண்டு.**

அடுத்த வாரம் ஆதிக்கம் 9 ஞாயிற்றுக்கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

## உரிமை மடல் 18

17ஆம் பக்கத் தொடர்ச்சி....

இயக்கங்களின் தலைமைகள் இந்தியாவில் சென்னையில் தங்கியிருந்தனர். தலைமைக்கும் தளத்திற்குமிடையிலான தொடர்பு, தொலைத் தொடர்புக் கருவிகள் ஊடாகவே நடைபெற்று வந்தது.

புலிகள் சார்பாக அன்ரன் பாலசிங்கம் அவர்கள் பெங்களூர் பேச்சுவார்த்தைக்குப் புறப்படத் தயாராக இருந்தார்.

அப்போது இயக்கங்களின் தொலைத்தொடர்புகளை சக இயக்கங்கள் ஒட்டுக்கேட்பது வழக்கம்!

நான் அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பில் அரசியல் பீட உறுப்பினராகவும், பிரதம தளபதியாகவும் இருந்த காலம்!

யாழ்ப்பாணத்தில் இருந்த புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திலீபன், தமிழ் நாட்டில் தங்கியிருந்த அன்ரன் பாலசிங்கத்தோடு தொலைத்தொடர்பு கருவி ஊடாகத் தொடர்பு கொண்டு பேசிக்கொண்டிருந்தார்.

தற்செயலாக அதை ஒட்டுக்கேட்கும் வாய்ப்பு எமது தொலைத்தொடர்புப் பிரிவினருக்குக் கிடைத்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்த புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திலீபன், பாலசிங்கத்தை நோக்கி, "அண்ணே!... பெங்களூர் பேச்சுவார்த்தைக்கு போறீங்களாம்!...." என்று கேட்டார்.

"ஓம்! ஓம்! போகின்றோம்" என்றார் அன்ரன் பாலசிங்கம்!...

"இங்கு மக்களுக்கு என்னத்தைச் சொல்லப்போறம்?...." என்று கேட்டார் திலீபன்!

"நாங்கள் நிபந்தனைகளோடுதான் போகின்றோம் என்று சொல்லும்" என அன்ரன் பாலசிங்கம் திலீபனுக்கு பதிலளித்தார்!

"அப்ப அண்ணே சிங்கள அரசாங்கம் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுவிட்டால்....." என்றார் திலீபன்!

"அரசாங்கம் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு விட்டால் புதிதாக இன்னொரு நிபந்தனையை விதிக்க வேண்டியதுதானே" என்று சிரித்துக் கொண்டு தொலைத் தொடர்புக் கருவியினூடாக பதிலளித்தார் அன்ரன் பாலசிங்கம்!

இந்த உரையாடல் அன்று சுவாரசியமாக இயக்கத் தலைமைகளிடையே பரவலாகப் பேசப்பட்டு வந்தது.

இன்று சமாதானத்தின் எதிரிகளாக, மக்களின் அரசியலுரிமைக்குத் தடைக்கல்லாகப் புலிகள் மாறியிருப்பதால் இது இன்று மக்களாகிய உங்களுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றது. இந்த உண்மையைப் பின்வந்த ஒவ்வொரு பேச்சுவார்த்தையின் போதும் புலிகள் நிரூபித்தனர்.

எம் இனிய மக்களே!

பெங்களூர் பேச்சுவார்த்தைக்கான காலகட்டம் என்பது வேறு!

இன்றைய காலகட்டம் என்பது வேறு!

ஆனாலும் புலித் தலைமையிடம் இன்றும் இருப்பது அதே மனோநிலைதான்!....

அதே வழிமுறைதான்!...

ஆகவேதான் பொதுக் கட்டமைப்பு என்ற நிபந்தனையை அரசு ஏற்றுக்கொண்டு அதை நிறைவேற்றிய பின்பு, அதை நடைமுறைப் படுத்துவதைக் கைவிட்டுவிட்டு, தாங்கள் ஆயுதங்களோடு நடமாட வேண்டும் என்ற புதிய நிபந்தனையைப் புலிகள் விதித்து வருகின்றார்கள்!

புலிகளின் இந்த மனோநிலைதான்.... இந்த வழிமுறைதான் மக்களாகிய உங்களது நிம்மதியான வாழ்வுக்கு.... நிரந்தரமான அமைதிக்குத் தடைக் கல்லாக இன்று வரை இருந்து வருகின்றது!

இந்த உண்மையை இன்றே உணர்ந்திடுங்கள்!

நாளை இதை விடத் தடைகள் அதிகமாகும்!...

மக்களின் நண்பர்கள் யார்?.... சமாதானத்தின் எதிரிகள் யார்?....

இவைகளை நீங்களே இனங்கண்டு கொள்ளுங்கள்!

மக்களின் பெயரால் நடக்கும் அக்கிரமங்களுக்கு....

மக்களின் பெயரால் முன்னெடுக்கப்படும் யுத்த முனைப்புகளுக்கு...

சமாதானத்தைச் சிதறடிக்கும் யுத்த வெறிக்கு....

மலர் தூவி, கல்லறைகள் எழுப்ப மக்களாகிய நீங்கள் இனியும் தயாரில்லையென்றால்... எமது தாயகத் தேசம் மனிதப் பிணங்களின் கல்லறைகளாக மாறுவது தவிர்க்கப்பட்டு விடும், தடுக்கப்பட்டு விடும்.

அதற்கு மக்களாகிய நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

மீண்டும் மறுமடலில் திட்டங்களோடு சந்திப்போம்!

*திட்டங்கள் எங்களது!..... தீர்மானம் உங்களது!.....*
*தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!...*
*என்றும் நாம் மக்களுக்காக!....*
*பிரியமுடன்*
*செயலாளர் நாயகம்*

**தோழர் டக்ளஸ் தேவானந்தா...**

**நன்றி :- இதயவீணை**

# உலகை வியக்க வைத்தவர்கள்

## பிளேட்டோ (கி.மு. 427 - கி.மு. 347)

பண்டையக் கிரேக்கத் தத்துவஞானியாகிய பிளேட்டோ, மேலைநாட்டு அரசியல் தத்துவமும், நமது அறிவியல் மற்றும் மெய்விளக்கியல் சிந்தனையும் எழுச்சி பெறுவதற்குத் தோற்றுவாயாக அமைந்தவர் ஆவார். இந்தத் துறைகளில் இவரது அனுமானங்கள் கடந்த 2300 ஆண்டுகளுக்கு மேலாகப் படிக்கப்பட்டு வருகின்றன ஆராயப்படுகின்றன. எனவே, மேலைநாட்டுச் சிந்தனையின் தந்தையர்களில் ஒருவராக இவர் போற்றப்படுகிறார்.

ஏதென்ஸ் நகரத்தின் புகழ் வாய்ந்த ஒரு குடும்பத்தில் கி.மு.427ஆம் ஆண்டுவாக்கில் பிளேட்டோ பிறந்தார். இவரது இளமைப் பருவத்தில் புகழ்பெற்ற தத்துவஞானியாக விளங்கிய சாக்கிரட்டீஸின் அறிமுகம் இவருக்குக் கிடைத்தது. சாக்கிரட்டீஸ் இவருடைய ஆருயிர் நண்பராகவும் வழிகாட்டியாகவும் ஆனார். கி.மு.399ஆம் ஆண்டில் சாக்கிரட்டீஸ் 70 வயதை எட்டியிருந்த போது, அவர் மீது சமயத்தை அவமதித்ததாகவும், ஏதென்ஸ் நகர் இளைஞர்களை ஒழுக்கங்கெடச் செய்ததாகவும் ஆதாரமற்ற குற்றங்கள் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டார். இந்த விசாரணை நாடகத்திற்குப் பின், சாக்கிரட்டீஸ் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டு, நஞ்சு கொடுத்துச் சாகடிக்கப்பட்டார். "நான் அறிந்த அனைவரிலும் மிகச் சிறந்த அறிவாளி சாக்கிரட்டீஸ். அவர் நேர்மை மிக்கவர். பொதுநலம் வாய்ந்தவர்" என்று பிளேட்டோ போற்றினார். அத்தகைய பெருமைக்குரிய சாக்கிரட்டீஸ் கொல்லப்பட்டது கண்டு பிளேட்டோவுக்கு மக்களாட்சி அரசின் மீது நீங்காத வெறுப்பு உண்டாயிற்று.

சாக்கிரட்டீஸ் இறந்த சில நாட்களிலேயே பிளேட்டோ ஏதென்ஸிலிருந்து வெளியேறினார். அடுத்த 10 அல்லது 12 ஆண்டுகளை அயல் நாடுகளில் பயணம் செய்வதில் கழித்தார். கி.மு.387 ஆம் ஆண்டில் மீண்டும் ஏதென்ஸ் திரும்பி, அங்கு "கலைக்கழகம்" (Academy) என்று அழைக்கப்படுகின்ற புகழ் பெற்ற பள்ளியை நிறுவினார். இந்தப் பள்ளி 900 ஆண்டுகளுக்கு மேலாகச் செயற்பட்டு வந்தது. பிளேட்டோ தமது வாழ்நாளில் கடைசி 40 ஆண்டுகளை ஏதென்ஸில் கழித்தார். அப்போது அவர் கல்வி கற்பித்தார். தத்துவம் பற்றி நூல்கள் எழுதினார். இவருடைய மாணவர்களில் மிக்க புகழ் பெற்றவர் அரிஸ்டாட்டில் ஆவார். பிளேட்டோ 60 வயதை எய்தியிருந்தபோது, அரிஸ்டாட்டில் தமது 17ஆம் வயதில் பிளேட்டோவிடம் கல்வி பயில்வதற்காக வந்தார். பிளேட்டோ கி.மு. 347ஆம் ஆண்டில் தமது 80ஆம் வயதில் காலமானார்.

பிளேட்டோ 36 நூல்கள் எழுதினார். அவை பெரும் பாலும் அரசியல், அறிவியல் பற்றியவை. மெய்விளக்கவியல், இறைமையியல் பற்றியும் அவர் எழுதியுள்ளார். இந் நூல்களைச் சில வாக்கியங்களில் சுருங்க உரைப்பது அத்தனை எளிதன்று. எனினும், அவருடைய சிந்தனையை அளவுக்கு மீறி எளிமைப்படுத்தும் அபாயம் இருந்தபோதிலும், பிளேட்டோவின் மிகப் புகழ் பெற்ற "குடியரசு" (The Republic) என்ற நூலில் கூறப்பட்டுள்ள முக்கியமான அரசியல் கொள்கைகளை இங்கு சுருக்கமாகக் கூற முயல்கிறேன். "உன்னதச் சமுதாயம்" பற்றிய பிளேட்டோவின் கோட்பாட்டினை இந்த நூல் விவரிக்கிறது.



பிளேட்டோவின் கருத்துப்படி, மிகச் சிறந்த அரசு முறை என்பது "உயர் குடியினர் ஆட்சியே" (Atistocracy) ஆகும். இவ்வாறு கூறுவதால், அவர் ஒரு பரம்பரை உயர் குடியினர் ஆட்சியையோ, ஒரு முடியாட்சியையோ ஆதரிக்கவில்லை. மாறாக, தலைமை வாய்ந்த ஓர் உயர் குடியினர் ஆட்சியை அதாவது, நாட்டில் உள்ளவர்களில் அறிவிலும், திறமையிலும் மிகச் சிறந்தவர்களால் நடத்தப்படும் ஆட்சியை அவர் விரும்பினார். இந்த ஆட்கள், குடி மக்கள் வாக்களிப்பதன் மூலம் தேர்ந்தெடுக்கப்படலாகாது. மாறாக, அமைப்பின் உறுப்பினர்கள் தங்களுக்குள் மனம் ஒத்துத் தேர்ந்தெடுக்கும் (Co-operation) ஒரு முறையின்படி அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். ஏற்கனவே ஆட்சி செலுத்துகின்ற உறுப்பினர்களாக அல்லது காப்பாளர் வர்க்கமாக (Guardian Class) இருக்கின்ற ஆட்கள் கூடுதலான ஆட்களை முற்றிலும் தகுதி அடிப்படையில் தங்களுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

காப்பாளர் வர்க்கத்தில் உறுப்பினர்களாக இருப்பதற்குத் தங்களுடைய தகுதியை மெய்ப்பித்துக் காட்டுவதற்கு எல்லா மக்களுக்கும் ஆண் - பெண் இருபாலாருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் எனப் பிளேட்டோ கருதினார். (ஆண்-பெண் இருபாலாருக்கும் அடிப்படைச் சமத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முதன்முதலில் கூறிய தத்துவஞானி. நீண்ட வரலாற்றில் இதை வலியுறுத்திய ஒரேயொரு மனிதர் பிளேட்டோ தான்) சமவாய்ப்பினைக் காப்புறுதி செய்வதற்காக, குழந்தைகள் அனைவரையும் அரசாங்கமே வளர்க்க வேண்டும் என்றும், அவர்களுக்கு அரசாங்கமே கல்வி புகட்ட வேண்டும் என்றும் பிளேட்டோ வலியுறுத்தினார். குழந்தைகளுக்கு முதலில் கண்டிப்பாக உடற்பயிற்சி அளிக்க வேண்டும். எனினும், இசை, கணிதம் போன்ற மற்றக் கல்விப் பாடங்களைப் புறக்கணிக்கலாகாது. பல்வேறு கட்டங்களில் விரிவான தேர்வுகள் நடத்தப்பட வேண்டும். இத் தேர்வுகளில் குறைந்த வெற்றி பெறுபவர்களுக்குச் சமுதாயத்தின் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொறுப்பு குறித்தளிக்கப்பட வேண்டும். நல்ல வெற்றி பெறுபவர்களுக்குத் தொடர்ந்து பயிற்சி அளிக்க வேண்டும்.

வியப்புக்கள் தொடரும்.....

# காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



> நான் சொல்வ தெல்லாம் பொய்.
> பொய்யைத் தவிர
> வேறொன்றுமில்லை
> *-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ....

நான் தனியாளா நிண்டு எதையாவது சொல்லேக்க அது கொஞ்சம் போரடிக்கும் எண்டிட்டு ஒரு சேஞ்சுக்காக எங்கட சூப்பர் ஸ்டாரை ஒரு இன்டர்வியூ எடுத்தால் எப்புடி இருக்குமெண்டிட்டு சந்திச்சனுங்கோ.

**கா.பூ.:** வணக்கம் சூப்பர் ஸ்டார் அவர்களே!

**சூ.ஸ்.:** வணக்கம் ஓல்ட்ஸ்டைல் நமஸ்தே.

**கா.பூ.:** சார், பாபாவோடை அவ்வளவுதான் எண்டு நினைச்சவைக்கு சந்திரமுகியில ஒரு காட்டுக் காட்டிட்டீங்க.

**சூ.ஸ்.:** (பெரிதாகச் சிரிக்கிறார்) நான் யானையல்ல, விழுந்து எழும்ப முடியாம இருக்கிறதுக்கு.... குதிரை.

**கா.பூ.:** ஓ கே சார். உங்க அடுத்த படம்?

**சூ.ஸ்.:** சூர்யமுகி.

**கா.பூ.:** சூர்யமுகியா? அது சரி... நீங்க எது சொன்னாலும் புதுமையாயிடுது. அது சரி சார்... ரிஷிகேஸ் போனீங்க. எப்புடி இருந்தது?

**சூ.ஸ்.:** அங்க நான் போறது இது முதல் தடவையில்ல. பன்னிரெண்டாவது தடவை.

**கா.பூ.:** இனி அடிக்கடி சினிமா வரும்னு செய்திகள் வருதே. அப்படின்னா அரசியல் பேச்சு என்னாச்சு? வருவீங்களா, வரமாட்டீங்களா?

**சூ.ஸ்.:** பொலிரிக்ஸ்ஸைப் பற்றி எதுவும் கேக்காதீங்க...அதுக்காக நான் பொலிரிக்ஸை வெறுக்கலை - வெறுக்கிறதுக்கு நான் என்ன உங்க நாட்டுப் பிரபாகரனா? (என்று முடியைக் கோதிவிட்டுச் சிரிக்கிறார்)

**கா.பூ.:** அட சிலோன் பத்தியும் பேசிறீங்களே....

**சூ.ஸ்.:** அதுதான் தெனமும் கொலை நடந்துக்கிட்டு இருக்கே...தெரியாதா என்ன?

**கா.பூ.:** சார், இப்ப யுத்த நிறுத்தக்காலம் சார்....

**சூ.ஸ்.:** ஆனாலும் கொலை செய்யுறாங்களே. அவுங்களுக்கு அந்த வித்தியாசம் தெரியலையா? இப்ப நான் தெரியாமத்தான் கேக்குறேன்.

இப்புடியே கொலை செய்துகிட்டுப் போனா என்னதான் முடிவு? அவங்களுக்கும் ஒரு மரணம் உண்டுண்ணு அவுங்க யோசிக்கவே மாட்டாங்களா? ஆண்டவா!

**கா.பூ.:** சார், இன்னொரு வாட்டி சொல்லுங்க.....

**சூ.ஸ்.:** நான் ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்ன மாதிரி....

**கா.பூ.:** சார்... எங்கட நாட்டில கொலைக்கு எதிரா யாரும் வாய் திறக்க மாட்டாங்க.

**சூ.ஸ்.:** தெரியும். அவுங்கெல்லாம் உயிருக்குப் பயத்தில இருக்காங்க. அதுக்காக அந்தப் பிழையெல்லாம் சரின்னு ஆயிடாது புரிஞ்சுதா.



**கா.பூ.:** சார் யோசிச்சுத்தான் சொல்லுறீங்களா?

**சூ.ஸ்.:** கண்ணா... நா.... யோசிக்காம சொல்லமாட்டன்... சொல்லிட்டு யொசிக்கமாட்டன்.... ஹா.... ஹா....

**கா.பூ.:** அதுமட்டுமா சார், வரி, கப்பம்னு மக்களிட்ட இருந்து பணம் பறிப்பு நடக்குதெண்டும் உங்களுக்குத் தெரியுமா?

**சூ.ஸ்.:** பணம்.... பணம்.... இதைப் பாதுகாக்கிறதிலேயே பாதி வாழ்க்கை போயிடுது. ஏழைங்க பணம் நிலைக்காது. அதுதான் பணத்துக்காக அலையிறாங்க....

**கா.பூ.:** இதுக்கெல்லாம் ஒரு முடிவே தெரியிற மாதிரி தெரியலையே.

**சூ.ஸ்.:** முடிவு வரும். அவுங்களை இந்தக் கொலை, கொள்ளை எல்லாத்தையும் கைவிட்டுட்டு, என்னோடை ரிஷிகேஸ் வரச் சொல்லுங்க. அங்க எல்லாம் சரியாயிடும்.

**கா.பூ.:** ரிஷிகேஸுக்கா? அவர் வெயில் படுற மாதிரி வெளியிலேயே வர்றது இல்லையே சார்.

**சூ.ஸ்.:** (கை தட்டி சிரிக்கிறார்) பாத்தீங்களா... அதுதான் மக்களுக்குச் செய்த பாவம். அது மட்டுமா? செய்த கொலைகளுக்கெல்லாம் இருட்டு அறைக்குள்ள அனுபவிக்கிறார்.

**கா.பூ.:** சார். அப்பிடிச் சொல்லாதீங்க. அதையெல்லாம் அவர் தமிழ் மக்களின் விடுதலைக்காக எண்டிறார்.

**சூ.ஸ்.:** பொய். எல்லாம் பொய். எந்த மக்களோடை அவரால சுதந்திரமா இருக்கவோ, பழகவோ முடியல்லையோ. அப்பவே அவர் சொல்லுறது பொய் எண்டாயிடுச்சு. இந்த உண்மையை நீங்க புரிஞ்சுகொள்ளுவீங்க....

**கா.பூ.:** சரி சார்... இதை விட ஏடா கூடமா எதையாவது பேச வேணாம்... அப்புறம் நான் எயர் போர்ட்டாலை போக முடியாது. யாராவது மோட்டார் சைக்கிள்ல வந்து சுட்டுப்போட்டு, இனந் தெரியாதவையாயிடுவினம். பிளீஸ்... ஆளை விடுங்கோ....

**சூ.ஸ்.:** இங்க பாருங்க கா.பூ. பயம் இருக்கணும். வாழ்க்கையே பயமா இருக்கக்கூடாது. புரியுதா?

**கா.பூ.:** சார், அந்த சந்திரமுகி பஞ்ச்.

**சூ.ஸ்.:** ஓ அதுவா.... பண்ணிட்டால் போச்சு.... லக்க லக்க லக்க லக்க....

**யாவும் கலப்படமற்ற கற்பனை**


# இந்த வாரம் உங்கள் பலன்

(14.07.2005 தொடங்கி 20.07.2005 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

மிதுனம் - சூரியன், கர்க்கடகம் - புதன், சனி, வெள்ளி, கன்னி - வியாழன், கேது, மீனம் - செவ்வாய், இராகு.
சந்திரன் கன்னி, துலாம், விருச்சிகம், தனு இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.



**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நிலை மேன்மை, பலவிதப்பேறு, அந்நியர் நட்பு, பணவிரயம், குடும்பப்பேறு, பிள்ளைகளால் நன்மை, உத்தியோக உயர்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர்கல்வி நாட்டம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**




**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் அலைச்சல், வீண் துயர், உறவினர் உபத்திரவம், குடும்பக் கவலை, பணத் தட்டுப்பாடு, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர்கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**




**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் நிலை நன்மை, காரியானுகூலம், இடம் பெயர்வு, வெளியிட வாழ்க்கை, மனக்கலக்கம், குடும்பக் கஷ்டம், உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**



**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் மந்தம், செலவு மிகுதி, வீண் தொல்லை. உறவினர் நன்மை. தூர இடப் பயணம், குடும்ப வெறுப்பு, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**



**சிங்கம் :**
(மகம், பூரம், உத்திரத்து முதற் கால்.)
தொழில் நன்மை, பலவிதப் பேறு, காரியச் சித்தி, பிரயாணமிகுதி, உயர்ந்த எண்ணம், மனக்குறை நீங்கும், குடும்பப் பாரம், உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி கஷ்டம், பரீட்சையில் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**




**கன்னி :**
(உத்திரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் கலக்கம், பணவிரயம், அந்நியரால் தொல்லை, தூர இடப் பயணம், குடும்பக் கலகம், மனக்கலக்கம், உத்தியோக முயற்சி, பெரியோர் உதவி, உத்தியோக நன்மை, மாணவர் கல்வி மந்தம், முயற்சியின்மை, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**




**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் குழப்பம், பல்சாரார் பகை, மனத்துயர், பிரயாண மிகுதி, தேகசுகக் கஷ்டம், குடும்பப் பொறுப்பு, உத்தியோக மேன்மை, மேல்திகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**




**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.)
தொழில் நன்மை, காரியானுகூலம், வெளியிட வாழ்க்கை, மனக்கலக்கம், பெரியோர் சகாயம், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக மாற்றம், மாணவர் கல்வி மேன்மை, புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 06.**




**தனு :**
(மூலம், பூராடம், உத்திராடத்து முதற் கால்.)
தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை, பணவரவு, அந்நியர் நட்பு, முயற்சி பலிதம், குடும்ப மேன்மை, பிள்ளைகள் தொல்லை, உத்தியோகக் கலகம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர்க் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**



**மகரம் :**
(உத்திராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் அலைச்சல், செலவு மிகுதி, வீண்துயர், இனசனமேன்மை, பலவிதப்பேறு, குடும்பப் பொறுப்பு, உத்தியோக முயற்சி, மாணவர்கல்வி, சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**



**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் நன்மை, பலவிதப்பேறு, பெரியோர் சகாயம், குடும்ப மகிழ்ச்சி, வீண்விரயம், உத்தியோக பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர்கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**



**மீனம் :**
(பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் நன்மை, பணவரவு, புதிய முயற்சி, பெரியோர் உதவி, குடும்பக் கஷ்டம், பலவிதச் செலவு, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர்கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


# இதய வீணை

தினமும்
மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்.... செய்திகளாய்... நமது காதுகளில்

கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6


நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல – 1665
கொழும்பு.
தொலை பேசி :– 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Localization : | 13° East |
| Frequency : | 11013 MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |


## அழகு ஆபத்து



பாம்பு என்றாலே படையே நடுங்கும் என்பார்கள். ஆனால், இந்தப் பாம்புக் குட்டிகள் பற்றித் தெரிந்துகொள்ள வியப்பான பல விடயங்கள் இருக்கின்றன. படத்தில் காணப்படும் வெண் நாகப் பாம்புக் குட்டிகள், கொழும்பு தெகிவளையில் உள்ள மிருகக்காட்சிச் சாலையில் இருக்கின்றன. வெள்ளை நாகப் பாம்பு ஒன்று கடந்த ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி 21 முட்டைகளை இட்டு அடைகாத்து வந்தது. ஜூன் 16ஆம் திகதி இம் முட்டைகளிலிருந்து 12 பாம்புக் குட்டிகள் மட்டுமே வெளிப்பட்டன. இனி இவ் வெள்ளைப் பாம்புக் குட்டிகள் குறித்த விரிவான விபரங்களைப் தகவல் பெட்டிப் பக்கத்தில் பார்ப்போம்.

## அச்சச்சோ

100 வயது வரை வாழ்ந்த பல ஆட்களைப் பற்றியெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள். பல ஆண்டு காலம் வாழ்ந்த பூச்சி இனத்தைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இதோ படத்தில் உள்ள பூச்சியார் கரப்பான் பூச்சி வகையைச் சேர்ந்தவர். இது ஒரு உக்கிய




மரக்கட்டையில் 47 வருடங்கள் உயிர் வாழ்ந்துள்ளதாம். தற்செயலாக அந்த மரக்கட்டையை கவனித்த இங்கிலாந்து உயிரியல் பல்கலைக்கழக மாணவர்கள் அதனைச் சோதித்துப் பார்த்த போது அதன் உள்ளே அந்த பூச்சி உயிருடன் இருந்ததாம். வயது முதிர்ந்த தோற்றம் படத்தில் தெரிகிறதா? பாருங்கள்.

## தடைக்காக



இது ஒரு போராட்டம் ஏனென்றால் ஒரு திரைப்படத்திற்கு எதிரானது. அத் திரைப்படத்திற்கு வைக்கப்பட்ட பெயர் தான் இதற்கு காரணம் 'ஜோ போலி ஸோ நிகால்'' என்பது தான் அதன் பெயர். இது சீக்கியர்கள் பின்பற்றும் மார்க்கத்தின் புனித வாக்கியமாகும். கொதித்தெழுந்து விட்ட சீக்கியர்கள் இத் திரைப்படத்தை தடை செய்யக் கோரி பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அது மட்டுமல்ல, திரைப்படத்தின் தயாரிப்பாளர் புனித பொற்கோவிலில் பக்தர்களின் பாதணிகளைச் சுத்தம் செய்ய வேண்டும் என்றும் தான் இந்தப் போராட்டமாம். மத மார்க்கத்திற்கு காட்டும் ஆர்வம் தனி மனித சுதந்திரத்திற்கு காட்டினால் எவ்வளவு நன்றாயிருக்கும்?



## பொன் வண்டு

இதுவும் ஒரு பூச்சி இனத்தை பற்றிய செய்தியாகும் உலகில் 85 வீதத்திற்கும் அதிகமான இடத்தை பிடித்துள்ளது இப்பூச்சி இனமாகும். அந்த வகையில் இங்கிருக்கும் பூச்சி அனைவருக்கும் தெரிந்திருக்கும். 'த மம்மி' படத்தில் வந்த பூச்சி இனமே இது. இது தமிழில் பொன் வண்டு என்று இளவட்டங்களினால் அழைக்கப்படுகிறது. இப்பூச்சி மணிக்கு 5.4 கி.மீ வேகத்தில் செல்லக்கூடியதாம். இதுவே பூச்சி இனத்தில் உயரிய வேகம் என்றும் கணிப்பிடப்பட்டுள்ளது. பூச்சியினமும் இன்று வேகமாகச் சென்று வரத் தொடங்கிவிட்டனவா?



## கண்ணைக் கண்டுபிடி

உலகில் மிகவும் அரிதான அருகி வரும் மெஷான் பன்றி இனமே இதுவாகும். விலை உயர்ந்த ஷர்ப்பி இன நாய்களைப் போல தோல் மடிப்பாக இருக்கும். கண், காது, மூக்கு எங்கே எனக் கண்டு பிடிக்க முடியாது கைகளினால் பிடித்தால் வழுக்கிக் கொண்டு போய்விடும் சாதாரணமாக அதிக பிள்ளைகளைப் பெற்றால் பன்றிபோல பெற்றுத்தள்ளுதல் என்பார்கள். ஆனால், மெஷான் இன பன்றியில் இவ்விடயம் பொய்த்துப் போய்விட்டது. மரபுரிமை மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட மிதமிஞ்சிய கொழுப்பும், முதிர்ச்சியடையாத கரு முட்டையுமே இதன் அழிவிற்குக் காரணம் என்பது தற்போது அறியப்பட்டுள்ளது. இப் பன்றிகளை இனப்பெருக்கம் செய்ய வைப்பதற்கு வட கரோலினா மாநிலத்து உயிரியல் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பெரும் பாடு பட்டு வருகிறார்கள். அமெரிக்காவில் பன்றியை கூட அழிய வீடுகிறார்கள் இல்லைப் பாருங்கள்.

இதுவொரு அதிசயிக்கத்தக்க புகைப்படம். கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள ஒரு நீச்சல் தடாகத்தில் தான் இப்புகைப்படம் சுடப்பட்டது. நீச்சல் போட்டி ஒன்றில் விசில் ஊதியதும் அனைத்து போட்டியாளர்களும் ஒரே தடவையில் நீருக்குள் குதிக்கும் போது எவ்வளவு அழகாய் இருக்கிறது பாருங்கள். இதைப்பார்க்கும் போது டொல்பின்கள் குதிப்பது போல் உள்ளதல்லவா?

## தண்ணீரிலே

